THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

விலை : ரூபா 25
பக்கங்கள் 28
ஏப்ரல் 22 - ஏப்ரல் 28 , 2012
April 22 - April 28, 2012



3 தோல்வி ?

களை கட்டாத புத்தாண்டு

## கண்ணைக்கெடுக்கும் சூரியநமஸ்காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிக்கத் தவறும் நட்சத்திரங்களும் வீணாகும் கோடிகளும்

5வது ஐபிஎல் தொடர் ஆரம்பித்து பல நாட்களாகி விட்ட நிலையில், 21 போட்டிகள் முடிந்துள்ள நிலையில் பல பிரபலமான வீரர்கள், ஏகப்பட்ட பணம் கொடுத்து விலைக்கு வாங்கப்பட்ட வீராதி வீரர்கள் இன்னும் பட்டையைக் கிளப்பாமல், பியூஸ் போன பல்பு போல உள்ளனர். இதனால் அவர்களை வாங்கிய அணிகள் கவலையுடன் சேபையிழந்துள்ளன.

இவர்களில் முக்கியமானவர் விராத் கோஹ்லி. இந்திய கிரிக்கெட் அணியின் துணைக் கேப்டனான விராத் கோஹ்லி, ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக ஆடி வருபவர். இவரது விலை 18 லட்சம் டொலராகும். இந்திய மதிப்பில், 9 கோடியே 26 லட்சத்து 59 ஆயிரத்து 140 ரூபாயாகும்.

இதுவரை 5 போட்டிகளில் ஆடியுள்ளார். விக்கெட் எதையும் வீழ்த்தவில்லை. வெறும் 107 ரன்களை மட்டுமே குவித்துள்ளார்.

அடுத்து டேவிட் ஹஸ்ஸி. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் வீரரான ஹஸ்ஸி மீதான எதிர்பார்ப்பும் பொய்த்துள்ளது. 4 போட்டிகளில் ஆடியுள்ள இவர் 63 ரன்களை மட்டுமே எடுத்துள்ளார். விக்கெட் எதையும் வீழ்த்தவில்லை. இவரது விலை கிட்டத்தட்ட ஏழேகால் கோடி ரூபாயாகும்.

மும்பை இந்தியன்ஸ் கேப்டன் ஹர்பஜன் சிங்கும் ஏமாற்றி வருகிறார். கிட்டத்தட்ட ஆறே முக்கால் கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்ட ஹர்பஜன் சிங்கிடம், சச்சின் டெண்டுல்கர் தனது கேப்டன் பதவியை ஒப்படைத்தார். ஹர்பஜன் சிங் கேப்டனாக இருக்கும்போதெல்லாம் மும்பை இந்தியன்ஸ் சிறப்பாகவே ஆடி வந்துள்ளது என்பதால் அவர் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகவே உள்ளது. ஆனால் இம்முறை அதில் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இதுவரை 5 போட்டிகளில் ஆடி ஒரு விக்கெட் மட்டுமே வீழ்த்தியுள்ளார் ஹர்பஜன் சிங். ரன்களைப் பொறுத்தவரை 77 ரன்களை எடுத்துள்ளார். உள்ளூர் மைதானங்களிலேயே இவரால் விக்கெட்டை வீழ்த்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் இந்திய அணியில் எப்படி இவருக்கு இடம் கிடைக்கும் என்ற பெரும் கேள்வி எழுந்துள்ளது.

அதேபோலத்தான் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சுரேஷ் ரெய்னா நிலையும். கடந்த நான்கு தொடர்களிலும் 400 ரன்களுக்கு மேல் குவித்த ஒரே வீரர் இவர்தான். ஆனால் இம்முறை தடவிக் கொண்டிருக்கிறார். இதுவரை ஆடிய 5 போட்டிகளில் மொத்தமே 112 ரன்கள்தான் எடுத்துள்ளார். விக்கெட் வீழ்த்தியது 2 மட்டுமே.

பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திய இன்னொரு பெரும் வீரர் யூசுப் பதான். கடந்த 2011இல் இவரை 10 கோடிக்கு எடுத்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி. அந்தத் தொடரில் சிறப்பாக ஆடினார் பதான். ஆனால் இம்முறை பெரும் ஏமாற்றத்தையே கொடுத்து வருகிறார். இதுவரை 5 போட்டிகளில் ஆடி 23 ரன்களையும், ஒரு விக்கெட்டையும் மட்டுமே வீழ்த்தியுள்ளார். இந்தத் தொடரின் மிகப் பெரிய தோல்வி வீரர்களில் யூசுப் பதானும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல முரளி விஜய், கங்குலி ஆகியோரும் துடுப்பாட்டத்தில் ஜொலிக்கத் தவறி வருகின்றனர். வளரும் வீரரான முரளி விஜய், கடந்த போட்டிகளில் கலக்கியவர் என்பது நினைவிருக்கலாம். சென்னை சூப்பர் கிங்ஸ் சாம்பியன் பட்டம் வென்றபோதெல்லாம் அதில் முக்கியப் புள்ளியாக திகழ்ந்தவர் முரளி விஜய். ஆனால் இந்த முறை அவரது சொதப்பல் பொறுக்க முடியாத அளவுக்கு கடுமையாக உள்ளதால் ரசிகர்கள் பெரும் அதிருப்தியுடன் உள்ளனர்.



ஜார்க்கண்ட் மாநிலத்தில் நடைபெற உள்ள மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தலில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனியை தமது கட்சியின் வேட்பாளராக நிறுத்துவது குறித்து ஜார்க்கண்ட் விகாஷ் மோர்ச்சா அமைப்பு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது.

முன்னாள் முதல்வர் பாபுலால் மராண்டி தலைமையிலான ஜார்க்கண்ட் விகாஷ் மோர்ச்சா தமது மாநிலங்களவை எம்.பி. வேட்பாளர்கள் குறித்து ஆலோசனை நடத்தியது. இதில் டோனியை நிறுத்துவதற்கு பலரும் ஆமோதித்து ஆதரவு வழங்கினர்.

## விளையாட்டுத் துளிகள்...

★ ஐ.பி.எல். போட்டிகளில் யார் வெற்றி பெறுவார்கள் என்று இந்தியாவின் பெரும்பகுதிகளில் சூதாட்டம் (பந்தயம்) நடைபெற்று வருகிறது. இதுவரை சூதாட்டத்தில் ஈடுபட்ட 7 பேரை ஜாம்ஷெட்பூரில் பொலிஸார் கைது செய்தனர்.

★ ஐ.பி.எல்.-5வது தொடரில் புனேவாரியர்ஸ் அணிக்காக விளையாடிவரும் சாமுவேல்சின் பந்துவீச்சு சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது. இதையடுத்து சாமுவேல்சின் பந்துவீச்சு முறையை ஐ.பி.எல். நிர்வாகம் ஆராய்ந்து வருகிறது.

★ அணியின் மூத்த வீரர்கள் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தால் வேறுவழியின்றி தலைகீழான மாற்றங்களைக் கொண்டுவர வெண்டிய நிலைமை ஏற்படும் என்றும் பொங்கியெழுந்திருக்கிறார் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவர் கவுதம் கம்பீர்.


★ ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் ஆரம்ப வீரர் ரஹானே அதிரடியாக ஆடி ஐபிஎல் 5 தொடரில் முதல் சதமடித்து சாதனை படைத்தார். ஆட்டமிழக்காமல் 60 பந்துகளை சந்தித்த ரஹானே 5 சிக்ஸ், 12 103 ஓட்டங்களைக் குவித்தார்.

★ வங்கதேச அணி பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகிய ஸ்டூவர்ட் லா, ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரிய அக்டமியின் தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

★ விஸ்டன் இதழால் கடந்த ஆண்டின் சிறந்த வீரராகத் செய்யப்பட்டுள்ள இலங்கை அணி அனுபவ வீரர் குமார் சங்கக்கராவுக்கு (34), கிரிக்கெட் வாரியம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

★ ஆஸ்திரேலிய அணி முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வார்ன் , நடிகை எலிசபத் ஹர்லி திருமணம் அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்தில் நடைபெறும் என தகவல் வெளியாகி உள்ளது.

★ ஒலிம்பிக் போட்டியில் விளையாட உள்ள பாகிஸ்தான் ஹாக்கி அணி, லண்டனில் சிறப்பு பயிற்சி முகாமில் பங்கேற்க திட்டமிட்டுள்ளது. அங்குள்ள கன்னாக் ஹாக்கி கிளப் மைதானத்தில் இந்த முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஐரோப்பியாவில் உள்ள மிகச் சிறந்த ஹாக்கி மைதானங்களில் கன்னாக் கிளப் முதன்மையானது என்பது குறிப்பிடத்தக்கது.



# சிக்சர் மழையால் நனைந்தது மைதானம்

## கெயிலின் வாண வேடிக்கையால் பெங்களூர் அணி புத்துயிர்

றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் கிறிஸ் கெய்ல் நேற்று புனே வாரியர்ஸ் அணிக்கு எதிராகக் காட்டிய வாண வேடிக்கையில், கொட்டிச் சிதறின சாதனைகள் பல. ஏற்கனவே பல சாதனைகளுக்குச் சொந்தக்காரரான கெய்லுக்கு மேலும் பல புதிய சாதனைகள் வந்து சேர்ந்தன.

ஐபிஎல்லின் 21 ஆவது போட்டியான இதில், மொத்தம் 21 சிக்ஸர்கள் விளாசப்பட்டன. கடைசி ஓவரில் தேவைப்பட்ட 21 ரன்களையும் பெங்களூர் றோயல் சேலஞ்சர்ஸ் அணி அபாரமாக அடித்து நொறுக்கி ஆச்சரியப்படுத்தியது.

முதலில் ஆடிய புனே வாரியர்ஸ் 182 ரன்களுக்கு தனது ஆட்டத்தை முடிக்க அடுத்து களம் இறங்கியது பெங்களூர் அணி. தொடக்க ஆட்டக்காரர்களாக தில்ஷனும், கெய்லும் களமிறங்கினர். தில்ஷன் விரைவில் ஆட்டமிழக்க கெய்ல் வெளுத்து வாங்க ஆரம்பித்தார்.

அவரை நோக்கி வந்த பந்துகள் எல்லைக்கோட்டுக்கு மேலாகவும் கீழாகவும் சீறிப் பாய்ந்தன. இதில் 12 பவுண்டரிகளும் ஒட்டங்களும் அட்டகாசமான 8 சிக்சர்களும் அடங்கும். இந்தப் போட்டியில் அதிரடி ஆட்டத்தின் மூலம் கெய்ல் பல சாதனைகளைப் படைத்தார்.

ராகுல் சர்மாவின் ஒரு ஓவரில் அடுத்தடுத்து 5 சிக்சர்களை விளாசி மைதானத்தை நடுநடுங்க வைத்தார் கெய்ல். இது ஒரு புதிய ஐபிஎல் சாதனையாகும். இதற்கு முன் யாரும் இப்படிப் போட்டுத் தாக்கியதில்லை.

கெய்ல் சிக்ஸர் மழை பொழிவது இது முதல் முறையல்ல. அவர் எப்போதுமே இப்படித்தான். இதுவரை ஐபிஎல் போட்டிகளில் 85 சிக்ஸர்களைப் போட்டுள்ளார் கெய்ல். இந்த வகையில் அவரே இதில் முதலிடத்தில் இருக்கிறார்.

இந்தப் போட்டியில் ஒரே ஓவரில் அவர் 31 ரன்களைக் குவித்து அசத்தினார். இதற்கு முன்பும் இரண்டு தடவை இப்படி ஒரே ஓவரில் 30 ரன்களைத் தாண்டியுள்ளார். கடந்த ஆண்டு கொச்சிக்கு எதிராக நடந்த போட்டியில் பிரஷாந்த் பரமேஸ்வரின் ஓவரில் 37 ரன்களை விளாசி உச்சகட்ட சாதனையைப் படைத்தார். மேலும் 2010 ஐபிஎல் தொடரில் ரவி போபராவின் ஓவரில் 33 ரன்களைச் சாத்தினார்.

அது மட்டுமல்லாமல் ஐந்தாவது ஐபிஎல் தொடரிலேயே மிகப் பெரிய சிக்ஸரையும் கெய்ல்தான் நேற்று போட்டார். அவர் அடித்த ஒரு சிக்ஸரின் தொலைவு 106 மீற்றராகும். அடுத்தடுத்து ஐந்து சிக்ஸர்களை அவர் விளாசியபோது ஒரு பந்து பார்வையாளர் வரிசையில் படு வேகமாகப் பாய்ந்து சென்று ரசிகர் ஒருவரை காயப்படுத்தி விட்டது.

கெய்ல் மட்டுமல்லாது பெங்களூர் அணியின் சௌரவ் திவாரியும் கடைசி பந்தில் ஒரு சிக்ஸர் அடித்து அணியை வெற்றிக்குக் கொண்டு சென்று அசத்தினார்.

பெங்களூர் அணிக்கு கடைசி ஓவரில் வெற்றிக்கு 21 ரன்கள் தேவைப்பட்டன. இதையடுத்து அதிரடியாக ஆடிய திவாரியும், டிவில்லியர்ஸும் வந்த பந்துகளையெல்லாம் பின்னி எடுத்தனர். கடைசி ஓவரில் மட்டும் 3 சிக்ஸர்கள் விளாசப்பட்டு மொத்தம் 24 ரன்கள் குவிக்கப்பட்டன.

டிவில்லியர்ஸ் கடைசி ஓவரின்போது 2 சிக்ஸர்களையும், ஒரு பவுண்டரியையும் விளாசினார். திவாரி கடைசிப் பந்தில் சிக்ஸர் அடித்தார்.

இந்தப் போட்டியில் எங்கு பார்த்தாலும் சிக்ஸ்ஸர்தான். மொத்தமாக இரு அணிகளும் சேர்ந்து 21 சிக்ஸர்களை விளாசினர். ஐபிஎல் வரலாற்றில் அதிக சிக்ஸர்கள் ஒரே போட்டியில் விளாசப்படுவது இது 2வது முறையாகும். சாதனை அளவாக 23 சிக்ஸர்கள் உள்ளன. அதை வைத்திருப்பது சென்னை சூப்பூர் கிங்ஸ் - பெங்களூர் இடையே சமீபத்தில் சென்னையில் நடந்த போட்டியாகும்.

ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியினர் இப்போட்டியில் 14 சிக்ஸர்களை விளாசினர். புனே வாரியர்ஸின் பங்கு 9 ஆகும்.

தொடர்ந்து 3 தோல்விகளைச் சந்தித் தொங்கிப் போயிருந்த பெங்களூர் அணிக்கு இந்த வெற்றி புத்துயிர் அளிப்பதாக அமையும் என்கிறார்கள் கிரிக்கெட் ரசிகர்கள்.

**இப்போட்டியில் கெயிலின் சாதனைகள்**

★ ஐந்தாவது ஐபிஎல் தொடரிலேயே மிகப் பெரிய சிக்ஸருக்கு சொந்தக்காரர். *(106 மீற்றர்)*
★ இதுவரை ஐபிஎல் போட்டிகளில் 85 சிக்ஸர்களைப் போட்டு முதலிடத்திலுள்ளார்.
★ ஒரே ஓவரில் 31 ரன்களைக் (5 சிக்சர்கள் உட்பட) குவித்து அசத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> கடந்த காலங்களில் ஜே.வி.பி. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற கோசத்தை உரக்கக் கூவியவாறு மெற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கைகளும் ஏகாதிபத்தியங்கள் தமது மேலாதிக்கத்தை இலங்கையில் நிலை நாட்டவே உதவியுள்ளன என்பது வரலாறு.

# கண்ணைக் கெடுக்கும் சூரிய நமஸ்காரம்

சூரிய நமஸ்காரம் என்பது இந்து சமய வழிபாட்டு முறைகளில் முக்கியமான ஒன்றாகும். அதிகாலையில் நீராடி சூரியன் உதித்துக் கொண்டிருக்கும் அந்தப் பொழுதில் நீர் நிலைக் கரையில் நின்று மலர் தூவி ஆதவனை வழிபடும் இவ்வணக்க முறையை சந்தியா வந்தனம் எனப் பெரியோர்கள் கூறுவதுண்டு. இது ஒரு வணக்கமுறை மட்டுமின்றி உடலுக்கும், மனதுக்கும் ஆரோக்கியம் அளிக்கக் கூடிய ஒரு தியானமும் கூட.

இந்துக்கள் மட்டுமின்றி ஜப்பானிய மக்களும் சூரிய வழிபாட்டைப் பின்பற்றி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞான பூர்வமாகவும் இச்சூரிய வழிபாடு உடலுக்கும் உள்ளத்துக்கும் மிகவும் பயனுள்ளது எனக் கூறப்படுகிறது. அதிகாலைச் சூரிய ஒளியில் விற்றமின் ஏ சத்து கலந்திருப்பதால் அது எமது உடலில் சேர்ந்து சிறந்த கண்பார்வைக்கும் உடல் நலத்துக்கும் உதவுகிறது.

தமிழில் கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா? என்று ஒரு பழமொழி உண்டு. கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு பின்பு அதைப் பெறமுயலும் பயனற்ற நடவடிக்கையை இப்படிச் சொல்வதுண்டு. கண்கள் இல்லாத நிலையில் எப்படி ஆதவனைப் பார்க்க முடியும்? எப்படிச் சூரிய ஒளியைக் கண்களால் உள்வாங்க முடியும்?.

அதேவேளையில் முழுமையான சூரிய கிரகணம் இடம்பெறும் போது சூரிய வணக்கம் செய்ய முயன்றால் கண்களைக் கெடுத்துக் கொள்வதை விட வேறு எந்தப்பலனையும் பெற்று விட முடியாது.

சில அரசியல்வாதிகள் கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுண்டு. இன்னும் சிலரோ சூரிய நமஸ்காரம் செய்வதாகச் சொல்லிக் கொண்டு கிரகண நேரத்தில் சூரியனைப் பார்த்து கண்களைக் கெடுத்துக் கொள்பவர்கள் போல் நடந்து கொள்வதும் உண்டு.

இப்படிக் கண்களைக் கெடுப்போர் பட்டியலில் ஜே.வி.பியும் இப்போது தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. அதாவது அவர்கள் நாட்டுப்பற்றாளர்களை ஒன்று திரட்டி ஒரு வலுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி ஒன்றை உருவாக்கப் போகிறார்களாம்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற வார்த்தை இன்று பலராலும் பலவித நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தேச விரோதிகள் கூட, அதாவது தேசத்தைத் துண்டு துண்டாக ஏகாதிபத்தியங்களுக்குக் கூறு போட்டு விற்றுக் கொண்டிருப்பவர்கள் கூட தம்மைத் தேச பக்தர்களாகக் காட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் முன்பு ஒரு நாடு அரசியல், பொருளாதார ரீதியில் வேறு நாடுகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்து அந்நாட்டின் மூல வளங்களையும், மனித உழைப்பையும் கொள்ளையடிக்குமானால் அது ஏகாதிபத்தியம் என அழைக்கப்பட்டது. ஆனால் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு பெரும்பான்மையான நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டன. எனினும் பல வல்லரசு நாடுகள் தமது பொருளாதார மேலாதிக்கம் காரணமாக வறிய நாடுகளைத் தமது பொருளாதாரக் கட்டுபாடுகளுக்குள் அமுக்கி அந்நாடுகளின் மூல வளங்களையும் மனித உழைப்பையும் சுரண்டி வருகின்றன, அத்துடன் அவை அந்த நாடுகளைத் தமது உற்பத்திப் பண்டங்களின் சந்தையாகவும் பயன்படுத்துகின்றன. இன்று இவையே ஏகாதிபத்தியங்கள் என அழைக்கப்படுகின்றன.

அவ்வகையில் ஒருபுறம் அமெரிக்க தலைமையிலான மேற்கு நாடுகளும் மறுபுறம் சீனா, ரஷ்யா ஆகிய முன்னாள் பொதுவுடமை நாடுகளும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சுரண்டிக் கெடுக்கும் ஏகாதிபத்தியங்களாக விளங்கி வருகின்றன.

இவற்றில் எந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஜே.வி.பி.போர்க்கொடி தூக்கப் போகிறது என்பதே முதலாவது கேள்வியாகும்.

கடந்த காலங்களில் ஜே.வி.பி.ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற கோசத்தை உரக்கக் கூவியவாறு மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கைகளும் ஏகாதிபத்தியங்கள் தமது மேலாதிக்கத்தை இலங்கையில் நிலை நாட்டவே உதவியுள்ளன என்பது வரலாறு.

1971ல் ஜே.வி.பி.யினர் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்கு எதிராக ஒரு புரட்சியை மேற்கொண்டனர். அது தோல்வியில் முடிந்ததுடன் இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள வாலிபர்களும் பலி கொள்ளப்பட்டனர்.

1956, 1960, 1970 ஆகிய ஆண்டுகளில் ஆட்சிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கங்கள் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையிலும் சிறீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலும் வலுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆட்சிகளாக விளங்கின. திருமலை, பிரிட்டிஷ், கடற்படைத்தளம், கட்டுநாயக்க பிரிட்டிஷ் விமானப் படைத்தளம் என்பவற்றை வெளியேற்றியமை, அமெரிக்க எண்ணெய் விநியோக நிறுவனங்களைத் தேசிய மயமாக்கியமை, தேயிலைத் தோட்டங்களை தேசிய மயமாக்கியமை என வலு மிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன.

ஜே.வி.பி.உண்மையாகவே ஏகாதிபத்திய நோக்கம் கொண்டதாக இருந்திருந்தால் அந்த ஆட்சிக்கு ஆதரவு வழங்கி அதை மேலும் துரிதமாக ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்கம் கொடுத்திருக்கவேண்டும். ஆனால், ஜே.வி.பி. அதற்கு நேர்மாறாக அந்த ஆட்சியைக் கவிழ்க்கும் வகையில் ஒரு பெரும் புரட்சியை மேற்கொண்டது. அப்புரட்சி மூலம் ஆட்சியைக் கவிழ்க்க முடியவில்லை என்ற போதிலும், அப்புரட்சியை அடக்க சிறீமாவோ பண்டாரநாயக்கா மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளும், இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் தெருத் தெருவாகக் கொல்லப்பட்டதும் அடுத்த தேர்தலில் அவரைப் படுதோல்வியடைய வைத்தது. அதன் காரணமாக முற்று முழுதான ஏகாதிபத்தியங்களின் கையாளான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆட்சிக்கு வந்தார். சுயசார்புப் பொருளாதாரத்தை நோக்கி வேகமாக முன்னேறிய இலங்கை ஏகாதிபத்தியங்களின் சுதந்திரமான வேட்டைக்காடாக மாறியது.

அதாவது ஜே.வி.பி.யின் 1971ம் ஆண்டுப் புரட்சி ஏகாதிபத்தியத்திற்குச் சாதகமான ஒரு நிலைமையையே உருவாக்கியது. அதற்குப் பரிசாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி.யினரை விடுதலை செய்துதான் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

அடுத்த புரட்சி 1988 - 1989 காலப்பகுதியில் ஆர். பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது மேற்கொள்ளப்பட்டது. அது இலங்கை இந்திய ஒப்பந்தின் அடிப்படையில் இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலை கொண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு பெரும் போரைக் கட்டவிழ்த்து விட்ட நேரம், அப்போது பிரேமதாச அவர்கள் இந்திய அமைதிப்படையை வெளியேற்ற ஒரு புறம் ராஜதந்திர நடவடிக்கைகளை மேற் கொண்டும் மறுபுறம் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களும் பணமும் வழங்கி அவர்களை வலுப்படுத்தினார். அதாவது இந்தியப் படையை வெளியேற்ற அவர் சகல வழிகளிலும் முழு மூச்சுடன் செயற்பட்டார்.

ஜே.வி.பி. உண்மையில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருந்தால் பிரேமதாசா அவர்களுக்கு முழு ஆதரவையும் வழங்கியிருக்க வேண்டும். விடுதலைப்புலிகளுக்கும் உதவி செய்திருக்க வேண்டும்.

ஆனால், ஜே.வி.பியோ பிரேமதாசாவுக்கு எதிராக ஒரு புரட்சியை ஆரம்பித்து அவரைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியது. அதேவேளை இந்தியப் பொருட்கள் பகிஷ்கரிப்பு எனக் கூறி இந்திய வர்த்தகர்களின் பொருட்களைக் கொள்ளையிட்டு அவர்களைக் கொன்றதுடன் மட்டுப்படுத்திக் கொண்டது.

பிரேமதாசா இந்தியாவை வெளியேற்றப்பாடு படும்போது அவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் இந்தியாவுக்கே சாதகமானது என்பதை மறுக்க முடியுமா?

அதாவது ஜே.வி.பியால் மெற்கொள்ளப்பட்ட இரண்டு புரட்சிகளுமே ஏகாதிபத்திய நலன்களுக்குச் சேவை செய்யும் முகமாகவே மேற்கொள்ளப்பட்டன.

உண்மையிலேயே 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் இலங்கையை முழுமையாக ஏகாதிபத்திய வலைப்பின்னலில் பிணைக்கும் வகையிலேயே உருவாக்கப்பட்டது. திறந்த பொருளாதாரக் கொள்கை, சுதந்திர வர்த்தக வலயம் என்பன மூலம் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைக்குச் சாவு மணியடிக்கப்பட்டது.

ஆனால், ஜே.வி.பி. இந்த அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்த்துக் கண்டனக்குரல் எழுப்பவில்லை, ஒரு எதிர்ப்புப் பேரணி நடத்தவில்லை அதற்கெதிராக ஒரு சிறு கல்லைத் தானும் எடுத்தெறியவில்லை. அமைதிகாத்து மறைமுகமாக தன் ஆதரவை வழங்கியது.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்பும் அந்நிய முதலீடுகளைக் கவர்தல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல், துரித அபிவிருத்தி என்ற போர்வையில் இலங்கை ஏகாதிபத்தியங்களின் கால்களில் பிணைக்கப்பட்டு விட்டது. தனியார் பல்களைக் கழகங்கள், தனியார் மருத்துவமனைகள் போன்றவற்றின் முதலீடுகளால் இலவசக் கல்வி, இலவச மருத்துவம் என்பன மழுங்கடிக்கப்படுகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளுக்கு ஏற்ப விலைவாசிகள் உயர்த்தப்படுகின்றன. சம்பள உயர்வுகள் மறுக்கப்படுகின்றன, மானியங்கள் வெட்டப்படுகின்றன.

இத்தகை ஏகாதிபத்தியங்களின் நலன்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நாடு பரந்த போராட்டங்கள் எதையும் ஜே.வி.பி. மேற்கொள்ளவுமில்லை. நாட்டுப் பற்றாளர்களை அணி திரட்டவுமில்லை.

ஒன்றிரண்டு மாணவர் ஊர்வலங்களுடனும், ஒன்றிரண்டு தொழிலாளர் பேரணிகளுடனும் அது நிறுத்தி விட்டது. தொடர்போராட்டங்களை நடத்த அது தயாரில்லை.

ஆனால் அமெரிக்கா இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் பற்றி குரலெழுப்ப ஆரம்பித்த பின்பு தான் இவர்களுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நாட்டுப்பற்றாளர்களை அணிதிரட்டுவது என்பன நினைவுக்கு வந்துள்ளன.

இது மஹிந்த ராஜபக்ச போர்க்குற்றங்களிலிருந்து தப்பப் போலி ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோத்துக்கு பாடப்படும் பிற்பாட்டுத்தானா என்ற கேள்வியும் இங்கு எழத்தான் செய்கின்றது.

சூரியோதைய நேரத்தில் சூரிய நமஸ்காரம் செய்தால் அது சத்தியாவந்தனம். கிரகண காலத்தில் சூரிய நமஸ்காரம் செய்வது பிறரை ஏமாற்ற முயன்று கண்களைக் குருடாக்கும் முயற்சி.

ஜே.வி.பி. தனது தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு ஏகாதிபத்திய வர்ணம், இந்திய எதிர்ப்பு வர்ணம் என்பன பூசுவது அப்படியொன்றும் புதிய சம்பவமல்ல. ஆனால் ஜே.வி.பியின் நயவஞ்சக நட வடிக்கைகள் அனைத்தும் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல சிங்கள முற்போக்காளர் மத்தியிலும் வெறுப்பை ஏற்படுத்தி அவர்களைத் தனிமைப்படுத்தி விடும் என்பது மட்டும் உண்மை.

சந்திரசேகரஆசாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களப் புயல்
நெப்போலியன்

28



# நெப்போலியன் நாடு கடத்தப்பட்டார்!

தாக்குதலில் ஏகப்பட்ட வீரர்களை இழந்த நெப்போலியனின் படை, பரிதாபமான நிலைமையில் பிரான்ஸ் திரும்பியது. லட்சக்கணக்கில் கம்பீரமாகக் கிளம்பிப்போனவர்கள், திரும்பி வரும் போது ஆயிரக்கணக்கில்தான் இருந்தார்கள்.

நெப்போலியனின் இராணுவம் ஆட்டம் கண்டிருக்கிறது என்பதை அறிந்த பழைய ஐரோப்பிய விரோதிகள் கூடிப் பேசினார்கள்.

இந்தக் கூட்டணியில், இங்கிலாந்து, ரஷ்யா, பிரஷ்யா, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகள் இடம் பெற்றிருந்தன. ஆநேகமாக இவர்கள் எல்லோருமே, இத்தனை நாள்களாகத் தனித்தனியே நெபபோலியனைத் தாக்க முயன்று தோற்றவர்கள்தான். இப்போது ஒன்றாக இணைந்து, ஒரு மகா பெரிய படையைத் திரட்டத் தீர்மானித்தார்கள்.

தனக்கு எதிராக ஒரு பெரிய கூட்டணி உருவாகிக் கொண்டிருப்பதைக் கேள்விப்பட்ட நெப்போலியன், அதைச் சமாளிப்பதற்கான மாற்று ஏற்பாடுகளை யோசிக்கத் தொடங்கினார். எத்தனை பெரிய படை வந்தாலும், தன்னால், பிரெஞ்சு இராணுவத்தால் சமாளித்துவிடமுடியும் என்கிற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

ஆனால், அந்த நம்பிக்கை, மற்றவர்களுக்கும் இருக்கவேண்டுமில்லையா? அங்கேதான் பிரச்சினை ஆரம்பமானது.

இத்தனை நாள்களாகத் தங்களுடைய சக்கரவர்த்தியைக் கண்மூடித்தனமாக ஆதரித்துக் கொண்டிருந்த பெரும்பான்மைப் பிரெஞ்சு மக்கள், அப்போது யோசிக்கத் தொடங்கி இருந்தார்கள்.

நெப்போலியனின் சுயலாபத்துக்காக, லட்சக்கணக்கான வீரர்களை ரஷ்யாவிலும் மற்ற இடங்களிலும் பலி கொடுத்தது போதாதா? இன்னும் இப்படி எத்தனைப் போர்கள்? எத்தனை இழப்புகள்? இதற்கெல்லாம் என்னதான் முடிவு?

நெப்போலியன் பதவியிலிருந்து இறங்கினாலாவது, பிரான்ஸில் அமைதி திரும்பாதா என்று பிரெஞ்சு மக்கள் ஏங்க ஆரம்பித்திருந்தார்கள். இதனால், உள்ளூரில் நெப்போலியனுக்கு ஆதரவு அதிவேகமாகச் சரிந்துகொண்டிருந்தது.

பொதுமக்கள் மட்டுமின்றி, இத்தனை ஆண்டுகளாக நெப்போலியனுடன் இருந்து, அவரிடமிருந்து பணம், புகழ், பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் கூட, அவருக்கு எதிராகக் கட்சி மாறிக்கொண்டிருந்தார்கள். நெப்போலியனின் சொந்தச் சகோதரர்கள் கூட, சுயநலத்தோடு யோசிக்கத் தொடங்கியிருந்தார்கள்.

ஆனால், இந்த விஷயங்களையெல்லாம் நெப்போலியன் கவனித்ததாகத் தெரியவில்லை. அவர் எப்போதும் வெளி எதிரிகளைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்துவிட்டார்.

1813 ஆகஸ்டில், நெப்போலியன் மீதான அடுத்த சுற்றுத்தாக்குதல்கள் தொடங்கின. அவருடைய பழைய விரோதிகள் எல்லோரும் ஒரே குடையின்கீழ் இணைந்துகொண்டு, பிரெஞ்சுப் படைகளை எதிர்த்துப் போரிடத் தொடங்கினார்கள்.

இப்படி ஒரு சூழ்நிலையிலும், நெப்போலியன் தோல்வியைப்பற்றியோ, பின்வாங்கிச் சரணடைவது பற்றியோ நினைக்கக்கூட இல்லை. லட்சக்கணக்காக பிரான்ஸ் மக்களைத் திரட்டி, பிரம்மாண்டமான

**நெப்போலியனுக்கு எதிரான படையில் தினந்தோறும் புதிய நாடுகள், பிரதேசங்கள், மன்னர்கள் சேர்ந்து கொண்டிருந்தார்கள். நாளுக்கு நாள் விரோதிப் படையின் பலம் அதிகரித்துக்கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில், நெப்போலியனின் இராணுவத்தைக் காட்டிலும், எதிர்க் கூட்டணி கிட்டத்தட்ட இரண்டு மடங்கு பெரியதாகிவிட்டது.**

ஒரு படையை உருவாக்கிவிடமுடியும் என்றுதான் கனவு கண்டு கொண்டிருந்தார் அவர்.

ஆனால் யதார்த்தம், நெப்போலியனுக்குச் சாதகமாக இல்லை. அவருக்கு எதிரான படையில் தினந்தோறும் புதிய நாடுகள், பிரதேசங்கள், மன்னர்கள் சேர்ந்துகொண்டிருந்தார்கள். நாளுக்கு நாள் விரோதிப் படையின் பலம் அதிகரித்துக்கொண்டிருந்தது. ஒருகட்டத்தில், நெப்போலியனின் இராணுவத்தைக் காட்டிலும், எதிரிக் கூட்டணி கிட்டத்தட்ட இரண்டு மடங்கு பெரியதாகிவிட்டது.

இதனால், ஆரம்பத்தில் ஓரிரு வெற்றிகளைப் பெற்ற நெப்போலியன், அதன்பிறகு தொடர்ச்சியாகத் தோற்கடிக்கப்பட்டார். இப்போதும், அவரால் எதிரிப்படைகளுக்குப் பலத்த சேதத்தை உண்டாக்க முடிந்தது. ஆனால், கொஞ்சம் கொஞ்சமாக அவருடைய இராணுவத்தின் வலிமையும் குறைந்து கொண்டிருந்தது.

முன்பு நெப்போலியன் ஜெயித்த பல பகுதிகள், இப்போது அவருடைய கையை விட்டுச் சென்றுவிட்டன. எதிரிகளின் தாக்குதலைத் தொடர்ந்து சமாளிக்க முடியாமல், பின்வாங்கத் தொடங்கிய பிரெஞ்சுப் படை. எல்லா முனைகளிலிருந்தும், எதிரிகள் அவர்களைச் சூழ்ந்துகொண்டிருந்தார்கள்.

தன்னுடைய கனவு, கண்ணுக்கு எதிரே சரிந்து விழுந்துகொண்டு இருப்பதை வேதனையோடு பார்த்தார் நெப்போலியன்.

1813-ம் ஆண்டு முழுவதும், இந்த நாடகம் தொடர்ந்தது. நெப்போலியன் படை திரட்டி அனுப்புவதும் அதைப்போலப் பல மடங்கு பெரியதான படைகளிடம் அவர்கள் உதை வாங்கிக் கொண்டு திரும்புவதும் தினசரி நடவடிக்கையானது.

அந்த ஆண்டு இறுதியில், நிலைமை இன்னும் மோசமாகி விட்டது. நெப்போலியனின் எதிரிகளான நேச நாட்டுப் படைகள் இணைந்து, பிரான்ஸைத் தாக்கத் தொடங்கின.

இத்தனை ஆண்டுகளாக, நெப்போலியன் தலைமைதாங்கி நடத்திய போர்கள் எல்லாமே, பிரெஞ்சு மண்ணுக்கு வெளியே நடை பெற்றவைதான். ஐரோப்பாவின் பெரும்பகுதியைத் தனது அதிகாரத்துக்குக் கீழே கொண்டுவந்திருந்த அவர், முதன் முறையாகத் தன்னுடைய சொந்த மண்ணைக் காப்பாற்றப் போராடவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார். கடைசிவரை போராடுவேன் என்று தனது எதிர்த் தாக்குதல்களைத் தொடங்கினார் நெப்போலியன்.

இருதரப்பிலும் ஏகப்பட்ட இழப்புகள், என்றாலும், பிரான்ஸுக்குள் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறிவிட்டது நேச நாடுகள் படை.

சரியாக இந்த நேரத்தில்தான், உள்நாட்டிலும் பிரச்சினைகள் தொடங்கின. அதிகாரிகள், மந்திரிமார்களில் தொடங்கி, இராணுவத் தலைவர்கள், நெப்போலியனின் உறவினர்கள், பொதுமக்கள் என்று எல்லோருமே நெப்போலியனுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கியிருந்தார்கள்.

இதனால், கடுமையான மன உளைச்சலைச் சந்தித்த நெப்போலியனுக்கு, உடல் நிலையும் கெட்டது. பிரான்ஸின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற எதிரிகளை, அவரால் சரியாகத் திட்டமிட்டு எதிர்க்கமுடியவில்லை.

1814-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி, நேச நாட்டுப் படைகள் பாரிஸ் நகரைக் கைப்பற்றின. அப்போது நெப்போலியன் அங்கே இல்லை. அவருடைய மனைவி, மகன், சகோதரர்கள் எல்லோரும் தப்பித்து உயிர் பிழைத்ததே பெரிய விஷயமாகிவிட்டது.

இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட நெப்போலியன், உடனடியாக பாரிஸ் திரும்ப முயன்றார். ஆனால், அங்கே நிலைமைசரியில்லை என்று சொல்லி, நண்பர்கள், ஆலோசகர்கள் அவரைத் தடுத்து நிறுத்தினார்கள்.

அப்போதே, அநேகமாக எல்லாம் முடிந்து விட்டாற் போலத்தான். பாரிஸ் கை மாறிய அந்தக் கணத்திலேயே, இனிமேல் நெப்போலியன் சக்கரவர்த்தியாகத் தொடரமுடியாது என்பது உறுதியாகிவிட்டது. அதுதொடர்பான சில சம்பிரதாயங்கள் மட்டும்தான் மிச்சமிருந்தன.

நேச நாட்டுப் படையினர், நெப்போலியனை விஷயத்தில் எந்தவிதமான சமரசத்துக்கும் தயாராக இல்லை. அவர் தன்னுடைய ஆட்சிப் பொறுப்பிலிருந்து நிரந்தரமாக விலகியாகவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

தன்னுடைய பதவியைத் துறக்கச் சம்மதித்தார் நெப்போலியன், கனத்த இதயத்துடன், அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

பதவி விலகிய நெப்போலியனை, பிரான்ஸில் தொடர்ந்து வாழ்வதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை. இத்தாலிக்கு அருகில் உள்ள 'எல்பா' (Elba) என்ற தீவுக்கு, அவரை நாடு கடத்துவதாக அறிவித்தார்கள்.

எல்பாவில், நெப்போலியன் சகல மரியாதைகளுடன் வாழலாம், தனக்கென்று மந்திரி சபை, சின்னதாக ஒரு இராணுவம்கூட வைத்துக்கொள்ளலாம். ஆனால், எல்லாம் அந்தச் சின்ன வட்டத்துக்குள்தான் இருக்கவேண்டும். மறுபடியும் பிரான்ஸுக்குத் திரும்பி வருவதைப்பற்றி யோசிக்கக்கூடாது.

எல்லாம் ஒரு கனவைப்போல, மிக விரைவாக நடந்து முடிந்துவிட்டது. பிரெஞ்சுக் கொடிக்கு முத்தமிட்டுவிட்டு, அந்த மண்ணிலிருந்து விடை பெற்றுக் கொண்டார் நெப்போலியன்.

எல்பாத் தீவு, நெப்போலியன் பிறந்த கோர்ஸிகாவிலிருந்து சுமார் முப்பத்தைந்து கிலோ மீற்றர் தொலைவில் இருந்தது. சிறிய, ஆனால் அழகான தீவு. அமைதியான சூழ்நிலை.

நெப்போலியனை, இந்தத் தீவின் மன்னராக அறிவித்திருந்தார்கள். ஆனால் உண்மையில், அவர் பிரான்ஸிலிருந்து நாடு கடத்தப்பட்ட அகதிதான் என்பது எல்லோருக்கும் தெரிந்த ரகசியமாக இருந்தது.

அதைப்பற்றியெல்லாம் நெப்போலியன் கவலைப்படவில்லை. எல்பாத் தீவின் சூழல், அவருக்குத் தன்னுடைய இளமைக் கோர்ஸிகா ஞாபகங்களையெல்லாம் கிளறிவிட்டிருக்க வேண்டும். பழையபடி பூஜ்ஜியத்திலிருந்து தன்னுடைய அரசியல் வாழ்க்கையைத் தொடங்கத் தயாராகினார் அவர்.

அச்சிறிய தீவில், நெப்போலியனுக்குப் பொழுது போக வேண்டுமில்லையா? அங்கிருக்கும் சமூகச் சூழ்நிலையைக் கவனித்து, மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவது பற்றித் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார்.

கொஞ்சம் கொஞ்சமாக, அவருக்கு எல்பா மக்களைப் பிடித்துப் போய்விட்டது. பிரான்ஸில் செய்தது போன்ற சமூகச் சீர்திருத்தங்கள், பொருளாதார முன்னேற்ற உத்திகளையெல்லாம் இங்கேயும் முயன்று பார்க்கத் தொடங்கினார்.

வெளிப்பார்வைக்கு, நெப்போலியன் இப்படி ஜாலியாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்தாலும், உள்ளுக்குள் அவருடைய லட்சிய ஆவேசம் கொஞ்சம்கூடக் குறைந்திருக்கவில்லை. தனக்கு இன்னொரு வாய்ப்புக் கிடைக்குமா என்றெல்லாம் அவர் சந்தேகப்படவே இல்லை, ஐரோப்பிய அரசியல் நிலைமையைக் கூர்ந்து கவனித்தபடி, சரியான தருணத்துக்காகக் காத்திருந்தார்.

அவரால் அவசரப்பட்டு, எதுவும் செய்யமுடியாத நிலைமை. காரணம், நெப்போலியன் ஏதேனும் விஷமத்தில் ஈடுபடக்கூடும் என்று நினைத்து, இங்கிலாந்து உள்ளிட்ட எதிரி நாடுகள் எல்பாத் தீவைத் தங்களது தொடர் கண்காணிப்பில் வைத்திருந்தார்கள்.

தொடரும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுக்கொள்ளாத பாடம்

தமிழில் : [illegible]

ஐ.நா.மனித உரிமைகளின் 19ஆவது கூட்டத்தொடரில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட சிறீலங்காவுக்கெதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதன் பின்விளைவுகள் குறித்து இப்பவும் செய்திகளிலும், மேடைகளிலும் சூடாக விவாதிக்கப்பட்டு வருகின்றது.

பலர் ஜெனிவாவில் நடந்தவை பற்றி மூச்சுவிடாதவண்ணம் ஆர்வத்துடன் கதைத்துக்கொண்டும், அமைச்சர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் 'சுகிளை'த் தடைசெய்ய வேண்டும் எனக் கத்திய வண்ணமும் இருக்கையில் நாட்டில் ஒரு முக்கியமான பகுதியினரிடமிருந்து இது குறித்து எந்த ஒரு எதிர்விளைவுகளையும் காணமுடியாதுள்ளது.

அவர்கள் வேறு யாருமல்லர். வடக்குக் கிழக்கிலுள்ள நேரடியான பாதிப்பிற்குள்ளான மக்களேயாகும். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்வுகாணும் விதத்திலேயே நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விளங்குமென அரசாங்கத்தினால் கருதப்பட்டது.

கடந்தவாரம், நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் அதன் அறிக்கை குறித்தும் வடக்கு-கிழக்கிலுள்ள மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களை நேரில் அறியும் பொருட்டு யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்தவேளையில், மனதில் ஓர் பெரும் கேள்வி எழுந்தது. அதாவது, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் குறித்து இம்மாவட்ட மக்கள் அறிந்துள்ளவை என்ன? என்பதே அதுவாகும்.

நாம் சந்தித்தவர்கள் வாழ்க்கையில் பல கோணங்களையும் சேர்ந்தவர்கள். இடம்பெயர்ந்தவர்கள் தொடக்கம் விவசாயிகள் வரையிலும் அத்துடன் சில மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் இவர்களில் அடங்குவர். அவர்களுடனான எமது சந்திப்புக்களின் பெறுபேறுகள் ஆச்சரியத்தையே விளைவித்தன.

அம்பாறையைச் சேர்ந்த ஒரு எண்ணிக்கையிலான மக்கள் தமக்கு ஆணைக்குழுவின் அறிக்கை எதனை உள்ளடக்கியுள்ளதென்பது பற்றி எதுவுமே தெரியாதெனக் கூறினார்கள். அப்படிக் கூறியவர்கள் ஒன்றும் வீதிகளில் திரியும் சாதாரணமானவர்கள் அல்ல. அவர்களிற் பலர் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள்.

உண்மையில், அவர்கள் அறிக்கை குறித்து அறவே தெரியாத நிலையிலேயே இன்னமும் உள்ளனர். அப்படியிருந்தும் அவர்கள் அதுபற்றி அறிந்துகொள்ள விரும்புவதாகத் தெரிவித்தனர்.

பல முஸ்லிம்கள் தமது மனக்குறைகளைக் கேட்பதற்கு எவருமில்லையெனத் தாங்கள் உணர்வதாகவும் கூறினார்கள். "நாங்களும் கூட ஆணைக்குழுவின் முன்னால் எமது வாக்குமூலங்களை வழங்கியிருப்போம், ஆனால் அதனை எங்குபோய், எப்படி மேற்கொள்வது என்பது பற்றித் தெரிந்திருக்கவில்லை" எனக் கவலை தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு தடவைகளாகத் தகவல் சேகரிப்பதை ஆணைக்குழு நடத்தியமையால் அது குறித்து மக்கள் ஓரளவு அறிந்துள்ளனர். அவர்களில் ஒருவரான நிர்மலி எனும் பெண் கூறுகையில் "அரசாங்கத்தின் கூற்றுக்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடானவையாக உள்ளன. ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் ஒரு பகுதியை மட்டுமே அமுலாக்குவதாகக் கூறிவருகின்றது. அது மட்டுமல்லாது ஆணைக்குழுவின் ஆவணப்படுத்தலிலும் பற்றாக்குறை நிலவுகின்றது. அவை பூரணமாக ஆவணப்படுத்தப்படவில்லை" எனத் தெரிவித்தனர். மேலும் அவர் தொடர்ந்து கூறுகையில் "நானும் நடைபெற்ற ஆணைக்குழுவின் அமர்வுகளில் ஒன்றில் கலந்து கொண்டு எனது தகவல்களைச் சமர்ப்பித்திருந்தேன். ஆனால் அது ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக அது சனல்-4 ஆவணப்படுத்தலில் தோன்றியது" எனத் தெரிவித்தார்.


அதேவேளையில் வர்ணிகா என்ற மற்றொரு பெண்ணை நாங்கள் எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தது. அவர் "எனது பகுதியில் சில பாடசாலைகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்ளன. இராணுவத்தினரால் இரண்டு பாடசாலைகளினதும் மாணவர்களும் தமது கண்காட்சி ஒன்றிற்கென அனுமதிபெற்றுக் கூட்டிச் செல்லப்பட்டனர். ஆனால் அவர்கள் அனைவரும், உண்மையில் அன்று நடைபெற்ற ஜெனிவாத் தீர்மானத்திற்கெதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்கேற்க வைப்பதற்காகவே அழைத்துச் செல்லப்பட்டனர் என்பது பின்னர் தெரிய வந்தது. இவ்வாறான சம்பவங்கள் இங்கு அடிக்கடி இடம்பெறுகின்றன" என விசனத்துடன் கூறினார்.

"ஜெனிவாவின் 19வது கூட்டத்தொடரில் அமெரிக்காவின் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தில், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் சகல மதக்கோவில்களிலும் பிப 3 மணிக்கு ஒரே சமயத்தில் மணிகளை ஒலிக்க வைக்கும்படி இராணுவத்தினர் கோரினார்கள். ஆனால் நாங்கள் மறுத்து விட்டோம்" என முகத்தில் பெருமை பொங்க அவர் மேலும் கூறினார்.

இவ்விதமான அதிகாரத்தில் உள்ளவர்களினால் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டும், அவர்களிடமிருந்து தப்புவதற்கு அரும்பாடுபடும் விவசாயிகள் தொடக்கம் நடைபாதை வியாபாரிகள் வரை தமக்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை என்பது என்னவென்றே தெரியாது என்று கூறினர். எப்படியிருந்த போதிலும் தமக்குள்ள பிரச்சினைகள் கஷ்ரங்கள் மத்தியிலும் தமது நாளாந்த வாழ்க்கையை நகர்த்த முடிவதில் மகிழ்வடைவதாகக் கூறினார்கள்.

மன்னாரிலும் இது பற்றிப் புரிந்துகொள்ளாத நிலைமையே பெரும்பாலும் காணப்படுகின்றது. ஒருசிலர் அறிக்கை குறித்து அறிந்துள்ளனர். ஆயினும் அவர்களில் ஒருவராவது அறிக்கையின் உள்ளடக்கங்கள் குறித்து அறவே அறியாதவர்களாக உள்ளனர்.

மத்திய கிழக்கில் பணிபுரியும் ஒருவரின் மனைவியான திரு என்பவர் கூறுகையில் "எங்களுக்கு இது குறித்து எதுவுமே தெரியாது. ஆனால் இதில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது என்பது மட்டும் தெரியும். அத்துடன் அறிக்கையின் உள்ளம்சங்கள் குறித்து எமக்குத் தெரியாது" எனக் கூறினார். அதேவேளையில் உயர்தர வகுப்பில் கல்விபயிலும் அவரது மகளான புனிதா என்பவருக்குக் கூட நல்லிணக்க ஆணைக்குழு பற்றியோ அல்லது அதன் சிபாரிசுகள் குறித்தோ எதுவித விழிப்புணர்வும் இல்லை. எங்கு பார்த்தாலும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றிய ஓர் மனக்குழப்பமாகவும், துல்லியமற்ற, தெளிவில்லாத தன்மையுமே மக்கள் மத்தியில் நிலவுவதை அவதானிக்க முடிந்தது.




இதை விட, யாழ்ப்பாணத்திலுள்ள பெண்கள் ஒருபடி மேலே சென்று அரசாங்கம் செய்வது எதுவும் தமக்கு உதவவில்லையென்றும் கருத்தை வெளிப்படுத்தினர். வெறுமனே புதுவீதிகள், பாலங்களை அமைப்பதும், பெரிய உட்கட்டுமானத் திட்டங்களை அமுலாக்குவதன் மூலமும் தங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி விடலாமென அரசாங்கம் கருதுவது தவறென அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

அதுமட்டுமன்றி அவர்கள் ஆச்சரியமளிக்கும் விதத்தில் அன்றாடம் பத்திரிகைகளில் வெளிவரும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பாலியல் குற்றச்செயல்கள், பாலியல் தொந்தரவுகள் மற்றும் மதுபாவனையாளரின் விபரீதங்கள் குறித்தும் தடையின்றித் தமது எண்ணங்களை வெளிப்படுத்துபவர்களாக இருக்கின்றனர்.

எனினும், பொதுவில் பெருமளவிலானோர் அரசாங்கம் செய்வது எதுவும் போதுமானதல்ல எனும் உணர்வினையே கொண்டுள்ளனர் என்பது அவர்களின் உரையாடல்கள் மூலம் வெளிப்படையாகத் தெரிகின்றது.

இதை விட, யாழ்ப்பாணத்திலுள்ள பெண்கள் ஒருபடி மேலே சென்று அரசாங்கம் செய்வது எதுவும் தமக்கு உதவவில்லையென்றும் கருத்தை வெளிப்படுத்தினர். வெறுமனே புதுவீதிகள், பாலங்களை அமைப்பதும், பெரிய உட்கட்டுமானத் திட்டங்களை அமுலாக்குவதன் மூலமும் தங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி விடலாமென அரசாங்கம் கருதுவது தவறென அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

பலர் தமக்கு ஓர் சிறிய வீட்டைத்தன்னும் கட்டிக்கொள்ளவோ அல்லது அன்றாட ஜீவனத்திற்கோ வழியில்லாது தவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக நாடாளுமன்றத்திலும், ஊடகங்களிலும் காரசாரமாக விவாதிக்கப்பட்டுவரும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்தும் அதன் அமுலாக்கம் குறித்தும் வடக்கு-கிழக்கு மக்கள் அதிகம் அலட்டிக்கொள்ளாத போக்கே எங்கும் நிலவுவதை அவதானிக்க முடிந்தது. இது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கானதொன்றல்ல, ஏனெனில் அவ்வளவு தூரம் மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை அற்றவர்களாக உள்ளனர்.

ஒருசிலர் அரசாங்கம் ஒருபோதும் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தமாட்டாது எனும் சந்தேகத்தைக் கொண்டிருப்பதையும் ஊகிக்க முடிந்தது. இவற்றினையெல்லாம் கவனத்துடன் கருத்திலெடுத்துச் சிந்திக்கையில் வடக்கு-கிழக்கில் மீள நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் பெருமளவிலான பணிகளை அரசாங்கம் நிச்சயமாக மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதென்பது மிகவும் தெளிவாகப் புரிகின்றது.

பாதிப்படைந்த மக்களில் ஒரு சாரார் தமக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டதாக ஆத்திரத்தில் உள்ளனர். 20 வருடங்களிற்கு மேலாகிவிட்ட நிலையிலும் தத்தமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை, இழப்புகளுக்கான நஷ்டஈடுகள் வழங்கப்படவில்லை எனும் மனக்குறைகள் உடையவர்களாக விரக்தியுடன் காணப்படுகின்றனர்.

புண்பட்ட இவர்களின் இதயங்களை வென்று மீள நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு உரிய கருமங்களை அரசாங்கம் அக்கறையுடன் செயற்படுத்தாத வரையில் நல்லிணக்கமென்பது வடக்குக் கிழக்கிலுள்ள மக்களிற்குப் புரிந்து கொள்ள முடியாததொன்றாகவே இருக்கும். அரசுக்கும் இது கற்றுக் கொள்ளாத பாடமாகவே அமையும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
THE SUDAROLI வாரமலர்
22 ஏப்ரல் - 28 ஏப்ரல் 2012
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன் 0115738005
பக்ஸ் 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## மூடிமறைத்தல் எவ்வளவு காலத்திற்கு..?

இன்று இலங்கையில் என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதை சர்வதேசம் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால், இலங்கை அரசாங்கமோ தொடர்ந்தும் எல்லாவற்றையும் மூடிமறைத்தல், தங்கள் தரப்பு நியாயங்கள் - வாதங்களை மட்டுமே முன்வைத்தல் போன்ற வழிமுறைகளையே கையாண்டு வருகின்றது.

ஆனால், இந்த வழிமுறையினை எவ்வளவு காலத்திற்குத் தொடர முடியும் என்பதுதான் கேள்வி. ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் குறித்த சர்ச்சைகள் இன்னமும் தொடர்கின்ற நிலையில், மற்றுமொரு கூட்டத்தொடருக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் யூன் மாதம் நடைபெறவுள்ள கூட்டத்தொடரில் பல்வேறு கேள்விகள் இலங்கை அரசின் முன்வைக்கப்படலாம் என தெரியவருகின்றது. இறுதி யுத்தம் மற்றும் காணாமல்போதல் குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டி வரலாம். ஜெனிவா தீர்மானம் அரசிற்கு சிக்கலான நிலைமையை ஏற்படுத்தியுள்ள காலகட்டத்திலேயே நாட்டில் கடத்தல்களும் காணாமல் போதல்களும் முடிவிற்கு வராமல் தொடர்கின்றன. குறிப்பாக, அண்மையில் ஜே.வி.பியின் முன்னாள் மூத்த உறுப்பினரும், தற்போதைய முன்னிலை சோஷலிசக்கட்சியின் தலைவருமான பிரேம்குமார் குணரட்னம் மற்றும் அக் கட்சியைச் சேர்ந்த திமுது ஆட்டிகல ஆகியோர் கடத்தப்பட்ட சம்பவம் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் ஒரு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், ஜெனிவா அறிக்கையில் இலங்கை அரசாங்கத்திற்கெதிராக முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லாததும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தயாரில்லாத நிலையிலும் உள்ள அரசாங்கம் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகத்திற்கு எதிரான கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றது. ஜனாதிபதி தொடக்கம் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எனப் பலரும் இதனை மேற்கொண்டு வருகின்றனர். சிலர் மிகக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு வருகின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான கருத்துக்கள் குறிப்பிட்ட நாடுகளுக்கு சினத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்கு நாடுகளின் தூதரகங்களை மூடிவிடப்போவதாக வெளியிடப்பட்ட கருத்திற்கு தங்களது அதிருப்திகளை அந்நாடுகளின் தூதுவர்கள் இலங்கை வெளிவிவகார அமைச்சிற்குத் தெரிவித்துள்ளனர்.

மேற்குலக நாடுகளை பகைத்துக் கொள்வதால் பாதிப்படையப்போவது இலங்கைதான் அந்த நாடுகளல்ல என்பதை ஏன் அரசாங்கம் விளங்கிக் கொள்ளாமலுள்ளது என்பதுதான் நாட்டு மக்களுக்கு விளங்காத விடயமாகவுள்ளது.

போர் முடிவுற்று மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின்ற நிலையில், வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் சில அபிவிருத்தித் திட்டங்களை மட்டுமே அரசாங்கம் பறைசாற்றி வருகின்றது. இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழுவினரிடமும் இதனையே அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச இந்தியத் தூதுக்குழுவின் தலைவர் சுஷ்மா சுவராஜிடம் தாங்கள் மேற்கொள்ளும் அபிவிருத்தித்திட்டங்களின் விபரங்களைக் கையளித்துள்ளார்.

இதன்படி பார்க்கும் போது போரின் பின்னான சில அபிவிருத்தித்திட்டங்களை மட்டுமே உதாரணம் காட்டி பிரதானமான பிரச்சினைகளைத் தட்டிக்கழிப்பதும், தவறுகளை மூடி மறைப்பதுமே அரசின் நோக்கமாக உள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

அதுமட்டுமன்றி, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் காட்டப்படுகின்ற தாமதங்கள் குறித்த கேள்விகளுக்கு தெரிவுக்குழுவில் கூட்டமைப்பினர் கலந்து கொள்ளாமையினை மட்டுமே காரணமாக காட்டப்படுகின்றது. இந்நிலையில், உண்மை நிலையை தமிழர் தரப்பு மட்டுமன்றி எதிர்க்கட்சிகளும் இணைந்து சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும். அதற்கான இராஜதந்திர நகர்வுகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டும்.

# ஏழைகள் வாழமுடியாத தேசம்!

ஏழைகள் வாழமுடியாத தேசமாக மாறிவருகின்றது இலங்கை. எந்தவொரு நாட்டின் உதவியும் இல்லாமல் வளர்ந்து காட்டுவோம் என்று மேடைகளில் முழங்கும் ஆட்சியாளர்களின் வார்த்தைகள், வீரவசனங்கள் என்பன யதார்த்தத்திற்குப் புறம்பான கதைகளாக உள்ளன. இவர்கள் அடிக்கடி கூறும் அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி என்பன ஆட்சியாளர்களுக்கும் அவர்களின் தயவால் வாழ்பவர்களுக்கும் மட்டுமே உரித்தானதாக விளங்குகின்றது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, உணவுப் பொருட்களின் விலையேற்றம் உட்பட தற்போதைய இலங்கையின் பொருளாதார நிலை அப்பாவி மக்களின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தைச் செலுத்துவதாகவே விளங்குகின்றது.

பொதுமக்களின் உழைப்பின் பெறுமதியை விட நாளாந்த செலவீனம் உச்சந்தலைக்கும் உள்ளங்காலுக்குமிடையிலான வேறுபாடாகவும் மலைக்கும் மடுவிற்கும் இடையிலான தூரமாகவும் விளங்குகின்றது. வளர்ந்த நாடுகளுக்கு நிகராக இலங்கையை அபிவிருத்தி செய்து காட்டுவோம், ஆசியாவின் அதிசயமாக இலங்கையை மாற்றுவோம், எந்தவொரு நாட்டின் உதவியும் தயவும் இல்லாமல் எம்மால் வளரவும் வாழவும் முடியும் என்ற ஆட்சியாளர்களின் வீரவசனங்கள் நகர் பற்றியெரியும் போது பிடில் வாசித்த கதை போலவே அமைகின்றது. சவப்பெட்டி தொடங்கி தீப்பெட்டி வரை அனைத்தினதும் விலைகள் ஒரே இரவில் அதிகரிக்கும் நிலையிலேயே இலங்கையின் இன்றைய பொருளாதாரம் உள்ளது. ஆடம்பரச் செலவுகளிலும் அமைச்சர்களின் வெளிநாட்டு சுற்றுலாக்களுக்குமே அதிகளவு நிதி வாரி இறைக்கப்படுவதால் இலங்கையின் பொருளாதாரம் பிச்சைக்காரன் ஏந்தும் தட்டாக உள்ளது.

இலங்கையின் திறைசேரி நிலைமையை பொறுத்தவரையில் அது பூனைபடுக்கும் இடமாகவே உள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலை எப்போது அதிகரிக்கப்படும் என்ற அச்சத்துடனே மக்களின் வாழ்வு கழிந்து கொண்டிருக்கிறது.

எரிபொருளின் விலை, வாகன வரி அதிகரிப்பு, பஸ்கட்டணம் அதிகரிப்பு என்பனவற்றினால் மக்களது வாழ்க்கை இலங்கையில் பெரும் இழுபறிக்கு மத்தியிலேயே கழிகிறது.

இது தொடர்பாக மக்களுக்கு அறிவுரைகளை வழங்கிவரும் இலங்கையின் கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன மூன்று பேரடங்கிய குடும்பம் சிறந்த முகாமைத்துவத்துடன் செயற்பட்டால் 7500 ரூபாவுடன் வாழலாம் எனத் தெரிவித்துள்ளார். மேலும், ஒரு குடும்பம் 41 வீதமான செலவை மட்டுமே உணவுக்குச் செலவழிப்பதாகவும் மிகுதிப்பணம் ஆடைகள் முதலான தேவைகளுக்கான செலவாவதாகவும் பொதுமக்களுக்கான நவீன பட்ஜெட் ஒன்றை சபையில் விளக்கினார்.


அப்பாவி மக்களின் அடிப்படை வாழ்க்கைச் செலவு பன்மடங்காக அதிகரித்திருக்கும் நிலையில் இலங்கை அரசு நவீன வியாக்கியானங்களையும் விளக்கங்களையும் தொடர்ச்சியாக அள்ளிவழங்கி வருகின்றது.

இதேவேளை அண்மையில் போக்குவரத்து வாகனங்களின் வாகனவரியும் அதிகரிக்கப்பட்டுள்ளமையும் பொதுமக்கள் மத்தியில் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. அரசின் அறிக்கையின்படி சீ.சீ. எஞ்ஜின் ஆயிரம் கொள்ளளவுடைய பெற்றோல் கார் ஒன்றின் விலை 80 சதவீதத்தாலும் சீ.சீ. 1000 - 1600 வரையான கொள்ளளவுடைய காரின் விலை 71 சதவீதத்தாலும், 1600 - 2000 வரையான கொள்ளளவுடைய காரின் விலை 64 சதவீதத்தாலும், 2000 கொள்ளளவுக்கு மேற்பட்ட காரின் விலை 90 சதவீதத்தாலும் 3000 மேற்பட்ட கொள்ளளவுடைய காரின் விலை 86 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதைவிட மோட்டார் வாகனங்களுக்கு இருந்த 31வீத வரி சேர்ப்பு 125 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை டீசல் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்களுக்கான வரிகளும் மோசமாக அதிகரித்துள்ளன. புத்தாண்டில் புது வாகனத்தைக் கொள்வனவு செய்து மகிழ்ச்சியுடன் புத்தாண்டை வரவேற்கவிருந்த மக்களை சிக்கலுக்குள் தள்ளி அதில் சந்தோசமடைந்திருக்கிறது அரசு.

அத்துடன் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பால்மாவின் விலைகள் எப்போது அதிகரிக்கப்படும் என்ற அச்சம் கலந்த எதிர்பார்ப்பையும் மக்களுக்கு புத்தாண்டுப் பரிசாக அரசு வழங்கியிருக்கிறது என்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. இவ்வாறு அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுகள் ஏழைகள் வாழமுடியாத தேசமாக இலங்கையை உருவாக்கி வருகின்றது என்பதை அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது.

ஆட்சியாளர்கள் குஷியாக வெளிநாடுகளிற்கு சுற்றுலா செல்லவும் குளிரூட்டி பூட்டிய வாகனங்களில் 'ஹாயாக' வலம் வர பொதுமக்கள் அச்சம் கலந்த எதிர்பார்ப்புடனும் திண்டாட்ட வாழ்வுடனுமே போராடி வருகின்றனர்.

உலகின் முன்னணி நாடுகளுக்கு நிகராக இலங்கையை உருவாக்குவோம் என அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்கு சவால்விடுக்கும் இலங்கை அரசு முதலில் பொருளாதார சுமையால் நசிந்து கொண்டிருக்கும் மக்களை மீட்டெடுக்கவேண்டும். இல்லாவிட்டால் ஆசியாவின் அதிசய நாடு என்ற கனவு மாறி ஆசியாவின் பசி, பட்டினி, பஞ்சம் சூழ்ந்த நாடாக இலங்கை மாறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.



ஜனநாயகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைகட்டாத சித்திரைப் புத்தாண்டு



யுத்தம் முடிவுற்று மூன்று ஆண்டுகளாகின்ற நிலையில், யாழ். மாவட்டத்தில் மட்டும் பத்தாயிரத்து நாற்பத்து நான்கு குடும்பங்களைச் சேர்ந்த முப்பத்தையாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது பேர் இன்னமும் மீள் குடியேற்றம் செய்யப்படாமலிருப்பதாகவும் அதில் எழுபது வீதமானோர் வலிகாமம் வடக்கைச் சேர்ந்தவர்கள் எனவும் யாழ். செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 13.04.2012ம் நாளன்று தமிழ் - சிங்களப்புத்தாண்டாகிய 'நந்தன வருடம்' பிறந்து விட்டது. இந்தவருட சித்திரைப்புத்தாண்டும் பெரியளவில் ஆடம்பரங்களின்றி சோபையிழந்து போயிருந்ததையே அன்றைய தினத்தில் அவதானிக்க முடிந்தது. அன்றைய தினம் காலை வேளையில் மக்கள் புத்தாடைகள் அணிந்து ஆலயவழிபாடுகளில் ஈடுபட்டதையும் மாலை வேளையில் சில இடங்களில் பட்டாசுகள் கொழுத்தியதையுமே காணமுடிந்தது. மற்றும்படி மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள் எவையும் தமிழர் பிரதேசங்களில் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. புதிய நந்தன வருடம் சோபையிழந்தமைக்கும் பல்வேறு காரணிகளும் இருக்கத்தான் செய்கின்றன. வழமைக்கு மாறாக இந்தமுறை மாலைவேளையிலேயே புதுவருடம் பிறந்திருக்கின்றது. அதனால் அநேகமான மக்கள் மாலைவேளையில்தான் மருத்துநீர் வைத்து தோய்ந்து புத்தாடைகள் அணிந்து புதுவருடத்தை வரவேற்றார்கள். ஆகையினால் பகல் வேளையில் புதுவருடக் கொண்டாட்டங்கள் களைகட்டியிருக்கவில்லை. அத்தோடு இந்தமுறை புதுவருடதினம் வெள்ளிக்கிழமையிலேயே பிறந்துள்ளது. வழக்கமாக இவ்வாறான புதுவருடத்தினங்களில் மக்கள் தங்களின் இயல்புகளுக்கேற்றவகையில் கிடா இறைச்சிக்கறி சமைத்து உறவினர் நண்பர்களுடன் மதிய விருந்து உண்பதுதான் வழமையானது. மது அருந்துபவர்கள் தனது நண்பர்களுடன் மது அருந்திவிட்டு கேளிக்கைகளில் ஈடுபட்டதைத்தான் கடந்த காலப்புதுவருடக் கொண்டாட்டங்களின் போது கண்டிருக்கின்றோம். ஆனால் இந்த வருடம் சித்திரைப் புத்தாண்டு தினம் வெள்ளிக் கிழமையில் பிறந்திருந்ததால் இந்தவருட சித்திரைப் புதுவருடத் தினக் கொண்டாட்டம் அமைதியான முறையிலேயே நிறைவடைந்துவிட்டது.

யுத்தத்திற்குப் பின்னரான காலங்களில் மூன்றாவது சித்திரைப் புத்தாண்டும் பிறந்துவிட்டது. இந்த நிலையில் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில் நாட்டிலுள்ள சிறைச்சாலைகள் பலவற்றிலும் அரசியல் கைதிகள் நீண்டகாலமாகவே தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான கைதிகளில் தமிழர், சிங்களவர் என இரு இனத்தவர்களும் அடங்குகிறார்கள். ஆண்டுதோறும் வருகின்ற தமிழ் சிங்களப் புத்தாண்டு தினத்திலாவது நீண்ட காலமாக சிறைகளில் வாடுகின்ற தமிழ் சிங்களக் கைதிகளை பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

தமிழ் சிங்களப்புத்தாண்டு தினத்தில் கைதிகளுக்கு ஒருசில புதிய ஆடைகளையும் சுவையான மதியபோசனமும் வழங்கியதுடன் சிறைக் கைதிகளை அவர்களது உறவினர்கள் வந்து பார்வையிடுவதற்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அத்துடன் புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற முன்னாள் போராளிகளும் அவர்களது உறவினர்களும் இணைந்து வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் கடந்த 19ம் திகதி மாபெரும் விளையாட்டு நிகழ்வும் கலை கலாசார நிகழ்வும் இடம்பெற்றன.

இவ்வாறான நிகழ்வுகளைச் செய்வதன் ஊடாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் மனங்களைத் திருப்திப்படுத்திவிட முடியாது. தமிழ் - சிங்களப் புத்தாண்டு தினத்திலாவது புனர்வாழ்வு பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு தொகுதி முன்னாள் போராளிகளை சமூகத்துடன் இணைத்து நல்லெண்ணத்தினை வெளிப்படுத்திருக்க வேண்டியது அரசினது கடமையாகும். அதைவிடுத்து தமிழ் - சிங்கள புத்தாண்டு தினக் கொண்டாட்ட நிகழ்வுகளில் தடுத்துவைக்கப் பட்டுள்ளவர்களை காட்சிப் பொருளாக வெளியலகிற்குக் காட்டுவதென்பது உலகத்தின் கண்களுக்கு பூச்சாண்டி காட்டுகின்ற ஒரு செயலாக அமைகிறது. பெற்ற பிள்ளைகளும், கரம்பிடித்த கணவன்மாரும் சிறைகளுக்குள்ளும் தடுப்புமுகாம்களிலும் சிறகு முறிந்த பறவைகள் போல வாடிக் கொண்டிருக்கையில் அவர்களின் குடும்பத்தினரின் வீடுகளில் எவ்வாறு சித்திரைப்புத்தாண்டு தினக் கொண்டாட்டங்கள் களைகட்ட முடியும்?.

யுத்தம் முடிவுற்று மூன்று ஆண்டுகளாகின்ற நிலையில், யாழ். மாவட்டத்தில் மட்டும் பத்தாயிரத்து நாற்பத்து நான்கு குடும்பங்களைச் சேர்ந்த முப்பத்தையாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது பேர் இன்னமும் மீள் குடியேற்றம் செய்யப்படாமலிருப்பதாகவும் அதில் எழுபது வீதமானோர் வலிகாமம் வடக்கைச் சேர்ந்தவர்கள் எனவும் யாழ். செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஆகவே இதுவரையிலும் மீள்குடியேற்றம் செய்யப்படாமலிருக்கின்ற குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலுமே தற்போது குடியிருக்கிறார்கள். அரசு கூறுவதுபோல் யுத்தத்திற்குப் பின்னரான நாட்களில் வடக்கு - கிழக்குப் பகுதிகள் இயல்பு நிலைக்கு இன்னமும் திரும்பியிருக்கவில்லை. உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் குடியிருந்துகொண்டு சித்திரைப்புத்தாண்டு தினத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதென்பது சாத்தியப்படாத விடயமாகும். இவ்வாறான சூழ்நிலைகளில் யுத்தத்திற்குப்பின்னரான காலங்களில் வந்த மூன்று சித்திரைப் புத்தாண்டு தினங்களும் வடபகுதியில் சோபையிழந்தமைக்கு இன்னமும் அம்மக்களது இயல்பு நிலை திரும்பியிராமையே பிரதான காரணியாகும்.

யுத்தத்திற்குப் பின்னரான காலங்களில் வடபகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நிரந்தர வீட்டுத்திட்டங்கள் அநேகமான பிரதேசங்களில் முழுமை பெறாமலேயே உள்ளன. இன்னும் சில பிரதேசங்களில் அதன் ஆரம்பக் கட்டப்பணிகளே தொடங்கவில்லை. இந்த நிலையில் மீள்குடியேறிய மக்கள் தகரக்கூடாரங்களிலும் ஓலைக்குடிசைகளிலும்தான் தற்போதும் குடியிருக்கிறார்கள். குறிப்பாக யாழ் மாவட்டத்தின் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் அநேகமான கிராம அலுவலர் பிரிவுகளில் நிரந்தர வீட்டுத்திட்டத்தின் ஆரம்பக் கட்டப்பணிகள் கூட இன்னமும் தொடங்கவில்லை. அத்துடன் இந்தப் பிரதேசத்தில் கரையோர வீதிக்கும் கடலுக்கும் இடைப்பட்ட சுமார் 200 - 250 மீற்றர் தூரம் வரையான நிலப்பரப்பு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இந்த நிலப்பரப்பில் மக்களுக்குச் சொந்தமான காணிகளும் உள்ளன. இந்த காணிகளுக்குச் சொந்தமான குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் இரவல் காணிகளிலேயே குடிசைகளை அமைத்து குடியிருக்கிறார்கள். இராணுவத்தினரின் வசமுள்ள அவர்களின் சொந்தக்காணிகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அதற்கு மாற்றீடாக வேறு காணிகளை வழங்குவதற்கோ சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. நிரந்தரக் காணிகள் இல்லாததைக் காரணம் காட்டி நிரந்தர வீட்டுத்திட்டப் பணிகளும் இழுபறி நிலையிலேயே உள்ளன.

ஆகவே, கோடைகாலத்தின் கொளுத்தும் வெயிலின் வெப்பத்தில் தகரக்கூடாரங்களிலும் ஓலைக்குடிசைகளிலும் வசிக்கின்ற மக்கள் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். குழந்தைகள் தொற்றுநோய்களுக்கு உள்ளாகின்றனர். இந்தச் சூழ்நிலைகளில் சித்திரைப் புத்தாண்டு தினத்தை சாதாரணமுறையில் கூட கொண்டாடக் கூடிய நிலையில் அந்த மக்களின் வாழ்க்கை நிலை சாதகமாக அமைந்திருக்கவில்லை.

நீண்ட காலமாக சிறைச்சாலைகளில் வாடுகின்ற தமிழ் சிங்களக் கைதிகள் விடுவிக்கப்படுவதோடு புனர்வாழ்வு நிலையங்களில் இன்னமும் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளையும் சமூகத்துடன் இணைத்து மஹிந்த அரசு தனது நல்லெண்ண சமிக்ஞையை முழு மனதுடன் வெளிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். யுத்தம் முடிவுற்று மூன்று ஆண்டுகளாகின்ற நிலையிலும் மக்களின் வாழ்விடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்றி மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்வதற்கு அரச தரப்பினர் இதய சுத்தியுடன் செயற்படவேண்டும். இதன் மூலமே இனங்களுக்கிடையிலான ஐக்கிய நிலை உருவாகுவதற்கான ஏதுநிலை தோன்ற வாய்ப்புண்டு. அரசதரப்பினர் தமிழ் மக்களை தற்போதும் சந்தேகமான கண்ணோட்டத்துடன் நோக்குகின்ற நிலையிலிருந்து விடுபடவேண்டும். இவையெல்லாம் நிறைவேறும் பட்சத்திலேயே ஜனாதிபதி கூறுகின்ற நாட்டினது இயல்பு நிலைக்கான புறச்சூழல் தோன்ற வாய்ப்புண்டு. இவ்வாறானதொரு இயல்பு வாழ்க்கைக்கு ஏதுவான சூழ்நிலை தோன்றிய பின்னரே அவரது புத்தாண்டு வாழ்த்துச் செய்தி நாட்டு மக்களின் மனங்களில் உண்மையான சமாதானத்தையும் சமத்துவத்தையும் எதிரொலிக்கச் செய்யும்.

தமிழ்நன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவம்

# விபத்தினால் விளைந்த உறவு

37வயதுடைய பெண் செர்றி அம்பிளின். மனிதநேயமும், சேவை மனப்பான்மையும் கொண்ட ஓர் நரம்பியல் மருத்துவர். பல்கோர் மனதைக் கவரும் விதத்தில் அழகிய கூந்தலையும் உடல்வாகினையும் கொண்டவள். சிறுவயதிலேயே தந்தையை இழந்த அவள் தனது தாயாருடன் வாழ்ந்து கொண்டு மருத்துவப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவள்.

நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணராவதற்கான மேற்படிப்பினை மேற்கொண்டிருந்தாள். அதுவே அவளது வாழ்வின் குறிக்கோளாகவும் இருந்தது. அதன் நிமித்தம் தனது குறிக்கோளினை அடையும் வரையில் திருமணம் செய்வதில்லை எனும் பிடிவாதத்துடன் தாயாருடன் அந்நாள்வரையில் வசித்து வந்தாள்.

சத்திரசிகிச்சை நிபுணராவதற்குரிய இறுதி ஓராண்டுப் பயிற்சியினை அவள் ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள புனித ஜோர்ஜ் மருத்துவமனையில் பெறவேண்டியிருந்தது. அது அவளின் இருப்பிடத்திலிருந்து சுமார் 1000 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ளதால், அவள் அங்கு தங்கியிருந்து பயிற்சியினை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

எனவே அவள் தனது காரில் ஜோர்ஜ் மருத்துவமனைக்குத் தனியே தனக்குத் தேவையான பொருட்களுடன் புறப்பட்டாள். அர்லிங்ரனில் இருந்து கென்டக்கி, நாயில்வில்லினூடாக ஜோர்ஜியா செல்லும் நீண்ட நெடுஞ்சாலையில் அவள் காரினைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

சுமாரான வேகத்தில் காரினைச் செலுத்திக் கொண்டிருந்த செர்றி அம்பிளின் மனதில் பல எண்ணங்கள் உருண்டோடின. அவள் பிறந்தநாள் தொட்டு இன்றுவரையில் தனது தாயாரைப் பிரிந்து தனியாக ஒருபோதுமே இவ்வளவு தொலைவு தூரத்தில் தங்கி வாழ்ந்ததில்லை. ஆனால் என்ன செய்வது? அவளது குறிக்கோளினை அடைவதற்கு பயிற்சியை மேற்கொள்ளவேண்டியது தவிர்க்கமுடியாததொன்றாக அமைந்துவிட்டதால், அவள் தாயாரை விட்டு விலகி இப்படியாக 1000 கிலோ மீற்றர் தொலைவில் தள்ளி இருக்கவேண்டியதாகிவிட்டது.

தாயாரைப் பற்றிய சிந்தனைகளில் ஈடுபட்ட நிலையிலும் நீண்ட நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் தென்படும் கோதுமை வயல்வெளிகள், பெரும் பண்ணைகள் இடையிடையே காட்சிதரும் குடிமனைகள் என்பவற்றையும் ஓரக் கண்ணால் பார்த்தவண்ணம் நெடுஞ்சாலையில் கூடிய கவனத்துடன் காரைச் செலுத்திக் கொண்டிருந்தாள் செர்றிஅம்பிளின்.

இலையுதிர் காலமாதலால் சற்று வெப்பம் அதிகமாகவே இருந்தது. ஆயினும் காரினுள் குளிரூட்டிச்சாதனம் இயங்கிக் கொண்டிருந்தது. 1000 கிலோ மீற்றரையும் அவள் 8 மணித்தியாலங்களில் அடைந்துவிடலாமெனக் கருதியிருந்தாள். அதன்படி அவள் மதிய உணவினை முடித்துக் கொண்டு வீட்டிலிருந்து ஒரு மணிக்குப் புறப்பட்டாள். இவ்வளவு தொலைதூரப் பயணத்தை அவள் முன்னர் எப்போதும் தனியனாக மேற்கொண்டதேயில்லை. அவளது வீட்டிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மருத்துவமனைக்குக் காலையில் காரில் செல்வதும் மாலையில் வீடு திரும்புவதுமே அவளது நாளாந்த கார்ப்பயணமாக விளங்கியது. இப்போதுதான் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் தூரப் பயணத்தை மேற்கொள்ளுகிறாள்.

காரின் ஸ்ரியரிங் வீலைப் பிடித்திருந்த அவள் கைவிரல்கள் சற்று மரத்துப் போவதை அவள் உணர்ந்தாள். உடல் பூராவும் ஒருவித சோர்வு தோன்றியது. எனினும் ஒருவாறு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு காரை ஓட்டிவண்ணமிருந்தாள். ஆயினும் அவளையறியாமலே கார் நெடுஞ்சாலையின் கோடுகளைத் தாண்டியும், தாண்டாமலும் விட்டுவிலகியும் தளம்பிய நிலையிலே சென்று கொண்டிருந்தது. தன்னைச் சற்று உற்சாகப்படுத்திக் கொள்வதற்காக பாடுவதற்கு முயற்சித்தாள். ஆனால் தொண்டை வரண்டிருந்ததால் அவளால் பாடமுடியவில்லை.

வெளியே வீசும் வெப்பக் காற்று சற்றே காரினுள் வருமாயின் சிறிது மாற்றம் ஏற்படும் என்பதால் காரின் குளிரூட்டியை நிறுத்திவிட்டு, காரின் யன்னல் கண்ணாடியைப் பதித்துவிட்டாள். திடீரெனக் காரினுள் வீசிய வெப்பக் காற்று அவளுக்கு அந்நேரத்தில் ஓர் விழிப்புணர்வினை ஏற்படுத்தியது.

18 சில்லுகளைக் கொண்ட நீளமான கனரக டிரக் வண்டியொன்று அதே நெடுஞ்சாலையில் ஜோர்ஜியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. அதன் சாரதி இருக்கையில் அமர்ந்திருந்தவாறு செலுத்திக் கொண்டிருந்தார், சற்றே நெட்டையானவரும், ஒல்லியான தோற்றத்தையும் உடைய ஜூடிபெக் 41 வயதான இவர் நல்ல அனுபவம் வாய்ந்த கனரக வாகன ஓட்டுனர்.


தன்னெதிரே காட்சியளிக்கும் நெடுஞ்சாலையினை வைத்தகண் வாங்காது வெறித்தவண்ணம் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தார். நெடுஞ்சாலை அவருக்கு ஒன்றும் புதியதல்ல. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இப்பாதையில் வாரத்தில் குறைந்தது இரு தடவைகளாவது பயணத்தை மேற்கொள்பவர். இவ்வாறான நெடுஞ்சாலைப் பயணங்களின்போது சில வாகன சாரதிகளின் அசட்டையாலும் தூக்கச் சோம்பலினாலும் நேரிட்ட பல விபத்துகளையும் அதன் கோர விளைவுகளையும் நேரில் கண்டு அனுபவம் பெற்றவர்.

அதன் நிமித்தம், அவர் வாகனம் ஓட்டுகையில் தான் மட்டும் அவதானமாக இருப்பது மாத்திரமன்றி தனக்கெதிரே வரும் போகும் வாகனங்களின் போக்கினையும் எப்பொழுதும் நன்கு அவதானித்த வண்ணமிருக்கும் பழக்கமுடையவர்.

மாலை 5 மணியாகிக் கொண்டிருந்தது. கதிரவனும் தன் இருப்பிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். மாலை நேரச் செந்நிறக் கதிரொளிகள் அப்பிரதேசத்தைப் பொன்னிறமாக்கிக் கொண்டிருந்தன.

தனது டிரக்கின் முன்னால் சுமார் ஒரு மணித்தியாலமாகப் பயணித்துக் கொண்டிருக்கும் செர்றிஅம்பிளின் காரை ஜூடிபெக் அவதானித்துக் கொண்டுதான் வந்துகொண்டிருந்தார். அக்காரின் சீரற்ற நகர்வும், சில வைபரங்களில் சாலையின் எல்லைக் கோட்டிற்கு அப்பால் தள்ளாடிச் சென்று மீள்வதையும் கண்ணுற்ற ஜூடிபெக் சற்று எச்சரிக்கை அடைந்தார். அதில் பயணிப்பவர் யார்? எத்தனைபேர்? எதுவுமே அவருக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் அவருக்குத் தெளிவாகப் புரிந்தது. அக்காரினைச் செலுத்துபவர் ஒன்றில் மது போதையிலோ அல்லது தூக்க அசதியிலோ உள்ளார் என்பதே அதுவாகும்.

நிகழவிருக்கும் விபரீதத்தினைத் தடுக்க நினைத்த அவர் தனது வண்டியின் ஹோர்ன் ஓங்கி ஒலிக்கச் செய்தார். பலன் எதுவும் கிட்டவில்லை. எனவே அடுத்த கட்ட நடவடிக்கையாக அக்காரினை நிறுத்துவதற்காகத் தனது வண்டியின் வேகத்தை அதிகரிக்கச் செய்து காரினை முந்திக் கடந்து சென்று அதனை நிறுத்துமாறு எச்சரிக்கை விளக்கினைப் போட்டார்.



தட்டுத்தடுமாறி நித்திரைச் சோம்பலில் காரைச் செலுத்திவந்த செர்றி அம்பிளின் எதிர்பாராதவிதமாக ஓர் பெரியவாகனமொன்று தன்னைக் கடந்து முந்திச் சென்று தனது காரை நிறுத்தும்படி சைகை செய்ததையும் கண்டு எச்சரிக்கையடைந்து காரினை நிறுத்தினாள்.

தனது வண்டினைவிட்டுக் குதித்து இறங்கிய ஜூடிபெக் காரின் பக்கமாகச் சென்று குனிந்து யன்னலினூடாக நோக்கினார். சாரதி இருக்கையில் இருந்த செர்றியை "மேடம் ஏதாவது பிரச்சினையா? ஏன் வாகனத்தை இப்படித் தள்ளாடிய வண்ணம் ஓட்டுகின்றீர்கள்" எனப் பவ்வியமாகக் கேட்டார்.

செர்றி சுருக்கமாகத் தனது உடற்சோர்வினையும், தனது பயணத்தின் நோக்கம், செல்லும் இடம் என்பவற்றினை அவருக்குக் கூறினாள்.

நிலைமையினைப் புரிந்துகொண்ட ஜூடிபெக் அவளிடம் "உங்கள் காரினை மெதுவாக எனது வண்டியின் முன்னால் செலுத்தியபடி செல்லுங்கள். நான் உங்களுடன் தொலைபேசி மூலம் தூங்க இடமளிக்காத வகையில் உரையாடியபடி வந்து கொண்டிருப்பேன்" என்று கூறிவிட்டுத் தனது வண்டியில் ஏறிச்செலுத்தத் தொடங்கினார்.

இப்பொழுது டிரக்கின் முன்னால் செர்றியின் கார் நிதானமாகப் பயணித்துக் கொண்டிருந்தது. ஜோர்ஜ் மருத்துவமனையை அடையும் வரையில் இருவரும் தொடர்ந்து தொலைபேசியில் உரையாடிய வண்ணமேயிருந்தனர். குறைந்தது இரண்டு மணித்தியாலங்களாவது எடுத்திருக்கும். இதற்குள் உரையாடல்கள் மூலமாக ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டனர். ஜூடிபெக் இன்னமும் திருமணமாகாதவர் அதுமட்டுமன்றி அவருக்குப் பெற்றோரோ அல்லது உறவினர்கள் எவருமேயில்லை என்பதையும் அறிந்து கொண்டாள் செர்றிஅம்பிளின்.

மருத்துவமனையை அடைந்ததும், செர்றி தன்னைப் பத்திரமாக அக்கறையுடன் கொண்டுவந்து சேர்த்தமைக்காக ஜூடிக்கு நன்றி தெரிவித்தாள். ஜூடிபெக் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

ஆறுமாதங்கள் உருண்டோடின. செர்றி ஜோர்ஜ் மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருந்தாள். ஜூடிபெக்கினை அதன்பின்னர் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவேயில்லை. ஆனால் அவர் மீது என்றுமே நன்றியுணர்வுடன் இருந்தாள்.

அன்று காலை ஜோர்ஜ் மருத்துவமனையின் அவசர எச்சரிக்கை ஒலி முழங்கியது. எதிர்பாராத விதத்தில் அவ்வெச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதன் காரணத்தை அறியும் ஆவலால் உந்தப்பட்டுக் கடமையில் இருந்த செர்றி தனது வார்ட்டினை விட்டு வெளியேறி மருத்துவமனையின் வாசற்பகுதியை விரைந்து அடைந்தாள்.

அங்கு அவசர நோயாளர்களை அனுமதிக்கும் பிரிவில் அவள் போன்ற சக மருத்துவர்கள், தாதிகள் கூடிநின்று பரபரப்புடன் எதையோ குனிந்து கவனிப்பதைக் கண்டாள். சென்றவேகத்தில் அங்கு நின்றவர்களை விலக்கிக் கொண்டு அங்கே கிடத்தப்பட்டிருந்த ஒரு மனித உருவத்தைப் பார்த்தாள்.

இரண்டு டிரக் வண்டிகள் ஒன்றுடன் ஒன்று நேரடியாக மோதிக் கொண்ட விபத்தில் பாதிப்புக்குள்ளான சாரதி ஒருவரின் உடலே அது என்பதை அங்கிருந்தவர்களிடம் கேட்டறிந்து கொண்டாள். உடலின் பலபாகங்களிலும் காயங்களும், இரத்தம் பெருகியபடி நனைத்திருந்தமையாலும் சாரதியின் முகத்தை இன்னாரென அடையாளங்கண்டு கொள்ள அவளால் முடியவில்லை.

இரண்டு கைகளும், கால்களிலும் முறிவுகள் ஏற்பட்டிருந்தன. விலாவெலும்புக்கூடு சிதைவடைந்திருந்தது. முகத்தின் கன்னங்கள், தாடைகள் உடைந்திருந்தன. இடது கண் வெளியே பிதுங்கிய நிலையில் இருந்தது. தொண்டையிலும், தோள்களிலும் உடைந்த கண்ணாடித் துண்டுகள் வெளியே தள்ளிக் கொண்டிருந்தன. இது எல்லாவற்றையும் விட மண்டையோடு பிளந்த நிலையில் அதனூடாக மூளைப்பகுதியின் அசைவு தெரியக் கூடியதாகவிருந்தது. "மிக விரைவாக முடிந்துவிட்டது. என்னால் நிறுத்தமுடியவில்லை" என அந்த வேதனைகளின் மத்தியிலும் அந்த உருவம் மெதுவாக முனகுவது கேட்டது. செர்றிக்கு அந்தக் குரலினை எங்கோ கேட்ட ஞாபகம், மூளையில் பொறிதட்டியது. ஆம் அது வேறுயாருமல்ல. ஆறுமாதங்களுக்கு முன்பாக அவளுக்கு விபத்து ஏதும் நேராவண்ணம் பத்திரமாகக் கொண்டுவந்து விட்டுப் போன ஜூடிபெக்தான் அது என்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டாள் செர்றி அம்பிளின்.

நன்றியுணர்வாலும், இவரை எதுவிதத்திலேனும் காப்பாற்றியாக வேண்டும் என்ற நினைவுடன் சுறுசுறுப்பாக இயங்கினாள் செர்றி. பெருகிவழிந்து கொண்டிருக்கும் இரத்தத்தினைப் பஞ்சினால் ஒத்தி எடுத்துக் கொண்டிருந்த சக மருத்துவரிடம் "அவரை நாங்கள் எந்த நிமிடத்திலும் இழக்கக்கூடும். முடிந்தவரையில் அவரை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள்" எனக் கூறிக் கொண்டு தாமதியாது காரியத்தில் இறங்கினாள் செர்றி.

"நீங்கள் சாகும் வயதல்ல, நீங்கள் இப்பவும் இளமையானவர் தான் மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள்" என அவரது காதில் குனிந்து மெல்லமாகக் கூறினாள் செர்றி. இவ்வளவு வேதனைகளின் மத்தியிலும் செர்றியின் குரலினைக் கிரகித்துக் கொண்ட ஜூடிபெக் அவளிடம் "நீங்கள் டாக்டர் செர்றி அம்பிளின் அல்லவா. என்னைச் சாகவிடாதீர்கள், நான் வாழவேண்டும்" என முனகினார். பதிலுக்கு அவளும் "உங்களை எப்படியும் காப்பாற்றியே தீருவோம்" எனக் கூறிவிட்டு அவரை அவசரமாகச் சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டாள்.

ஏனைய சகல மருத்துவர்களும் ஒன்று கூடினர். சத்திர சிகிச்சை அறைக்குக் கொண்டு செல்லப்பட்ட ஜூடிபெக்கிற்கு முறிவுகளுக்கான சிகிச்சைகளை மருத்துவர்கள் ஒரு புறமாக வழங்கிக் கொண்டிருக்கையில் மறுபுறத்தில் மண்டையோட்டின் சிதைவுகளுக்கு சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இரத்தம் ஏற்றப்பட்டது. காயங்களுக்கான தையல்கள் போடப்பட்டன. மூளையைப் பாதிக்காத விதத்தில் மண்டையோட்டிற்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. விலாவெலும்புக் கூடு, மற்றும் கண்ணிற்கான சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

சகல மருத்துவர்களும், 24 மணித்தியாலங்களாக அயராது போராடி ஒருவாறு ஜூடிபெக்கின் உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லையென்ற நிலைமையினை ஏற்படுத்தினர்.

அவரது உடல் தலையிலிருந்து கால்பெருவிரல் வரை புண்ணைச் சுற்றிக் கட்டும் வெள்ளைத் துணியினால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. அவரால் நகரவோ, கதைக்கவோ இயலாது. மரப்பொம்மை போல கட்டிலில் கிடந்தார்.

செர்றி கடமை நேரங்களைத் தவிர ஏனைய நேரங்களிலும் அடிக்கடி வந்து அவரருகில் இருந்து கவனித்துக் கொண்டாள். இரண்டு வாரங்களில் ஜூடிபெக் சற்று எழுந்து இருக்கும் நிலையை அடைந்தார். ஆனால் அவர் பழைய நிலையை அடைய முடியும் என்ற நம்பிக்கையை செர்றி இழந்துவிட்டாள். அத்துடன் குணமடைந்தாலும் அவரது புறத் தோற்றம் விகாரமாகவே இருக்கும் என்பதையும் உணர்ந்திருந்தாள்.

அடுத்தடுத்த மாதங்களில் அவருக்குப் பலதடவைகள் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு முகத்திலுள்ள விகாரத் தோற்றங்கள் குறைவடைந்தன.

விபத்து நடந்து ஐந்து மாதங்களில் பூரண குணமடைந்து மருத்துவ மனையைவிட்டு வெளியேறிய அன்றைய தினத்தில் செர்றி தனது முடிவினை ஜூடிபெக்கிற்குத் தெரிவித்தாள்.

திருமணமே முடிக்காது மருத்துவ சேவையாற்றிவந்த செர்றி அம்பிளின் தன்னுயிரைக் காப்பாற்றிய ஜூடிபெக்கைத் தனது வாழ்க்கைத் துணைவனாக முடிவு செய்து அதனையே அவரிடம் கூறினாள். இருவரும் திருமணம் புரிந்தனர். எதிர்பாராத விபத்தும் நன்மையில் முடிவடைந்தது.

தமிழில் - ஜெகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று நிகழ்ந்த அந்தப் பழைய நினைவுகளை மறந்துவிடத் துடித்தாலும் ஏனோ அந்தச் சிறுவனைக் காணும் தோறும் ரீச்சருக்கு அந்த நினைவுகள் மேலெழுந்து மனதை உறுத்தின. அன்று நடந்தவற்றை மீட்டுப் பார்க்கும் போதெல்லாம் ரீச்சர் வேதனைக்குள்ளே ஆழ்ந்து அச்சகதியிலிருந்து வெளியேறும் வகை காணாது தவித்தார்.

தான் செய்தவைகளைத் தவறென உணர்ந்து ஒப்புக் கொள்ளும் துணிவின்றி அவரைச் சூழ்ந்து பிடித்துக் கொண்ட கௌரவத்தின் பலம் அதிகரிக்க அதனைத் தனக்கான பாதுகாப்புக் கவசமாக அணிந்தவாறு அமர்ந்திருந்தார்.

அன்று விளையாட்டுப் போட்டிக்கான எல்லா ஆயத்தங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த உடற்பயிற்சி நிகழ்ச்சிக்கெனத் தேர்ந்தெடுத்த இரண்டாம் தரத்தில் கற்கும் மாணவன் ஆரூரனைக் காணவில்லை. ஆனால் அவனது வகுப்பு ஆசிரியை சித்திரா அவனை அங்கே அழைத்து வந்து இவனையும் சேர்த்துக் கொள்ளுங்கள் ரீச்சர் என்று சொன்னதை அவர் மறந்துவிடவில்லை.

# ஊமைத் துயரங்கள்

ஏனைய மாணவர்களைப் போல அவனையும் விருப்பமாகப் பயிற்சியில் சேர்த்துக் கொண்டபோது ஆரூரனின் உடலிலும் உள்ளத்திலும் புத்தம் புதியதோர் உற்சாகம். எல்லோருடனும் இணைந்து சேர்ந்து சிரித்து ஓடிப் பாய்ந்து விளையாடி மகிழ்ந்த அந்த அழகுக் காட்சி. ஒரு குட்டி முயலையே ரீச்சருக்கு நினைவூட்டி நிலைத்தது.

நாளை நடக்கப் போகும் விளையாட்டுப் போட்டியில் விருந்தினரை மகிழ்விக்கும் வண்ணம் சிறுவர்களைக் குதூகலிக்கச் செய்யும் உடற்பயிற்சியில் அவனுக்கான பங்களிப்பு உயர்ந்ததாகத் தெரிந்தது. அதற்கான சீருடையைத் தைப்பிக்க முன் கூட்டியே ஆயத்தங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு சிறுவருக்கும் அவரவர் உடைகளைத் தைப்பிக்க வகுப்பாசிரியர்களுக்கான அறிவுரை வழங்கப்பட்டது. அவர்கள் தமது வகுப்புப் பிள்ளைகளின் பெற்றோருக்கான குறிப்பைப் பயிற்சிக் கொப்பியில் எழுதி அனுப்பினர். பிங் கலர் காற்சட்டையும் வெள்ளை நிற பெனியனும் தேவை என்பதாய் எழுதப்பட்ட குறிப்பு ஒவ்வொன்றும் பயிற்சிக் கொப்பிகளின் மூலம் பெற்றோருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஆரூரனின் கொப்பியிலும் அது இருந்தது. இரண்டாம் தரத்தில் படிக்கும் முதிர்வடையாத சிறுவன் அந்தப் பயிற்சிக் கொப்பி பற்றியோ அதில் எழுதப்பட்ட



குறிப்புகள் பற்றியோ பெற்றோருக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற சிந்தனையோ செயற்பாடுகளோ அவனிடத்தில் இல்லை. வழமைபோல் அவன் சுமந்து திரியும் அவனது புத்தகப் பைக்குள்ளேயே தூங்கிக் கிடந்த பயிற்சிக் கொப்பியைத் தூக்கிக் கொண்டே இரண்டு தினங்களும் பள்ளிக்கான பயணத்தையும் பள்ளிக் காலத்தையும் ஓடியாடி முடித்தான்.

நாளைக்கு விளையாட்டுப் போட்டி. உடற் பயிற்சியில் சிறுவன் ஆரூரனும் ஒரு பங்காளன். அந்த நினைவு அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. தனது பயிற்சிச் சிறப்புகளை வீட்டிலே சொல்லிச் சொல்லியே ஆனந்தப் பெருக்கோடு ஆரூரன் துள்ளிக் குதித்தபோதுதான் அவனது தாயார் தவமணிக்கு உடற்பயிற்சிக்கான சீருடைபற்றிய எண்ணம் விரிந்தது அதுபற்றி எவரும் அவளுக்குத் தெரிவிக்கவில்லையே என ஆதங்கப்பட்டாள்

மகனிடத்திலிருந்த வீரமும் விவேகமும் கலந்த விளையாட்டும் குறும்பும் அவளின் மனத்தை மகிழ்வித்தாலும் அந்தச் சீருடை பற்றிச் சிந்தித்தபோது எவருமே அது பற்றித் தெரிவிக்கவில்லையே என அங்கலாய்த்தாள். அதுபற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளப் பாடசாலைக்குச் சென்றாள். அப்பொழுதுதான் அது நிகழ்ந்தது.

சிறுவரின் சீருடை பற்றிய விபரம் அந்தப் பயிற்சிக் கொப்பியில் என்றோ எழுதி அனுப்பப்பட்ட விடயம். அப்பொழுதுதான் அது தவமணிக்குத் தெரியவந்தது.

அறியாமையால் சிறிது கடுகடுப்போடு துடித்த அவர்களின் கருத்தாடல்கள் இருவரின் மனத்தையும் புண்படுத்தின. தவமணியும் ஓர் ஆசிரியர்தான் என்பதை அறிந்தபோது அவரது வாதாட்டம் நீண்டது அதனால் அவர் மீது விளைந்த காழ்ப்புணர்வும் ஆத்திரமும் சாந்தியடையச் சில நிமிடங்கள் சென்றன.

நாளைக்கு விளையாட்டுப் போட்டி.

நாளைக்கே ஆரூரனுக்குச் சீருடை வேண்டும் என்று சொன்னபோது அந்தச் செய்தி அவளை அவசரப்படுத்தியது. அவளது சீருடை தைப்பிக்கும் வேகம் வெறி கொண்டது. சீருடைக்கான துணியைத் தேடவும் அதனைத் தைப்பிக்கவும் அவள் துரிதமடைந்தாள். தைத்த கையோடு அதனைத் தனது மகனுக்கு அணிவித்து அழகுபார்க்கும் ஆசையும் பெருகியது

பிள்ளைகளுக்குத் தோன்றாத ஆசைகள் என்றுமே பெரியவர்களை ஆட்கொண்டுவிடுகிறது. பெற்றோருடன் கூடி ஆரூரனின் பாட்டன் பாட்டியும் அவனுக்கான சீருடை தேடும் வேட்டையில் தீவிரமாய் ஈடுபட்டனர்.

குறுகிய கால இடைவெளிக்குள் சிறுவனின் அந்த அழகிய உடற்பயிற்சிச் சீருடையைத் தைக்கும் அவசரம் அவர்கள் அனைவரின் தூக்கத்தையும் ஓய்வையும் கெடுத்தது. அவர்களை வேறு வேலையெதிலும் ஈடுபட எண்ணமிட அனுமதிக்காத ஒவ்வொன்றிய நாயாக்கி அங்கிங்கென்று ஓடித் தேடிக் களைக்க வைத்தது. அன்று மாலையில் தொடங்கிய முயற்சி மறுநாள் காலையையும் தாண்டி ஒருவாறு மதியத்திற்கு முன்னதாக வெற்றிகரமாக நிறைவெய்தியது

மனம் நிறைந்த மகிழ்வு கலந்த திருப்தியோடு ஆரூரன் இப்பொழுது பள்ளியில் நடைபெறப்போகும் உடற்பயிற்சியில் கலந்து கொள்ள ஆயத்தமானான். வீட்டார் அனைவரினதும் உள்ளங்களிலும் துள்ளிக் குதிக்கும் ஆனந்தம். குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே சீருடையையும் எடுத்துக்கொண்டு ஆரூரன் பள்ளிக்குப் போய்விட்டான். வழமைக்கும் முன்னதாகவே மகனைப் பள்ளிக்கு அனுப்பி வைத்த பெற்றோரின் முயற்சியில் பூரண திருப்தி.

எல்லோரிடத்திலும் சிறுவன் ஆரூரனின் உடற்பயிற்சி நிகழ்ச்சியைக் காணும் ஆவல். இடைவேளையின் போது விருந்தினரை மகிழ்வித்துச் சிறுவர்களின் திறமையை வெளிக்காட்டப் போகும் அரங்கேற்றம்.

உடற் பயிற்சி நிகழ்ச்சி தொடங்கி விட்டது.

உடற்பயிற்சி மைதானத்தில் தோன்றிய சிறுவர்களின் மத்தியில் ஆரூரனைத் தேடும் கண்கள். அவனது அழகிய அந்தப் பிஞ்சு முகத்தையோ அவன் உடற்பயிற்சியில் பங்கு கொள்வதற்காக வீட்டில் செய்து காட்டிய அந்த உடற்பயிற்சிக்கான அவனது அபிநயத்தையோ காணவில்லை.

ஆரூரனையே மைதானத்தில் காணவில்லை என்றபோது அவனது பெற்றோர் துடிதுடித்தனர்.

அவன் எங்கே போய் விட்டான்? தாய் பதைபதைத்தாள்

எங்கே என் மகன்? அவனை நான் எல்லா ஆயத்தங்களோடும் அனுப்பிவைத்தேனே! என்ற அந்தத் தாயின் தேடுதலோடு விரிந்த கேள்வி. அந்த விளையாட்டிடத்தைச் சுற்றி மரதனோட்டம் நடத்தியது. அவனைக் காணக் கூடி நின்றோர் கண்களில் ஆவல் பெருகின. அந்தரமும் அவசரமும் அவளை அடுத்த நிகழ்வுகளில் கவனம் கொள்ளச் செய்யவில்லை. உடற்பயிற்சி நிகழ்வு முடிந்த கையோடு ஆசிரியரைத் தேடி ஓடினாள்.

"உங்கட மகனை நான் விளையாட்டில சேர்க்கயில்லை"

"ஏன்?"

"அவன் பிந்தித்தான் வந்தவன்"

அதனைக் கேட்டதும் ஆத்திரமுற்ற தவமணி நாங்கள் எப்பவோ பிள்ளையை உங்களிடம் அனுப்பியிருந்தோமே என்றபோது அத்தாயின் ஆற்றாமை அழுகையாய் வெடித்தது.

அயலில் நின்ற பலரும் எங்கே பிள்ளை? எங்கே பிள்ளை? என்று கேட்டு அனைத்துத் திசைகளையும் துளாவினர்.

அவனோ அவனுக்கெனத் தைத்த அந்தப் பிங் கலர் காற்சட்டையையும் வெள்ளை நிறப் பெனியனையும் அடக்கி வைத்திருந்த பொலித்தீன் பையினைக் கட்டிப்பிடித்தவாறு கண்களில் கண்ணீர் மல்க விம்மி விம்மி அழுதான்.

"ரீச்சர் என்னை விளையாட்டில் சேர்க்கயில்லை கலைச்சுப் போட்டா" என்றபோது எழும் வேதனை விம்மல் அங்கே பார்த்து நின்ற பலரின் உள்ளத்தையும் தொட்டு வருத்தியது.

ஆற்றல் விரியும் அவனது சிறு பிள்ளைப்பருவம். தனது அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மாத்திரமல்ல, தனது பாட்டன் பாட்டிக்கும் உறவினருக்கும் கூட உவகையை ஏற்படுத்தும் ஏக்கக் கனவு கண்டிருந்தது. தனது ஆற்றல்களின் ஒரு துளியாகவே தான் கற்றவற்றை காண்பிக்கத் தூண்டிய ஆவலில் விழுந்த பெரியதோர் இடியாக அது அவனைத் துன்பத்தினுள் வீழ்த்தி நசித்தது.

அவனது சிறிய எல்லைக்குட்பட்ட சிந்தனைக்குள் விளைந்த ஆசை நிராசையானபோது அவன் அழுதான். அவனது விருப்புக்கும் வளர்ச்சிக்கும் துணைநின்ற அனைவருமே அதைப் பார்த்து வருந்தினர்.

மாலை இருண்ட வேளை விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்தன. அயலில் மரங்களில் உறங்கிக் கிடந்த வௌவால்கள் சிறகடித்துப் பறந்தன.

அந்தச் சிறுவனும் பெற்றோரும் வருந்தினர். இது யார் செய்த தவறு?.

சிறுகதை

செய்தி அறிந்து அந்தப் பாடசாலையின் அதிபர் அங்கே வந்தபோது ரீச்சர் தனது நியாயத்தை உறுதி செய்ய முந்தினாலும் அவரின் உள்ளிருந்த உண்மையும் சத்தியமும் அவரை உறுத்தியது.

தனது விருப்புக்குரிய தோழியின் மகனுக்கு உடற்பயிற்சியில் இடம் கொடுக்கும் புதிய திட்டமிடலுக்குள் ஆரூரனின் பதிவுகள் எல்லாமே ஒருதலைப்பட்சமாக அழிந்து போயின.

ஆரூரனின் தாயார் ரீச்சருடன் முதல்நாள் ஏதோ நியாயம் கேட்டுத் தர்க்கித்த ஆத்திரமும் அவரது கௌரவமும் சேர்ந்ததால் விளைந்த வெறுப்பும் பச்சிளம் பாலகன் ஆரூரனின் பிஞ்சு உள்ளத்தின் ஆசையைச் சிதைத்தது.

ரீச்சர் செய்த தவறைச் சரியென ஆதாரப்படுத்த அவரிடம் வார்த்தைகள் இல்லையெனினும் தவறை ஒப்புக்கொள்ளும் உயர்ந்த எண்ணமும் அவரிடத்தில் இருக்கவில்லை.

அதிபர் தொடக்கம் அதிகாரிகள் ஈறாக அவரது செயல் குறித்துக் கண்டித்த நிலையில் தவறை ஒப்புக் கொள்ளுதல் தன்னைத் தாழ்த்தித் தனது கௌரவத்தைப் பாதிக்கும் என்பதாய் எண்ணியவாறு அவர் தனது பக்கத்தை நியாயப்படுத்தத் துணிந்தார்.

எனினும் தனது தவறை ஏற்றுக் கொண்டு மீண்டும் அவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு இடம் தராது பணியாற்றும் நற்பண்பு வராத நிலையில்

"அவன் சரியான குழப்படி"

"அவன் பெரிய கெட்டிக்காரனில்ல"

"அவன் நல்ல பிள்ளையில்ல "

போன்ற வாதங்களால் ரீச்சர் தனது தவறிலிருந்து தப்பித்துக் கொள்ள முயன்றார். ஆனால் அவரது உண்மையான உள்ளம் உறங்க மறுத்தது. அது அவரது உயிரணுவை அசைத்துச் சீண்டிச் சித்திரவதை செய்தது.

தவறு செய்தவள் நானே என்ற எண்ணம் ரீச்சரை வருத்தினாலும் அவரை ஆட்கொண்டிருந்த வரட்டுக் கௌரவம் மன்னிப்புக் கேட்கவோ தவறை ஒப்புக் கொள்ளவோ இடம் தரவில்லை.

ஆரூரனின் பெற்றோரும் உறவுகளும் இப்பொழுது நடந்தவை எல்லாவற்றையுமே மறந்து மௌனித்துப் போனார்கள்.

அவரவர் செய்தவை அவரவரோடு என்று சொல்லிக் கொண்டே ரீச்சரின் செய்கையின் மூலம் பாதிப்புற்ற சிறுவனையும் அவன் சிறுபிள்ளைதானே என்றெண்ணி அவன் சிந்தனையையும் அனைவருமே மறந்தே போனார்கள்.

ஆனால் ஆரூரனைக் காணும் தோறும் உள்ளம் உறுத்த ஊமையாகி உறுத்தும் நினைவுகளால் ரீச்சர் அழுகுரல் ஆண்டவன் சன்னிதானத்தில் பேரொலியாய்க் கேட்பதாகத் தெரிந்தது.

"குட் மோர்னிங் ரீச்சர்" என்ற இனித்த குரலோடும் சிரித்த முகத்தோடும் ரீச்சரின் முன்னால் நிற்கும் ஆரூரனின் கூரிய பார்வை என்றென்றும் ரீச்சரை உறுத்தவே செய்யும்.

வெட்கமும் வேதனையும் கலந்த அந்தப் பழைய சம்பவத்தை நினைவுறுத்தும் ஆரூரனின் காட்சி ரீச்சரின் தொடரும் ஆசிரிய வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் தெளிவைத் தரும் தீபமாயின. ஒவ்வொரு வேளையும் அது தெளிவைத் தந்தன.

எம்மிடம் கற்பவர்கள் சிறுபிள்ளைகள்தாம் ஆனாலும் அவர்களோ எதிர்காலத்தை உருவாக்கும் மென்மையான உள்ளமுள்ள சிற்பிகள் என்பதாய் உரத்துச் சொல்லி அழுத்தும் அந்தச் சிறுவர்களின் பார்வைகள் ரீச்சரைச் சூழ்ந்து கொள்ள ரீச்சர் திக்குமுக்காடிப் போனார்.

-நெடுந்தீவு மகேஷ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநாவல்

# மௌன மனவெளிகள்

18

நா.யோகேந்திரநாதன்

காசிப்பிள்ளை முதலாளியின் சவாலும் அவர் காரின் கதவைக் கோபமாக அடித்துச் சாத்தி விட்டுப் புறப்பட்ட விதமும் அங்கு நின்ற இளைஞர் களைத் திகைக்க வைத்து விட்டன.

ஆனால் கனகரத்தினம் மட்டும் ஒருமுறை மெல்லப் புன்னகைத்தான். அவனின் முகத்தில் ஒரு அலட்சியம் இழையோடியது. சிவஞானம் மெல்லக் கேட்டான் "என்ன மச்சான் சிரிக்கிறாய் காசியர் எப்படிப்பட்ட நஞ்சன் என்டு தெரியும் தானே...?"

"தெரியும்" என்று சொல்லி இடை நிறுத்தி விட்டுப் பின் தொடர்ந்தான் கனகரத்தினம் "முள்ளை முள்ளாலை தான் எடுக்க வேணும். இவர் எந்தச் சாதித் தடிப்பை வைச்சு எங்கடை ஆக்களைச் சேர்க்க நினைக்கிறாரோ அதை வைச்சே நாங்கள் அதைக் குழப்ப வேணும்"

சுந்தரம் வியப்புடன் கேட்டான் "என்னென்டு?"

"சிங்கன் எங்கடை சாதிக்காரன்... என்னண்டு மணியாரன்மூலையாரின்ரை சுடலையிலை அவன்ரை பிரேதத்தை எரிக்கிறது? அது எங்கடை சுடலையிலை தான் எரிக்கவேணும் என்டு எங்கடை ஆக்களுக்கு விளங்கப்படுத்த வேணும்" சிவஞானத்திற்கும் அந்த யோசனை சரியாகவே பட்டது. ஆனால் அவ்விஷயத்தில் தோல்வியடைந் தால் காசிப்பிள்ளை சும்மா இருப்பார் என அவன் நம்பவில்லை.

"அது சரி.. ஆனால் அவர் அச்சுவேலி சங்கானைப் பக்கத்திலையிருந்து ஆக்களைக் கொண்டு வந்தால்...?"

கனகரத்தினம் சொன்னான் "அச்சுவேலி தவராசண்ணையின்ரை தங்கச்சி என்னோடை தான் யோகுணையிலை படிக்கிறாள். நான் இப்பவே ஒரு காரைப் பிடிச்சுக் கொண்டு போய் அவளோடை கதைச்சு தவராசண்ணைக்கு விஷயத்தை விளங்கப்படுத்திறன்.. தவராசண் ணையை மிஞ்சி அச்சுவேலிக்காரர் ஒருதரும் வரப் போறதில்லை"

"அது நல்ல யோசினை தான்" என ஆமோதித் தான் சிவஞானம்.

"சரி.. நான் வெளிக்கிடுறன் நீங்கள் போய் எங்கடை முக்கியமான ஆக்களைச் சந்திச்சு கதைச்சுப் போட்டு நேரை சுடலைக்கு வாருங்கோ" என்று விட்டுப் புறப்பட்டவன் "எதுக்கும் விதானை யாரிட்டையும் முழு விஷயத்தையும் சொல்லி வையுங்கோ" என்றான்.

பொன்னுக்குட்டியும் ஆலடிவெட்டையாரின் சுடலையில் சிங்கனின் பிரேதத்தை எரித்தால் நிச்சயம் பிரச்சினை வரும் என எதிர்பார்த்தார். எனவே அவர் இரகசியமாக இளைஞர்களை அழைத்து கொட்டன்கள், கத்திகள் என்பவற்றை சுடலைக்கு அருகில் உள்ள பற்றைகளுக்குள் மறைத்து வைக்க ஏற்பாடு செய்தார்.

சிவஞானமும் ஆலடிவெட்டை இளைஞர்களும் அங்கு வந்த போது ஒரு சிறிய சலசலப்பு ஏற்பட்டது. தம்பியன் இடுப்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். வில்லுக்கத்தி இடுப்பில் இருப்பதை ஒரு முறை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

பொன்னுக்குட்டி முன்னால் போய் சிவஞானத் திடம் "என்ன அலுவல்?" என்றார் முறாய்ப்புடன். சிவஞானம் சிங்கனுடன் சிலதடவைகள் பொன்னுக்குட்டி வீட்டுக்கு வந்து போயிருந்த போதிலும் அன்றைய நிலையில் அவனின் வரவு சந்தேகத்தையே ஏற்படுத்தியது.

"சிங்கண்ணன்ரை முகத்தை கடைசியாய் ஒரு முறை பார்த்துப் போட்டு போவம் என்டு வந்தனம்" எனச் சோகமாகச் சொன்னான். அவன் சொன்ன விதம் பொன்னுக்குட்டியின் சந்தேகத்தையும் கோபத்தையும் மழுங்கடித்து விட்டது. "போங்கோ.. போய் உங்கடை ஆக்கள் செய்த கெட்டித்தனத் தைப் பார்த்து விட்டு வாங்கோ" என்றார் பொன்னுக் குட்டி.

தலைமாட்டில் குத்து விளக்கு எரிய சாம்பிராணிக்குச்சி வாசனையில் சிங்கனின் பிரேதம் கிடத்தப் பட்டிருந்ததைக் கண்டதும் சுந்தரம் குளறி அழ ஆரம்பித்து விட்டான். சிவஞானத்துக்கும் அவனை யறியாமலே கண்கள் நீரைச் சுரக்க ஆரம்பித்தன.

கமலி சிவஞானத்தைக் கண்டதும் "பாத்தியே சிவஞானம் உன்ரை கூட்டாளின்ரை நிலைமையை?" எனக் கதற ஆரம்பித்து விட்டாள். சிங்கனின் காதலுக்கு எல்லாவித உதவிகளையும் செய்து ஊக்குவித்த சிவஞானத்தால் எப்படித்தான் அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியும்.

ஒருவாறு சிவஞானமும் சிநேகிதர்களும் சுதாகரித்துக் கொண்டு வெளியே வர பனை நிழலில் ஒதுங்கி நின்ற இளையவன் அவர்கள் அருகில் வந்தான்.

சிவஞானம் உறுதியான ஒரு முடிவுக்கு வந்தவனாகச் சொன்னான் "இளையவன் சிங்கண்ணனின்ரை பிரேதம் நாங்கள் இரண்டு பகுதியும் சேர்ந்து தான் காவ வேணும்? ஒரு பக்கம் நீங்கள் பிடியுங்கோ.. மற்றப்பக்கம் நாங்கள் பிடிக்கிறம்"

இளையவன் திகைத்துப் போய் விட்டான். பின் அவன் மெல்லக் கேட்டான் "பிறகு பிரச்சினை வராதே?"

"வராது.. அப்பிடி வந்தால் இரண்டு பகுதியும் சேர்ந்து முகம் குடுப்பம். இந்தச் சாதி வெறி சிங்கண்ணன்ரை சாவோடை அழிஞ்சு போகட்டும்.. நீ போய் உங்கடை ஆக்களோடை கதை"

இளையவன் போய் விஷயத்தைச் சொன்ன போது மணியாரன்மூலை இளைஞர்கள் உடனடியாகவே சம்மதித்து விட்டனர். ஆனால் பெரியவர்கள் சற்றுத் தயக்கம் காட்டினர்.

வல்லியப்பு நேராக சிவஞானத்திடமே வந்துவிட்டார் 'தம்பி! எங்கடை சனங்களை கலைக்கிறதென்டு முடிவு எடுத்திட்டியளோ?"

சிவஞானத்திற்கு மெல்லிய கோபம் வந்து விட்டது "பிள்ளை சாகிற மட்டும் கமக்கட்டுக்கை சால்வை வைச்சுக் கொண்டு திரியப் போறியளோ?"

வல்லிபேல்லஇழுத்தார் விதானையார்



என்ன சொல்லுறாரோ தெரியாது.."

"அதை நாங்கள் பார்க்கிறம்" என்றான் சிவஞானம் உறுதியுடன். சவக்கிரியைகள் முடிந்து பிரேதம் தூக்க ஆயத்தங்கள் நடந்த போது விதானையார் வந்தார். அவர் ஏற்கனவே தோய்ந்து துடக்கு கழித்து விட்டதால் காரை விட்டு இறங்கவில்லை. அவர் காரில் அமர்ந்தவாறே பொன்னுக்குட்டியை அழைத்து "நாங்கள் முன்னாலை சுடலைக்குப் போறம் கெதியாய்க் கொண்டு வாங்கோ" என்று விட்டு காவலுக்கு வந்த பொலிஸ்காரரையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்.

அவர் சுடலையைச் சென்றடைந்த போது கனகரத்தினம் அங்கு நின்றது அவருக்கு ஒரு மெல்லிய சந்தேகத்தை மூட்டியது.

அவர் அவனை அருகில் அழைத்தார்.

அவனும் ஒரு மெல்லிய புன்னகையுடன் அவருக்கருகில் வந்தான்.

"என்ன இஞ்சை நிக்கிறாய்..?"

கனகரத்தினம் ஒரு பெருமூச்சுடன் சொன்னான் "கடைசியாய் சிங்கன்ரை முகத்தை ஒருக்கால் பாப்பம்"

அவன் தீய நோக்கத்துடன் வரவில்லை என்பதை அவர் புரிந்து கொண்ட போதிலும், எதற்கும் முன்னெச்சரிக்கையுடன் அவனைத் தன்னருகிலேயே வைத்திருப்பது என முடிவு செய்து கொண்டார்.

பிரேதம் சுடலையடிக்கு வந்த போது விதானையார் மட்டுமின்றி கனகரத்தினமும் திகைத்து விட்டான். ஒரு புறம் மணியாரன்மூலை இளைஞர்களும், மறுபுறம் ஆலடிவெட்டை இளைஞர்களும் பிரேதத்தைக் காவிக் கொண்டு வந்தனர்.

எந்தச் சாதியமைப்பு தகர்ந்து விடக்கூடாதென்பதற்காக அவர் இரு சாதிகளுக்கும் மோதல் வராமல் தன் ஆற்றல் முழுவதையும் பயன் படுத்தினாரோ அந்தச் சண்டை வராமலே சாதிக் கட்டுக் கோப்பு உடைவதற்கான கதவு திறந்து விட்டதை அவர் புரிந்து கொண்டார். மெல்ல முகம் ஒரக் கறுத்தது.

"தம்பி.. டேய்.. என்னடா.. உங்கடை பொடியள் செய்யிற வேலை?" என மெல்லக் கேட்டார் விதானையார்.

"ம் காலம் மாறிக் கொண்டு வருகுது.. இனி நாங்கள் இப்படியான விஷயங்களைத் தடுக்க ஏலாது"

"இருக்கலாம்.. சிங்கனைத் துவக்கெடுத்துச் சுட்ட உங்கடை ஆக்கள் இவங்களை விடுவாங்களே.. நாளைக்கு மணியாரன்மூலையார் கூட உங்களை மதிப்பாங்களோ.." விதானையார் மெல்லிய படபடப் புடன் கேட்டார்.

"சுடட்டும் எங்கடை ஆக்கள் செய்யிறதைச் செய்யட்டும். இரண்டு சாதியள் ஒன்றோடை ஒன்டு அடிபடுறதை விட ஒரு சாதியுக்கை அடிபடுவம்"

விதானையார் எதுவும் பேசவில்லை. யோதனைப் பல்கலைக்கழகம் அவனைக் கெடுத்து விட்டதாக எண்ணிக் கொண்டார். ஆனால் தனக்குள் இந்தச் சாதிக் கட்டமைப்பைத் தகர்க்கும் முனைப்பு களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என முடிவு செய்து கொண்டார்.

கமலி வீட்டில் வைத்துக் கொள்ளியை மூட்டிக் கொடுக்க பொன்னுக்குட்டியே சுடலையில் முறைப்படி பிரேதத்தைச் சுற்றி வந்து கொள்ளிக் குடம் உடைத்துக் கொள்ளி வைத்தார்.

இவற்றையெல்லாம் பார்த்த போது விதானையாரின் மனசில் ஏதோ ஒரு விதமான உறுத்தல் நெருடிய போதும் அவர் எதுவுமே பேசவில்லை.

சுடலையில் எவ்வித அசம்பாவிதங்களுமின்றி எல்லாக் காரியங்களும் முறைப்படி நடந்து முடிந்தன.

விதானையார் வீட்டில் வந்து இறங்கிய போது அவரின் வருகைக்காக காசிப்பிள்ளை காத்தி ருந்தார்.

விதானையார் வீட்டுக்குள் வந்த போதே "என்ன காசி இன்டைக்கு ஏதோ சுடலையிலை அஞ்சாறு பேரை விழுத்தாமல் விடுறதில்லை என்டு துள்ளினியாம் ஒன்டையும் காணவில்லை?" என்றார்.

காசிப்பிள்ளை தலையைக் குனிந்தவாறே ஒரு பெருமூச்சுடன் "அதுதான் துணிஞ்சு உதுகளிலை இறங்கக் கூடிய பொன்னம்பலத்தையும், இராமலிங்கத்தையும் பிடிச்சு அடைச்சுப் போட்டியள்" என்றார்.

"பின்னை, உங்கடை பொடியன் ஒருதனை நீங்களே சுட்டதுக்கு உங்களைத் தலையிலை வைச்சு ஆடுறதே?"

காசிப்பிள்ளை எதுவுமே பேசவில்லை.

விதானையார் தொடர்ந்தார் "டேய்.. சாதி அமைப்பு உடையாமல் இருக்க வேணுமெண்டால் சண்டை வரக் கூடாது. சண்டை என்டு வந்தால் அவங்களும் உங்களுக்கு எதிராகக் கை ஓங்கிப் போட்டால் தோற்றாலும் வென்டாலும் அவங்கள் துணிஞ்சிடுவாங்கள்"

காலங் காலமாக எப்படி இந்த நிலப்பிரபுத் துவக் கூட்டம் சாதியமைப்பைச் சிதைய விடாது பாதுகாக்கிறது என்பது காசிப்பிள்ளைக்கு இப்போது மெல்ல மெல்ல புரிய ஆரம்பித்தது.

"நீ செய்த மோட்டு வேலையாலை உங்கடை சுடலையிலை அவங்கள் பிரேதம் எரிச்சிருக் கிறாங்கள். நாளும் மறிக்க ஏலாது. வென்டால் பிரேதம் உங்கடை பிரேதம், உங்கடை பொடியன் களும் அவங்களும் ஒன்டாய் பிரேதம் தூக்கியிருக் கிறாங்கள்" அதிர்ச்சியுடன் கேட்டார் காசிப்பிள்ளை "என்ன அவங்களோடை சேர்ந்து எங்கடை பொடியலும் பிரேதம் தூக்கினவங்களோ?"

"சிங்கன்ரை பிரேதத்தை அவன்ரை சிநேகிதப் பொடியள் தூக்கிறதை ஆரும் தடுக்க ஏலுமே?" என்ற விதானையார் "இப்படியான விஷயங்களை கெட்டித்தனமாகக் கையாள வேணும்.. போய் வேறை ஏதாவது புதுக்குழப்பம் தொடங்காமல் பேசாமல் இரு. எல்லாம் நான் பாப்பன்" எனக் கூறி முடித்தார்.

ஆலடிவெட்டையாரும், மணியாரன்மூலை யாரும் இரு பக்கங்களிலும் நின்று சமமாகத் தோள்கொடுத்தும் பிரேதம் தூக்கினர் என்ற வார்த்தைகள் உள்ளே நின்ற சொர்ணத்தின் காதுகளில் விழுந்தன. வேளாருடனும் அவர்கள் சமனாகும் நாள் வெகு விரைவில் வந்து விடும் போலவே அவளுக்குத் தோன்றியது.

இளையவனை, அவள் நினைத்துக் கொண் டாள். ஆயிரமாயிரமாக அவன் மேல் நம்பிக்கை நட்சத்திரமாகப் பொழிவது போல் தோன்றியது. ஓடிப் போய் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். ஏனோ அவளின் முகம் நாணத்தில் சிந்தது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்




கருக்கொண்ட நாள் முதல்
கவலைகள் தான் மறந்தாய்
நான் உருப்பெறும் நாளை எண்ணி
உத்தமியே! கனவு கண்டாய்!

உதிரத்தைப் பாலாக்கி
மடியினைத் தொட்டிலாக்கி
உன் விழியினை விளக்காக்கி
என் விடியலுக்கு ஒளி தந்தாய்!

விரல் பிடித்து
மொழி பழக்கி
உன் உடல் வருத்தி
என் உயிர் வளர்த்தாய்!

நான் பட்டம் பெற்ற போது - நீ
பட்ட துன்பம் மறந்தாய்
உச்சி மோந்து மகிழ்ந்தாய்
இந்த உலகம் தன்னை மறந்தாய்!

சுற்றும் பூமி தன்னில் - நாம்
பற்றும் தெய்வம் பல்லாயிரம்
என்னைப் பெற்ற அன்னை நீயே
நான் முற்றுணர்ந்த தெய்வம்

உருக்கொடுத்த உயிரே
என் உயிர் பிரியும் போதும்
மறு பிறப்பில் மகனாய்
உன் மடி தவழ வேண்டும்.

க. செல்வமலர்
விநாயகபுரம் - 02
திருக்கோவில்.

## புரியாத புதிர்


நீ என்னை வெறுத்த போதிலும்
என்னால் உன்னை வெறுக்க முடியல
நீ என்னை மறந்த போதிலும்
என்னால் மறந்து வாழ முடியல

என் கனவுகள் உன்னால்
கருகிய போதிலும் - உன்
கற்பனை இன்றி - என்
கண்களால் உறங்க முடியல


என் நினைவுகள் உன்னுள்
சுமையான போதிலும் உன்
நினைவுகள் இன்றி - வாழ்க்கை
பயணத்தை தொடர முடியல.

நீயோ! வாழ்வில்
பொய்யான போதிலும்
உனை மறக்கவோ
வெறுக்கவோ
நினைவை ஒதுக்கவோ முடியல
இதுதான் உண்மைப் பாசமோ?
அதுவும் ....இன்னும் எனக்கு
புரியல.....

க. ஜனுப்பிரியா
திருவையாறு.



## காதல்



[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கலைச்சிந்து
கலவெட்டித்திடல்

## சித்திரை பூத்தது



சித்திரை பூத்தது
சீரும் தந்தது
இத்தரை மகிழ்ந்தது
இதயம் நனைந்தது.

நற்றவை நயந்தது
நலிவும் பொலிந்தது
நலங்கள் பிறந்தது
நாலும் நிறைந்தது

புதுமைகள் சொரிந்தது
புதுயுகம் என்றது
உரிமையும் வெற்றி
உறுதியும் பிறந்தது

க. நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

## விளக்குமாறு

விளக்குமாறு என்பது
விளக்கி வைத்திடும்
வெறும் ஓர் பொருளன்று
விளக்கம் பலவுரைக்கும்
விசயமுள்ளது அது

தன்னையே அசுத்தமாக்கி
பிறர் மனையை
அழகு ஆக்கும்
அற்புத பணி இதற்கு

தேய்ந்தும்
செத்துக்கொண்டிருந்தாலும்
உன் வீட்டினை
உயிர்பெற வைக்கிறதல்லவா?

இவ்வாறு விளக்குமாறும்
ஒதுங்கியே இருப்பது
உங்களுக்குப் பயந்தல்ல
அடுத்தவர்க்காய் உழைத்தும்
ஆணவம் கொள்ளாதிரு
அதை உணர்த்தவே

யோ. புரட்சி
வள்ளுவர்புரம்

## முயன்றால் முடியும்


விஞ்ஞான உலகிலும் - நீயும்
விந்தைகள் செய்துவிடு
நெஞ்சிலே வீரத்துடன்
அஞ்சாது இன்றே.

வேல்மகள்
புளியம்பொக்கணை.

## பெண்ணே!

பெண்ணே!
என்ன சிந்தித்துக் கொண்டிருக்கின்றாய்
ஏன் மௌனம் சாதிக்கின்றாய்
ஏன் பிறந்தோமென்றா - அல்லது
ஏன் படைத்தானென்றா ...
வேண்டாம் பெண்ணே மௌனம்
உன்னை உலகம் முட்டாளாக்கி விடும்
வாழ்க்கை என்பது ஒரு போர்க்களம்
இதில் நீ வெற்றி பெறு
தோல்வியை நினைத்து வெம்பாதே
இருப்பதை எண்ணி மகிழ்
உலகத்து ஒளி விளக்கு நீ!
அன்புக்கு அடைக்கலம் நீ!
உருவாக்கும் கருவறை நீ!
நீ அஞ்ச வேண்டியதில்லை.
பெருமைப்பட வேண்டும்.

ஆர். யாழினி
யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறை வணக்கம்



விழாவைச் சிறப்பித்த விருந்தினர்கள்....



பாயத் தயாராகும் காளைகள்....

சுடர் ஒளி, உதயன் அனுசரணையுடன் அமரர் முத்துக்குமாரு சிவபாலன் (பேபி) ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியும் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சியும் அண்மையில் வட்டுக்கோட்டை கொத்துத்துறைத் திடலில் வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என பல மாவட்டங்களிலிருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட காளைகள் கலந்துகொண்டன. பல மாவட்டங்களிலிருந்தும் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில் இந்த மாபெரும் சவாரிப் போட்டி கலகலப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சவாரிப்போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற வெற்றியாளர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

சவாரிப்போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்த திடலில் விழிப்புலனற்றோர் சங்கத்தின் மாபெரும் இன்னிசை நிகழ்வும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



வெற்றிப் பாதையை நோக்கி....



அறிவிப்புப் பணியில்....



4 வருடங்களாக பலபோட்டிகளில் 28 தடவை வெற்றி வாகை சூடிய காளைகள்



விழிப்புலனற்றோர் இசை நிகழ்ச்சி....



சுடர்ஒளி - உதயன் அனுசரணையில் இடம்பெற்ற

# மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி



படங்கள்: நிமல்சன்

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வெற்றி வாகை சூடிய வீரருக்கு துவிச்சக்கர வண்டியை வழங்கும்போது...

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பாரியார் வெற்றியாளர்களுக்கு கைவிசேசம் வழங்கும்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திராவில் 3 ஹம்மி

தனுஷ்-ஸ்ருதி ஜோடியாக நடித்த 3 படம் ரிலீசாகி ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படம் ஆந்திராவில் தெலுங்கில் டப்பிங் செய்தும் வெளியிடப்பட்டது. தெலுங்கு டப்பங் உரிமையை வாங்கி 3 படத்தை ரிலீஸ் செய்த ஆந்திர தயாரிப்பாளரும் விநியோகஸ்தருமான நட்டி குமார் தனக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பரபரப்பான புகார் அளித்துள்ளார்.

ஐதராபாத்தில் அவர் அளித்த பேட்டி வருமாறு:-

தனுஷ்-ஸ்ருதி நடித்த 3 படத்தின் தெலுங்கு உரிமையை ரூ.4.3 கோடிக்கு வாங்கினேன். ஆந்திராவில் தனுசுக்கு உள்ள மார்க்கெட் ரூ.10 லட்சம்தான். இவ்வளவு பெரிய தொகை கொடுத்து படத்தை வாங்குகிறாயே என்று பலரும் என்னை கண்டித்தனர்.

ரஜினி குடும்பத்தினர் மீது இருந்த நம்பிக்கையில் படத்தை வாங்கினேன். ஐஸ்வர்யா இயக்கி இருந்ததால் நல்ல வரவேற்பு இருக்கும் என்று கருதினேன். 3 படத்தை ஆந்திராவில் விளம்பரப்படுத்துவதற்காக ஏப்ரல் 1-ந்தேதி ஐதராபாத் வருவதாக தனுசும், ஐஸ்வர்யாவும் என்னிடம் உறுதி அளித்தனர். ஆனால் அதன்படி அவர்கள் வரவில்லை.

படத்தின் சிறப்பு காட்சிக்கு வருவதாக சொல்லியும் வரவில்லை. இருவரும் என்னை ஏமாற்றி விட்டனர். ஆந்திராவில் இந்த படம் எதிர்பார்த்தபடி ஓடவில்லை.

இதனால் எனக்கு பெருமளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு நட்டி குமார் கூறினார்.

# அப்பா ஆலோசனைகளை மட்டும் வழங்குவார்



ஸ்ருதிஹாசன்

3 படத்தில் தனுஷ் ஜோடியாக நடித்திருக்கிறார் ஸ்ருதிஹாசன். இந்த படத்தில் தனது நடிப்பை பார்த்து பலரும் பாராட்டியதாக கூறியிருக்கும் ஸ்ருதி, தனது தந்தை நடிகர் கமலஹாசன் பாராட்டியதை பெருமையாக நினைக்கிறேன் என்று கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், தமிழ் தவிர பிற மொழிகளிலும் நடித்து வருகிறேன். 3 படத்துக்கு பிறகு, நான் நடித்து வரும் படம் கப்பார் சிங், தபாங் படத்தின் தெலுங்கு ரீமேக் ஆகும். எனது தந்தை ஒரு நடிகர் என்ற முறையில் எனது படங்கள் குறித்த அவரின் கருத்தையும் கேட்பேன். ரொம்ப பிடித்திருப்பதாக அவர் சொல்வார். நான் சந்தோஷப்படுவேன். உண்மையிலேயே அவருடைய மகள் என்பதற்காக என்னை அவர் பாராட்டமாட்டார். விமர்சிப்பதில் அவர் பாரபட்சம் காட்டமாட்டார். அவர் விமர்சனம் வெளிப்படையாகவும், நேர்மையாகவும் இருக்கும். அவரது விமர்சனம் எனது வளர்ச்சிக்கு உதவியாக இருக்கிறது. அவர் ஒருபோதும் அறிவுரை கூறுவது கிடையாது. ஆலோசனைகளை மட்டுமே வழங்குவார். சினிமாவில் நடிக்கும்போது, அந்த பாத்திரமாகவே மாறிவிட வேண்டும். பிற பாத்திரங்களுடன் (ரோல்) ஒப்பிட்டு பார்க்க கூடாது என்பார். அவரது இந்த பாடமே, சினிமாவில் நான் வெற்றி பெற வழிகாட்டியாக இருக்கிறது.

3 படத்தின் இந்தி மொழிப் பதிப்பை பார்த்து விட்ட எனது தாயார் சரிகா, என் நடிப்பை பாராட்டினார். நான் நடிக்கும் ஒவ்வொரு படத்திலும், அந்த பாத்திரமாகவே நான் மாறி விடுவேன். 3 படத்தில் வரும் அழுகை காட்சி கூட, சினிமாவுக்காக ஒப்புக்காக அழவில்லை. அந்த பாத்திரத்தின் வலியை உணர்ந்து அழுதேன், என்று கூறியுள்ளார்.

# சினி துளிகள்

★ பிரசன்னாவிடம் மிகவும் பிடித்தது அவர் பேசும் தமிழ்தானாம். அது தான் அவர் மீது சினேகாவுக்கு காதல் வர காரணமாம்.

★ ஜோஷி இயக்கும் மலையாள படத்தில் மோகன்லால் ஜோடியாக நடிக்க தமிழ் பட ஹீரோயினை தேடுகிறார்கள்.

★ ஹொலிவுட் படங்களை தொடர்ந்து கோலிவுட்டில் மை டியர் குட்டிச் சாத்தான், அம்புலி, அதிசய உலகம் என 3டி படங்கள் உருவாகிறது. ஆனால் பாலிவுட்டில் 3டி படங்கள் தயாரிக்க தயாரிப்பாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

★ கடந்த வருடம் நல்ல ஆண்டாக அமையட்டும் என்று நடிகர், நடிகைகள் வாழ்த்து அனுப்பியும் சரியாக அமையாததால் இந்த ஆண்டு தனது 50வது பிறந்தநாளுக்கு நட்சத்திரங்கள் அனுப்பிய வாழ்த்தை ஏற்க மறுத்துள்ளார் ராம் கோபால் வர்மா.

★ கடல் படத்தில் நடிக்கும் அர்ஜுன், அரவிந்த்சாமி நெருங்கிய நண்பர்களாகி விட்டார்களாம்.

# விமர்சனம்
## மாசி



வெறும் பொலிஸ் இன்ஸ்பெக்டராக மட்டுமே இருந்து கொண்டு இண்டர்நேஷனல் அதிகாரிகளையும் ஆடச் செய்யும் நேர்மையான பொலிஸ் அதிகாரி மாசி எனும் ஆக்ஷன் கிங் அர்ஜுன்! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என செயல்படும் அர்ஜுன், அதனால் குடும்பம் உள்ளிட்ட ஏராளமான விஷயங்களை இழந்தாலும், அதுபற்றி கவலைப்படாமல், நேர்மை ஒன்றை குறிக்கோளாக அதிரடி பண்ணி அக்யூஸ்ட்டுகளை வெளுத்து வாங்குகிறார்.

ஒரு கட்டத்தில் அவரது நேர்மையே அவரது காக்கிச் சட்டைக்கு உலை வைக்க, அதில் கொதித்தெழும் அர்ஜுன், இண்டர்நேஷனல் தாதா நாகா எனும் பிரதிப் ராவத்தின் பொலிஸ் கையாள் போன்று நடித்துக் கொண்டே பாலாசிங், தூள் சகுந்தலா, பொன்னம்பலம், சந்தானபாரதி, கோட்டா சீனிவாசராவ், பிரதிப்ராவத் என அரை டசினுக்கும் மேற்பட்ட பொலிஸிலும், வெளியிலும் உள்ள வில்லன்களை போட்டுத்தள்ளுவதுடன் ஹேமா, அர்ச்சனா எனும் இரண்டு நாயகிகளுடன் டூயட் பாடுவதும் தான் மாசி படத்தின் கரு, கதை, களம் எல்லாம்!

வழக்கமான அர்ஜுன் பட பார்முலா கதைதான் என்றாலும், அதை கலக்கலாக எழுதி, இயக்கி இருக்கும் விதத்தில் கவருகிறார் இயக்குநர் ஜி.கிச்சா!

அர்ஜுன் வழக்கம் போலவே, பொலிஸ் அதிகாரியாக நம்பமுடியாத அளவிற்கு புகுந்து விளையாடியிருக்கிறார். நாயகிகள் ஹேமா, அர்ச்சனா தலா இரண்டு டூயட் பாடிப்போவதோடு சரி! ஆக்ஷன் படத்தில் அவர்களுக்கு வேறென்ன வேலை...?!

இண்டர்நேஷனல் வில்லன் தாதாவாக பிரதிப்ராவத், பொன்னம்பலம், கோட்டா சீனிவாஸராவ், சந்தானபாரதி, கவுதம், பாலாசிங், தூள் சகுந்தலா, மயில்சாமி உள்ளிட்டவர்கள் தங்களது பங்கை சரியாகச் செய்துள்ளனர்! அதிலும் மயில்சாமி - அர்ஜுன் சம்பந்தப்பட்ட காமெடி காட்சிகள் நன்றாக இருக்கின்றன. எஸ்.கே.பூபதியின் ஒளிப்பதிவு, தினாவின் இசை இவையும் அசத்தலாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சினி.. பிட்ஸ்

## கோச்சடையானில் நல்லபெயர் கிடைக்கும்

பாரதிராஜாவின் பொம்மலாட்டம் படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை ருக்மணி. பெங்களூருரில் பிறந்து வளர்ந்த ருக்மணி, சிறு வயதிலேயே பரதம் கற்று தேர்ச்சி பெற்றுள்ளார். அசாத்திய தைரியமும் தன்னம்பிக்கையும் ருக்மணியின் பலம். பொம்மலாட்டம், ஆனந்த தாண்டவம் படத்திற்கு பின் இப்போது ரஜினிகாந்தின் கோச்சடையான் படத்தில் ஒப்பந்தமாகியுள்ள ருக்மணி நீண்ட நாள்களுக்குப் பின் நடிப்பது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

சினிமா தான் எனக்கு உலகம் என்பது கிடையாது. சிறுவயது முதலே பரதம் கற்றதால், அதுதான் எனக்கு உயிர். இடையில் சில படங்கள் கிடைத்ததால் நடித்தேன். ஆனால் அதன்பிறகு ஏனோ சரியான படங்கள் எதுவும் வரவில்லை. நான் எப்பவும் போல பல்வேறு நாடுகளில் நடந்த டான்ஸ் நிகழ்ச்சியில் பங்கேற்று வந்தேன். இப்போது கூட அமெரிக்காவில் என்னோட டான்ஸ் நிகழ்ச்சி இருக்கு. நல்ல கதை மற்றும் நடிப்பை வெளிப்படுத்தும் விதமான படத்தில் நடிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். சும்மா வந்து போவதில் எனக்கு விருப்பம் இல்லை. நானா நடிக்க மாட்டேன்றேன், நல்ல படம் கிடைக்கணுமே, இப்போது நடித்து வரும் சரித்திர படமான கோச்சடையானில் எனக்கு நல்ல பெயர் கிடைக்கும் என நம்புகிறேன் என்று கூறியுள்ளார்.

## தனுஷ் மீது ராக்கி சாவந்த் பாய்ச்சல்

ஜோடி போட்டு நடனம் ஆடாததால் தனுஷ் மீது பாய்ந்துள்ளார் பாலிவுட் ஹீரோயின் ராக்கி சாவந்த். பாலிவுட்டில் அவ்வப்போது பிரச்சினைகளில் சிக்கி பரபரப்பை ஏற்படுத்துபவர் ராக்கி சாவந்த். இவர் மும்பை நிகழ்ச்சியொன்றில் தனுஷுடன் மேடையில் தோன்றி ஒய் திஸ் கொல வெறி டி பாட்டுக்கு நடனம் ஆட ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். இதற்கான ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தது. முதலில் நடனம் ஆட ஒப்புக்கொண்ட தனுஷ் திடீரென்று ஆட மறுத்துவிட்டார். விழாவுக்கும் செல்லவில்லை. இதனால் ராக்கி சாவந்த் கோபம் அடைந்தார். தனுஷுடன் இணைந்து ஆடவேண்டும் என்ற கூறியதால்தான் ஒப்புக்கொண்டேன். இதற்காக பலமுறை ஒத்திகையில் ஈடுபட்டேன். இவ்வளவு கஷ்டமும் இப்போது வீண் ஆகிவிட்டது. அவர் வராமல் ஏமாற்றி விட்டார் என்று கூறினார்.

## நாகேஸ்வரராவுக்கு பாராட்டு!!

சுமார் 75 ஆண்டுகள் சினிமாவில் நடித்து வரும் நடிகர் நாகேஸ்வரராவுக்கு பாராட்டு விழா நடந்தது. இதில் ஏராளமான நட்சத்திரங்கள் கலந்து கொண்டனர்.

பிரபல தெலுங்கு நடிகர் நாகேஸ்வரராவ். இவருக்கு 89 வயது. இவர் கடந்த 75 ஆண்டுகளாக சினிமாவில் நடித்து வருகிறார். சுமார் 180 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். நாகேஸ்வரராவின் திரையுலக சேவையை பாராட்டி மத்திய அரசு பத்மஸ்ரீ, பத்ம பூஷன், பத்மவிபூஷன் விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது.

## எந்த வேடத்திலும் சாதிக்கமுடியும்

எந்த வேடத்திலும் என்னால் சாதிக்க முடியும், என்று நம்பிக்கையுடன் கூறியிருக்கிறார் நடிகை தன்ஷிகா. பேராண்மை படத்தில் வீரமான பெண்ணாக நடித்த தன்ஷிகா, அரவான் படத்தில் கிராமத்து பெண்ணாக கலக்கியிருந்தார். அரவான் படத்தில் அம்மணியின் நடிப்பு ரொம்பவே பேசப்படுகிறது. இதனால் மகிழ்ச்சியில் இருக்கும் அவர், தன்னால் எந்த மாதிரியான கேரக்டரிலும், துணிச்சலுடன் நடிக்க முடியும் என்று கூறியிருக்கிறார்.

## கமலை பார்த்து வியந்தேன்

உலகநாயகன் கமல் ஹாசன் இயக்கி, நடிக்கும் விஸ்வரூபம் படத்தில் நாயகி ஆண்ட்ரியா பரபரப்பான கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படம் கொலிவுட்டில் அதிகப் பொருட் செலவில் உருவாகி வருகிறது. இப்படத்தில் கமல்ஹாசனுடன் இணைந்து நடித்தது குறித்து நாயகி ஆண்ட்ரியா கருத்துத் தெரிவிக்கையில், விஸ்வருபத்தில் கமல் ஹாசனுடன் இணைந்து பணியாற்றும்போது நிறைய விடயங்களை கற்றுக்கொண்டேன். அவருடைய நகைச்சுவை உணர்வு, நடிப்புத்திறமை, பிலிம் மேக்கிங் ஆகியவற்றை கண்டு வியந்துள்ளேன் என்று புகழ்ந்து தள்ளியிருக்கிறார்.

## பதில் சொல்ல மறுத்த தனுஷ்!!

சமீபத்தில் வெளியான 3 படம் வெற்றியானதா அல்லது சொதப்பியதா என்ற கேள்விக்கு நடிகர் தனுஷ் பதில் அளிக்க மறுத்து விட்டார். இதுபற்றி அவர் அளித்துள்ள பேட்டியில், 3 படம் ஹிட்டானதா? இல்லையா? என்று எனக்கு தெரியாது. எனவே அதுபற்றி கருத்து சொல்ல விரும்பவில்லை, என்று கூறியிருக்கிறார். மேலும் இப்படத்தை வெளியிட்ட விநியோகஸ்தர்களுக்கு போதுமான பணம் கிடைத்துள்ளது என்பதை மட்டும் என்னால் உறுதியாக சொல்ல முடியும், என்றும் தனுஷ் கூறியுள்ளார்.



படம்:
ஊலலலா



தீக்சாசெத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சுடர்



## பழமொழிகள்

01. எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்.
02. எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா?
03. எழுத்தறச் சொன்னாலும் பெண் புத்தி பின் புத்தி.
04. எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர்.
05. எழுதாக் கடனுக்கு அழுதால் தீருமா?
06. எழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்.
07. எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கொடுத்தான்.
08. எள்ளுக்கு ஏழு உழவு , கொள்ளுக்கு ஓர் உழவு.
09. எள்ளு என்கிறதற்கு முன்னே எண்ணெய் கொண்டு வருகிறான்.
10. எளியவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வொரு மனிதனின் உடலிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி உள்ளது. இவை குறைவாக இருக்கும் மனிதனை நோய்கள் எளிதில் தாக்கும். இந்த நோய் எதிர்ப்பு சக்தியானது மனிதனுக்கு மனிதன், இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. அவை எப்படி யென்றால் நீக்ரோ இனத்தவரை என்புருக்கி நோய் எளிதில் தாக்கும். ஏனென்றால், இவர்களுக்கு இந்நோயை எதிர்க்கும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவு. வெள்ளையர்களை இந்நோய் தாக்காது. மாறாக வெள்ளையர்களை மேகநோய் எளிதில் தாக்கும். இந்நோய் நீக்ரோ இனத்தவரை தாக்காது.

அதேபோல் சீனர்களையும், இந்தியர்களையும் குடல் நோயும், அஜீரண நோயும் தாக்காது. ஏனென்றால், இவ்வகை நோய்களை எதிர்க்கும் எதிர்ப்பு சக்தி இந்தியர்களுக்கும், சீனர்களுக்கும் அதிகம் உண்டு. எஸ்கிமோக்கள் எனப்படும் பனிப்பிரதேசத்தை சேர்ந்தவர்களை தட்டம்மை, சின்னம்மை எளிதில் தாக்கும். இந்நோய் வந்தவுடன் இவர்கள் இறந்தே போகின்றனர்.

★ ★ ★

உலகிலேயே ஆண்டஸ் மலைத்தொடர் தான் மிகவும் நீளமானது. ஆன்டஸ் மலைத் தொடர் தென் அமெரிக்காவின் மேற்கு கடற்கரையோரம் 7 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. இது ஏழு நாடுகள் வரை படர்ந்து விரிந்து காணப்படுகிறது. ஆர் ஜன்டினா போலிவியா, சிலி, கொலம்பியா, பெரு, ஈக்வடார் மற்றும் வெனிசுலா.

★ ★ ★



ப்ளாஸ் ட்ரைவ் என்பது தகவல் களை சேமித்து வைக்கும் சாதனம். ப்ளாஸ் ட்ரைவ் 1998ல் இஸ்ரேல் நாட்டை சேர்ந்த சி.இ.ஓ., என்ற சாப்ட்வேர் கம்பெனியை சேர்ந்த டோவ் மோரன் என்பவர் கண்டுபிடித்தார்.

## மருத்துவரின் மருத்துவம்



தலைஞாயிறு என்ற ஊரில் வேதப்பன் என்ற உழவன் இருந்தான். அவனிடம் நான்கு மாடுகள் இருந்தன. அவற்றை நாள்தோறும் மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வான். புல்வெளியில் அவற்றை மேய விடுவான். அன்றும் அவன் வழக்கம் போல மாடுகளை மேய விட்டான். மரத்தின் நிழலில் படுத்த அவன், தன்னை மறந்து தூங்கி விட்டான்.

விழித்த அவன் அங்கே மாடுகளைக் காணாது திடுக்கிட்டான். தொலைவில் எவனோ ஒருவன் தன் மாடுகளை ஓட்டிச் செல்வதைப் பார்த்தான்.

ஒரே ஓட்டமாக ஓடிய அவன், மாடுகளை ஓட்டி செல்பவனைப் பிடித்தான்.

திருட்டுப் பயலே! என் மாடுகளை எங்கே ஓட்டிச் செல்கிறாய்? மரியாதையாக என்னிடம் தந்துவிடு. இல்லாவிட்டால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது, என்று கூச்சல் போட்டான்.

இவை என் மாடுகள். இவற்றை நான் எங்கே வேண்டுமானாலும் ஓட்டிச் செல்வேன். கேட்பதற்கு நீ யார்? என்று பதிலுக்குக் கத்தினான்.

என் மாடுகள், என் மாடுகள் என்று இருவருமே சண்டை போடத் தொடங்கினர்.

அவர்கள் சண்டையை வேடிக்கை பார்க்க அங்கே கூட்டம் கூடி விட்டது.

அங்கே வந்த காவலர்கள் அவர்கள் இருவரையும் மாடுகளுடன் நீதிமன்றத்திற்கு இழுத்து வந்தனர்.

நீதிபதி அவர்கள் இருவரையும் பார்த்து, உங்களுக்குள் என்ன சண்டை? என்று கேட்டார்.

நீதிபதி அவர்களே! இவை என் மாடுகள். இவற்றை மேயவிட்டுச் சிறிது கண் அயர்ந்தேன். இந்தத் திருடன் என் மாடுகளை ஓட்டிக் கொண்டு சென்றான். நான் ஓடிச் சென்று இவனைப் படித்துக் கொண்டேன். ஆனால், இவனோ இந்த மாடுகள் என்னுடையவை என்கிறான், என்றான் வேதப்பன்.

நீ என்ன சொல்கிறாய்? என்று

இவை என் மாடுகள். பிறந்ததில் இருந்து இவற்றை வளர்த்து வருகிறேன், என்றான்.

எப்படி உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிப்பது? என்று சிந்தித்தார். நல்லவழி ஒன்று அவருக்குத் தோன்றியது.

திருடனைப் பார்த்து, இந்த மாடுகளுக்கு இன்று என்ன தீனி வைத்தாய்? என்று கேட்டார் நீதிபதி.

அரிசிக் கஞ்சியை வடித்து இவற்றிற்குத் தந்தேன். இவை வயிறாரச் சாப்பிட்டன, என்றான்.

வேதப்பனைப் பார்த்து அவர், நீ இன்று இவற்றிற்கு என்ன தீனி வைத்தாய்? என்று கேட்டார். நான் இவற்றிற்குத் தீனி எதுவுமே வைக்கவில்லை. இவை பசும்புல்லைத்தான் மேய்ந்தன, என்றான்.

மருத்துவரை அழைத்த அவர், இந்த மாடுகளுக்கு பேதி மருந்து கொடுங்கள், என்றார். மருத்துவரும் பேதி மருந்து கொடுத்தார்.

சிறிது நேரத்தில் அந்த மாடுகள் கழித்தன. அவற்றின் சாணத்தில் பசும்புற்களின் துண்டுகள் காணப்பட்டன.

தன் திருட்டு வெளிப்பட்டு விட்டதை அறிந்த திருடன் தலை கவிழ்ந்தான்.


அவனைப் பார்த்து அவர், நீ இந்த மாடுகளைத் திருடிச் சென்றாயா இல்லையா? என்று கேட்டார்.

என்னை மன்னித்து விடுங்கள். இனி இப்படி திருட மாட்டேன், என்றான்.

அந்த திருடனுக்கு அவர் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார். வேதப்பனிடம் மாடுகளை ஒப்படைத்தார்.

அவருக்கு நன்றி சொல்லி விட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

சுட்டிகளே.....! படத்தில் எத்தனை பல்லிகள் உண்டு என்பதை கண்டறியுங்கள்....



## கண்டறியுங்கள்

படத்தில் 10 பொருள்கள் மறைந்துள்ளன. அவற்றைக் கண்டறியுங்கள்



## மெதுவாகச் சிரியுங்கள்



**வீதியில்...**

நபர் A : நண்பனே...! எங்காவது வன்முறைகள் நடந்தால் உடனே அந்த இடத்திற்கு ஓடுகிறாயே...! ஏன்?
நபர் B : எனக்குப் பொருத்தமான செருப்புகள் ஒரு நாலைந்துசோடி எடுக்கத் தான் மச்சான்...



**வகுப்பறையில்...**

ஆசிரியர்: மாணவர்களே...! பொது அறிவை வளர்த்துக்கொள்ள தினமும் செய்தித் தாள்களை படிக்கவேண்டும்.
மாணவர்கள்: அப்ப வகுப்பில படிப்பதால என்ன பிரயோசனம் சேர்....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

22.04.2012 - 28.04.2012





**அச்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

பல சமயங்களில் சமாதானப் புறாவாக செயல்படும் நீங்கள், அநியாயங்களைக் கண்டால் வெகுண்டெழுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வீண்டென்ஷன், அலைச்சல், அடிவயிற்றில் வலி வந்துசெல்லும். கன்னிப் பெண்களே! போலியாகப் பழகியவர்களிடமிருந்து ஒதுங்குவீர்கள்.




**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் பாதங்கள்**

புத்திசாலித்தனமும், பொறுமையும் அதிகமுள்ள நீங்கள், கடமை தவறாதவர்கள். குடும்பத்தில் நல்லது நடக்கும். திடீர் பயணங்களால் அலைச்சல், செலவுகளால் திணறுவீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கவலைகள் வந்து நீங்கும்.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2, 3-ஆம் பாதங்கள்**

புரட்சியை விரும்பும் நீங்கள், பழமையில் புதுமையைப் புகுத்துவதில் வல்லவர்கள். பணவரவு அதிகரிக்கும். வீட்டின் அத்தியாவசியத் தேவைகளை முடிப்பதிலிருந்த சிரமங்கள் நீங்கும். கணவன் - மனைவிக்குள் நிலவிய பனிப்போர் குறையும். கெட்ட பழக்கங்களிலிருந்தும், கெட்ட நண்பர்களின் சகவாசங்களிலிருந்தும் விடுபடுவீர்கள்.




**புனர்பூசம் 4-ஆம் பாதம் , பூசம், ஆயிலியம்**

அழுத்தமாகவும், ஆணித்தரமாகவும் வாதாடும் நீங்கள், நியாயத்திற்குக் கட்டுப்படுவீர்கள். மனோபலம் அதிகரிக்கும். தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். கன்னிப் பெண்களே! உயர்கல்வியில் ஆர்வம் பிறக்கும். வியாபாரத்தில் புதுஒப்பந்தங்களால் லாபம் பெருகும். வேலையாட்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

தர்மத்தை தலைபோல் காக்கும் நீங்கள், எதையும் முகத்துக்கு நேரே பேசிவிடுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். என்றாலும் வீண் செலவு, வந்துபோகும். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். கன்னிப் பெண்களே! பெற்றோரின் பாசமழையில் நனைவீர்கள். உங்களின் படைப்புகளுக்கு வேறொருவர் உரிமை கொண்டாடுவார்.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள் அத்தம், சித்திரை 1, 2-ஆம் பாதங்கள்**

தலைமைப் பண்பு அதிகம் கொண்ட நீங்கள் தலைக்கனம் இல்லாதவர்கள். புண்ணியத் தலங்கள் செல்வீர்கள். தூரத்து சொந்தங்கள் தேடி வருவார்கள். சளித் தொந்தரவு, தூக்கமின்மை, தொண்டை வலி வந்துசெல்லும். தடைப்பட்ட உயர்கல்வியைத் தொடர்வீர்கள். உழைப்பால் உயரும் வாரமிது.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்**

பரந்த மனம் கொண்ட நீங்கள் எப்பொழுதும் கூட்டமாக வாழ ஆசைப்படுவீர்கள். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத பணம் கைக்கு வரும். பழைய உறவினர்கள், நண்பர்களை சந்திப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்




**விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

மற்றவர்களின் வெற்றிப் பாதைக்கு வித்திடும் நீங்கள் எளிமையாக வாழ்பவர்கள். பழைய நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவுவார்கள். உறவினர்கள் உங்களின் பெருந்தன்மையை புரிந்து கொள்வார்கள். கண் எரிச்சல், பார்வைக் கோளாறு, பல் வலி வந்துசெல்லும். கணவன் மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்**

யார் தயவிலும் வாழ விரும்பாத நீங்கள், தன் கையே தனக்குதவி என நினைப்பவர்கள். எதிர்பார்த்த பணவரவு உண்டு. குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். பிள்ளைகளின் நட்பு வட்டம் விரியும். அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். வீண் விரையம், ஏமாற்றம் வந்துசெல்லும்.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள் , திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்**

எப்போதும் மனசாட்சிக்கு மதிப்பளிக்கும் நீங்கள், சொன்ன சொல் தவறாதவர்கள். உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் இலாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சின்னச் சின்ன இடையூறுகள் ஏற்படும்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

ரசிப்புத் தன்மை அதிகம் கொண்ட நீங்கள் எதையும் கலை நயத்துடன் செய்யக் கூடியவர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வார்கள்.




**பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

பேசுவதை குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழையவர்களை நம்பிப் பெரிய முடிவுகள் எடுக்கவேண்டாம். முன்பின் அறியாதவர்களிடம் அநாவசியப் பேச்சைத் தவிர்ப்பது நல்லது. கடின உழைப்பால் முதலிடம் பிடிக்கும் வாரமிது.

## பாபாவின் அருளுரையிலிருந்து...



★ நமது தீய எண்ணங்கள், தீய குணங்கள் இவற்றை வெளியிடுதலே ரேசகம் (வெளிமூச்சு) ஆகும். நல்ல புனிதமான, தெய்வீக உணர்வுகளை உள் நிரப்பிக் கொள்ளுதலே (பூரகம்) ஆகும். அத்தகைய நல்லுணர்வுகளை மனதில் இருத்தி வைத்துக் கொள்ளுதலே கும்பகம் ஆகும். இதுவே ரேசகம், பூரகம், கும்பகம் ஆகியவற்றின் உட்பொருள் ஆகும்.


இந்த உட்பொருள் எனக்குத் தேவையில்லை என்று நினைத்தால் வேறொன்று இருக்கிறது. ஸோ என்ற ஒலியுடன் மூச்சை உள்ளிழுக்கிறோம். ஹம் என்ற ஒலியுடன் வெளிவிடுகிறோம். எல்லோரும் இதைச் செய்கிறார்கள். விசேடமாக நீங்கள் செய்வதென்ன?

ஸோஹம் என்ற ஒலியில் தெய்வீகக் கோட்பாடு இருக்கிறது. ஸோ என்றால் அது (தத்) கடவுள். ஹம் என்பது நான். அதாவது கடவுள் நானே என்று கூறிக்கொள்கிறோம். ஒவ்வொரு நாளும் 21 ஆயிரத்து 600 தடவைகள் நானே கடவுள் என்ற மந்திரத்தை சொல்லிக்கொண்டே இருக்கிறோம்.

★ மனிதப்பிறப்பு கர்மாவினால் இயங்குகிறது. தார்மீகமான செயல்களுக்காகவே இந்த உடல் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நாம் செயல்படுத்துவதற்காகப் பிறந்திருக்கிறோம். நமக்கு இடப்பட்டிருக்கும் கடமையை ஒழுங்காகச் செய்தால் மனித சமுதாயம் நம்மைப் போற்றும். புகழும் வாழ்ந்த வாழ்வின் அடையாளம் காட்டும்.

★ எந்தக் காரியத்திலும், அதன் பலன்களை எதிர்பார்த்தோ, எடைபோட்டோ, எதிர் விளைவுகள் என்ன என்றோ நினைத்து ஈடுபடாதீர்கள். அன்புடன் அழைத்தால், அன்புடன் மறுமொழி கிடைக்கும். அன்புதான் கடவுள். அன்பாலேயே வாழுங்கள்.

## ஆறுபடை வீடுகள்



### 01. திருப்பரங்குன்றம்

ஆறுபடை வீடுகளில் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில், முருகன் மணக்கோலத்தில் காட்சி தருகிறார். அசுரனை வென்ற அவர் இந்த தலத்தில் இந்திரனின் மகளான தெய்வானையை திருமணம் செய்து கொண்டார். முருகன் அமர்ந்த கோலத்தில் இருப்பது சிறப்பு. இத்தலத்தில் மலை வடிவில் சிவபெருமான் அருள்புரிகிறார். சிவனின் பெயரால் இத்தலம் திருப்பரங்குன்றம் எனப்படுகிறது. முருகனின் அருகில் நாரதர் தாடியுடன் இருப்பது குறிப்பிடத்தக்கது.

### 02. திருச்செந்தூர்

முருகனின் இரண்டாம் படைவீடு திருச்செந்தூர். இது கடலோரத்தில் அலைகள் வீச அமைந்துள்ளதால் அலைவாய் என்ற பெயரும் உண்டு. இந்ததலம் கைலாயத்திற்கு சமமானது. முருகப்பெருமான் சூரர்களை வெல்வதற்கு முன்னும் பின்னும் தங்கிய இடம். இரவு திருவடிகளை படகிற்கு சமமாக சொல்கிறார்கள். அதனால் தான் கடலின் முன்புள்ள இத்தலத்திலுள்ள முருகனின் திருவடிகளை வணங்கி பிறவிப் பெருங்கடலை கடப்பதாக நம்பிக்கையுள்ளது.

### 03. பழநி

சித்தர்கள் வாழ்ந்த புண்ணிய பூமி பழநி. மருந்தே மலையாக அமைந்த தலம். பழநியில் கால்வைத்தாலே பாதி நோய் தீரும். மலை ஏறிவிட்டால் முழு நோயும் நீங்கும். 12 ஆண்டுகளுக்கு தொடர்ந்து காலை 4 மணிக்கு எழுந்து நீராடி, கிரிவலம் வந்து, மலை மீது ஏறி, முருகன் திருவடி நாடி, தியானத்தில் அமர்ந்தால் அனைத்தும் ஒன்றே என்ற அற்புத தத்துவ விளக்கம் பெறுவதுடன், வாழ்க்கை என்பது இன்னதென்று உணரும் ஞானஒளியையும் பெறலாம். அபிஷேகம் செய்யப்பட்ட பஞ்சாமிர்தம், பால், தீர்த்தம் சாப்பிட்டால் நோய் தீரும். ஒரு கோயிலுக்கு அபூர்வ சக்தி அளிப்பவை அங்குள்ள மூர்த்தி (சிலை), தீர்த்தம், தலம் (அமைவிடம்) ஆகியவை. பழநி கோயிலுக்கு அபூர்வ சக்தி அளிப்பது சிலை. போகர் சித்தரால் நவபாஷாணத்தால் உருவாக்கப்பட்டது.

### 04. சுவாமிமலை சிவகுருநாதன்

சிவபெருமானுக்கு பிரணவ மந்திரத்தை உபதேசித்து சுவாமி மலையில் சுவாமிநாதனாக முருகப்பெருமான் வீற்றிருக்கின்றார். தன்னைவிட தன் பிள்ளைகள் அறிவுடையவர்களாக இருப்பது இப்பரந்த உலகத்தில் வாழும் உயிர்களுக்கெல்லாம் நன்மையைத் தரும் என்கிறார் வள்ளுவர். அந்த வழியில் தன் பிள்ளையின் வாயால் மந்திரத்தின் பொருளை கேட்டு மகிழ்ந்தார் சிவன். அதுவும் தன் பிள்ளை குருவாக வீற்றிருக்க, தானே சீடனைப்போல் அமர்ந்து கேட்டார். அதனால் சிவகுருநாதன் என்ற பெயரை முருகப்பெருமான் பெற்றார்.

### 05. திருத்தணி முருகன்

அழகே உருவாக பொலிவுடன் காட்சி தரும் முருகன், திருத்தணியில் மார்பில் காயம்பட்ட தடத்துடன் இருக்கிறார். இதனை சூரனுடன் போரிட்டபோது ஏற்பட்ட காயம் என்கிறார்கள். திருச்செந்தூரில் சூரனை வதம் செய்த முருகன் இங்கு வந்து கோபம் தணிந்து சாந்தமாக அமர்ந்தார். கோபம் தணிந்த இடம் என்பதால் தணிகை என இவ்வூர் பெயர் பெற்றது. அபிஷேக சந்தனம் இத்தலத்தில் பிரசாதமாக தரப்படுகிறது. இதனை பக்தர்கள் நீரில் கரைத்து குடிக்கின்றனர். இதனால், நோய் நீங்கும் என்பது நம்பிக்கை.

### 06. சோலைமலை

ஆறுபடைவீடுகளில் ஆறாவது வீடாக விளங்குவது சோலைமலை. மதுரையிலிருந்து 20 கி.மீ., தொலைவில் உள்ளது. ஔவைக்கிழவியிடம், சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?, என்று சாதுர்யத்துடன் உரையாடிய முருகன், இங்கு கோயில் கொண்டிருக்கிறார். உலக உயிர்கள் அனைத்தும் பழங்கள். அவற்றின் மீது பாசபந்தம் என்னும் மண் ஒட்டியிருக்கிறது. அதனைப் போக்க கல்வியறிவு மட்டும் போதாது. இறையருள் என்னும் மெய்யறிவும் வேண்டும் என்பதை உணர்த்த சுட்டிப்பையனாக வந்து திருவிளையாடல் புரிந்தவர் இவர். தன்னை வழிபட்டவர்க்கு கல்வியறிவும், ஞானமும் தருபவராக அருள்கிறார். அறிவால் அறிந்து உன் இருதாள் இறைஞ்சும் அடியார் இடைஞ்சல் களைவோனே என்று அருணகிரிநாதர் இவரைப் போற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியுலக விருந்தினர்கள்

9



"ஓ! சிந்து... நண்பர்களும் இருக்கிறார்களா... இரவாகிவிட்டதே பிள்ளைகளே.. இன்னும் ஏன் வீட்டுக்குச் செல்லவில்லை?" டொக்டர் மாமா நண்பர்களிடம் கேட்டார்.

அவர்கள் எல்லோரும் டொக்டர் மாமாவைத் தேடி ஓடிவந்திருக்கின்றனர். கால்வாய்க் கரையில் இங்காயியும் டங்காயியும் மிகவும் சோர்ந்து போய் நிற்கிறார்கள். இனிமேல் தங்களது கிரகத்திற்குத் திரும்பிப்போக முடியாதோ? அவர்களது வாகனத்திற்கு என்ன ஆயிற்று?

ஒன்றும் பேசாமல் திகைப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு டங்காயியும் இங்காயியும் நின்றார்கள். அதை நண்பர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்களால் என்ன செய்ய முடியும்?

"நாம் டொக்டர் மாமாவிடம் சொல்வோம்!" சிந்துவிற்கு சட்டென்று ஒரு யோசனை வந்தது. "நாம் சொல்வதெல்லாம் டொக்டர் மாமாவுக்குப் புரியும்"



"ஆனாலும் அவரால் எப்படி டங்காயியையும் இங்காயியையும் அவர்களது கிரகத்திற்கு அனுப்ப முடியும்?" சரவணன் கேட்டான்.

"நாம் டொக்டர் மாமாவையும் அழைத்துக்கொண்டு சாப்பாடுக்குச் செல்வோம். வாகனத்திற்கு என்ன ஆயிற்று என்று தெரிந்துகொள்வோம்"

அப்படித்தான் அவர்கள் டொக்டர் மாமாவைத் தேடிவந்தார்கள். டொக்டர் மாமா அவர்கள் கூறியதையெல்லாம் கேட்டார். பிறகு புன்னகையுடன் கேட்டார்,

"டங்காயியும் இங்காயியும் திரும்பிப்போகவேண்டும் என்று நீங்கள் எல்லாம் விரும்புகிறீர்களா?"

"இல்லை... இல்லை... நாங்கள் அப்படி விரும்பவில்லை" எல்லாரும் ஒன்றாகச் சொன்னார்கள்.

"அப்படியென்றால் அவர்கள் திரும்பிப் போக வேண்டாம். டங்காயியும் இங்காயியும் நண்பர்களுடன் சேர்ந்து பூமியிலேயே சந்தோஷமாக விளையாடட்டும் என்ன...என்ன?"

"பெரியவர்கள் அவர்களைக் கண்டால் பயந்து போய்விடுகிறார்கள்" ஆமினாக்குட்டி சொன்னாள்.

"அப்போது டங்காயியும் இங்காயியும் வருத்தப் படுவார்கள்" என்றான் கண்ணன்.

"டங்காயிக்கும் இங்காயிக்கும் அப்பா அம்மா இருப்பார்கள் அல்லவா? திரும்பிச் செல்லவில்லை என்றால்?... அவர்கள்?..." மாறன் சொன்னான்.

"அவர்கள் திரும்பிச் செல்லட்டும் மாமா..." அம்முக்குட்டி விசும்பிக்கொண்டு சொன்னாள்.

"அப்போது... உங்களுக்கொன்றும் வருத்தமில்லையே?" மாமா கேட்டார்.

"நாங்கள் வருத்தப்பட்டால் பரவாயில்லை. டங்காயியும் இங்காயியும் வருத்தப்படக்கூடாது" ஆமினாக்குட்டி உறுதியாகச் சொன்னாள்.

"சரி... சரி... நாம் டங்காயியையும் இங்காயியையும் பூமியிலிருந்து திருப்பி அனுப்ப வேண்டும். ஆகாயத்தையும் நட்சத்திர மண்டலங்களையும் கடந்து, நமது கற்பனையின் எல்லைக்கு அனுப்ப வேண்டும். அதுதானே வேண்டும்..?"

"ஆமாம், தூரத்தில் எங்கேயோ ஒளிர்கின்ற அவர்களது மண்ணுக்குத் திருப்பி அனுப்பவேண்டும்..." நண்பர்கள் அனைவரும் ஒருமித்துச் சொன்னார்கள்.

"அது இருக்கட்டும். உங்களது டங்காயியும் இங்காயியும் எதற்கு பூமிக்கு வந்தார்கள்?" என்று கேட்டார் மாமா.

'அவர்கள் தீயவர்கள் அல்ல'

"அவர்கள் பூமியை அடிமைகொள்ள வந்தவர்கள் அல்ல"

மிகச்சிறிய ஒரு காரியத்திற்காகத்தான் அவர்கள் வந்தார்கள்"

"பூமியில் உள்ள மனிதர்களைப்போல சுத்தமாகவும் அழகாகவும் முடிவெட்டிக்கொள்ள வேண்டும்"

"அப்புறம் இங்காயிக்கொரு உடை வாங்க வேண்டும்..."

"அந்த வேலைகள் முடிந்ததா?" மாமா மீண்டும் கேட்டார்.

"நாங்கள் அவர்களுக்கு உடுத்திக்கொள்ள நிறைய உடுப்புகள் கொடுத்தோம்"

"நாங்கள் அவர்களுக்கு நிறைய அன்பளிப்புகளும் கொடுத்தோம்"

"ஆனால்..."

"ஆனால் என்ன?" டொக்டர் மாமா மீண்டும் கேட்டார்.

"டங்காயியும் இங்காயியும் முடிவெட்டிக்கொள்ள வழியில்லை. அவர்களைப் பார்ப்பதற்கான துணிச்சல்கொண்ட ஒரு பார்பரும் இந்த உலகில் இல்லை" ஜோசப் சொன்னான்.



டொக்டர் மாமா மீண்டும் சிரித்தார். "நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து வருகின்ற.. கற்பனையின் எல்லையிலிருந்து வருகின்ற நண்பர்கள் கிடைப்பார்கள் என்றால், அவர்களது முடியை நாமே வெட்டி அழகுபடுத்தினால் என்ன?" அவர் கேட்டார்.

"அது எப்படி...?"

"படக்கதை புத்தகங்களில் கதாபாத்திரங்களின் முடிவெட்டியிருப்பதுபோல..." டொக்டர் மாமா அப்போதும் சிரித்துக்கொண்டிருந்தார்.


"நம் விருப்பப்படி அழகாக வெட்டலாம்...!" சரவணன் உற்சாகமடைந்தான்.

"நாமே அவர்களின் முடியை அழகாக வெட்டி சீர்படுத்துவோம்"

"ஆமாம்... உங்களது வேற்றுக்கிரக நண்பர்களுக்கு அப்போதுதான் திரும்பிப்போக முடியும்.." என்றார் டொக்டர் மாமா.

"வாகனம் வராமல்... அவர்கள் எப்படிப் போவார்கள் மாமா?" மாறன் கேட்டான்.

**ஜெனு**



"வாகனம் வரும். மாமா இருக்கிறேன் கவலைப்படாதீர்கள்... சரி... போய் வாருங்கள்..."

"எவ்வளவு நல்ல மாமா!" கண்ணன் டொக்டர் மாமாவின் கையில் ஒரு முத்தம்கொடுத்தான். பிறகு மற்ற நண்பர்களுடன் வெளியே ஓடினான்.

கால்வாய்க்கரையில் மரத்தடியில் இருட்டத் தொடங்கியிருந்தது. டங்காயியும் இங்காயியும் துயரத்துடன் அமர்ந்திருப்பதைத் தூரத்திலிருந்து பார்க்க முடியும். லைக்கா அவர்களுக்கருகில் இருக்கிறது. அது அவர்களின் கால்களை உரசியும் முகர்ந்தும் அவர்களைச் சமாதானப்படுத்திக்கொண்டிருந்தது.

"டங்காயி...." சரவணன் டங்காயின் தோளைத் தொட்டுக்கொண்டு சொன்னான்.

"டொக்டர் மாமா உங்களது வாகனத்தை இங்கே வரச்செய்துவிடுவார்"

"எப்படி"

தெரியவில்லை. "அவர் வாகனத்தைக் கண்டுபிடிக்காமல் இருக்கமாட்டார்" அன்வர் சொன்னான்.

"ஆமாம்" டங்காயி சொன்னது. "டொக்டர் மாமாவால் குழந்தைகளைப்போல பெரிய பெரிய காரியங்களைப் பற்றிச் சிந்திக்க முடியும். அவர் வயதான ஒரு மனிதனைப்போல அல்ல. தேவைப்பட்டால் வண்ணத்துப்பூச்சியின் மீது அமர்த்திகூட எங்களை அழைத்துக் கொண்டுபோவார்.

"டொக்டர் மாமா உங்களைப் போலத்தான் டங்காயி..." சுருதி சொன்னாள்.

"உங்களை அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது"

"டங்காயி... நாங்கள் உங்களுடைய முடியை அழகாக வெட்டப்போகிறோம்" என்றான் கண்ணன்.



டங்காயிக்கும் இங்காயிக்கும் முடிவெட்டுவதை கண்ணன் முன்பிருந்ததில்லை அல்லவா. ஆமினாக் குட்டிக்கும் விருப்பமில்லை. ஆனால் அவர்களது லட்சியத்தை நிறைவேற்ற முடியை வெட்டியே ஆகவேண்டும் என்பதுதான் அவன் நிலைப்பாடு.

"அது எப்படி கண்ணா?" டங்காயி கேட்டது.

"எங்கள்-சித்திரப் புத்தகங்களில் வரைவதைப் போல"

"நல்லதாகப் போயிற்று" டங்காயி சொன்னது.

"சித்திரப் புத்தகங்களில் நாம் நிறைய வேலைகள் செய்யலாம். மனதில் நினைத்த நிறங்களையெல்லாம் அதோடு கலந்து தீட்டிவிடலாம். அப்போது அந்தப் படங்களெல்லாம் உயிர்பெற்றுவிடும்.

மாறன் எங்கிருந்தோ ஒரு கத்தரிக்கோலுடன் வந்தான். சரவணன்தான் முடிவெட்டினான். அவன் டங்காயியின் நீண்ட முடியை தோள் வரை வெட்டிச்சீராக்கினான். ஆமினாக் குட்டி ஒரு ரிப்பன் எடுத்து டங்காயின் நெற்றியைச் சுற்றி பிடரியில் கட்டினாள். அம்முக்குட்டி ஒரு இறகை ரிப்பனுக்கு நெற்றிப் பகுதியில் சொருகினாள்.

'அருமையாக இருக்கிறது' கண்ணனுடன் சேர்ந்து மற்றவர்களும் கைதட்டினார்கள்.

இங்காயியின் முடியையும் அப்படியே வெட்டினார்கள்.

இங்காயியும் தலையில் இறகு கிரீடம் சூடிய ராஜகுமாரியாக ஆயிற்று.

பூமியில் அன்பு நிறைந்த குழந்தைகளுக்கிடையில் கனவைப் போல இரண்டு ராஜகுமாரிகள்.. அவர்களைச் சுற்றிவந்து நண்பர்கள் நடனமாடினார்கள்.

அப்போது ஒரு மெலிதான ஓசை கேட்டது.

வானவில்போல ஒளிர்கின்ற ஒரு மிகப்பெரிய குமிழ் அதோ ஆகாயத்திலிருந்து இறங்கி வருகின்றது. அது நண்பர்களுக்கு நடுவில், டங்காயிக்கும் இங்காயிக்கும் அருகில் இறங்கியது.

குமிழில் இருந்து ஒரு உருவம் இறங்கி வந்தது. நான்கு கைகள் இருந்தன அதற்கு கண் இருக்கவேண்டிய இடத்தில் நெற்றியில் ஒரே ஒரு பெரிய கண் மட்டுமே இருந்தது.


"டிக்ரு!" இங்காயி அழைத்தது.

"உங்களது வாகனத்தை கடல்லைகள் கொண்டு சென்று விட்டன.. அடுத்துச் செய்தி கிடைத்தபோது உங்களைக் காப்பாற்ற என்னை அனுப்பினார்கள்";

டங்காயி டிக்ருவை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தியது. டிக்ரு முன்பு ஒரு தடவை பூமிக்கு வந்திருக்கிறது நீந்துவதற்காக. பூமியில் அதற்கு உமாக்குட்டி என்ற தோழி இருக்கிறாள். டிக்ரு டங்காயி கிரகத்திற்குப் பக்கத்துக் கிரகத்தில் வசிக்கிறது.

டங்காயியும் இங்காயியும் ஒவ்வொருவரையும் கட்டிப்பிடித்து விடை பெற்றனர்.

"மீண்டும் வருவோம்... இரவு வணக்கம்... சென்று நன்றாக தூங்குங்கள் நண்பர்களே..."



அவர்கள் வாகனத்திற்குள் ஏறினார்கள்... கதவை மூடுகிறார்கள். ஒரு நிமிடம், லைக்கா வாலாட்டிக் கொண்டு வாகனத்தில் தாவி ஏறியது.

கதவு மூடப்பட்டுவிட்டது. ஒரு மெல்லிய காற்றும் அந்தப் பெரும் குமிழ் காற்றில் உயர்ந்து மேலேறியது. அது வெகுதொலைவை நோக்கி பறந்து செல்வதைப் பார்த்தபடி நண்பர்கள் நின்றார்கள். ஒன்றும் பேசமுடியாமல்.

அவர்களுக்கு உறக்கம் வரத் தொடங்கியிருந்தது. அவர்கள் உறங்குவதற்காக வீடுகளுக்கு ஓடினார்கள்.

டங்காயியையும் இங்காயியையும் பற்றிக் கேட்பதற்கு அவர்கள் விழிக்கும்வரை நாம் காத்திருக்கவேண்டும் அல்லவா..

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணிப் பெண்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்!



தாய்மை என்பது ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் அவர்களின் பூரணத்துவத்தை அடைவது என்றால் மிகையில்லை. பொதுவாகத் திருமணம் முடியும் வரை பெண்கள் மிகப் பெரிய எதிர்பார்ப்புகளோடும், வாழ்க்கை பற்றிய கனவுகளோடும் இருந்தாலும் திருமணத்திற்குப் பின் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதே அவர்களின் மறுபிறவி என்கிறோம்.

ஆகவேதான் தாய்மையை, மனித இனத்தின் ஆதாரமான குழந்தைகளை வயிற்றில் சுமந்து பெற்றெடுக்கும் அன்னையரை அனைவரும் போற்றிப் புகழ்கிறோம். குழந்தையை வயிற்றில் கருவாகச் சுமந்த முதல் மாதத்தில் இருந்து புதிய உயிரை பெற்றெடுப்பது வரை எவ்வித சிக்கலும் இன்றி கர்ப்பிணிப் பெண்கள் சிறப்பான உணவு முறைகளையும், எளியவகையிலான உடற் பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் மருத்துவர்களின் ஆலோசனைகளையும் தவறாமல் உரிய முறையில் கடைப்பிடித்தல் அவசியம். கரப்பிணிப் பெண்களுக்கான சில குறிப்பிடத் தக்க குறிப்புகள் இதோ.

கர்ப்பம் என்பதை மருத்துவரிடம் உறுதிப்படுத்திய பின்னர், ஒவ்வொரு மாதமும் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும். அன்றாடம் குறைந்த அளவு உணவுகளை சிலமணி நேர இடைவெளி விட்டு அடிக்கடி சாப்பிட வேண்டும். 4 மணி நேரத்திற்கு அதிகமான இடைவெளி இருத்தல் கூடாது.

ஒவ்வொரு முறை படுக்கையிலிருந்து எழும்போதும் கவனமாக பொறுமையுடன் எழுந்திருத்தல் வேண்டும். தூங்கும்போதும் கூட உங்களுடன் பிஸ்கட் பாக்கெட்களை வைத்திருக்கவும். தூங்கி எழுந்தவுடன் சாப்பிடுவதற்கு ஏதுவாகும். ஒரே நேரத்தில் அதிக அளவிலான சாப்பாட்டை எடுத்துக்கொள் வதைத் தவிர்க்கவும். நீங்கள் ஓய்வு வேண்டும் என்று நினைக்கும் போதெல்லாம் போதிய அளவு ஓய்வை எடுத்துக் கொள்ளுங்கள்.

சாப்பிடும் உணவை நுகர்ந்தபின் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். அது உங்களுக்கு உணவின் மீது அதிருப்தியை ஏற்படுத்தலாம். தேவைப்பட்டால் எலுமிச்சம் பழம் ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு நுகர்ந்து கொள்ளவும். இது வாந்தியைத் தவிர்க்க ஏதுவாகும்.

இடுப்பை இறுக்காதவகையிலான தொழதொழப்பான (லூஸ்) ஆடைகளை அணிந்து கொள்ளப் பழகுங்கள். தேவைப்பட்டால் முழங்கால்களுக்கு இடையே தலையணை ஒன்றை வைத்துக் கொள்ளுங்கள். இப்படிச் செய்வதால் உங்களின் இடுப்பு மற்றும் முழங்கால்களில் ஏற்படும் அழற்சி சற்றே மட்டுப்படும்.

மாலைக்குப் பின்னர் திரவ உணவு வகைகளை அதிகமாக எடுப்பதைத் தவிர்க்கவும். பகலில் அல்ல. அதேபோல் இரவில் கோப்பி அருந்துவதையும் தவிர்த்தல் நலம்.

பால் அல்லது மூலிகை கலந்த தேநீர் அருந்தவும். முடிந்தால் சாப்பிட்டபின் சுயிங்கம் அல்லது மிட்டாய் போன்றவற்றை சிறிது நேரம் மெல்லுங்கள்.

பயணத்தின் போது நீண்டநேரம் உட்கார்ந்திருப்பதைத் தவிருங்கள். குறைந்தது ஒருமணி நேரத்திற்கு ஒருமுறையோ அல்லது இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறையோ நடந்து உலாவுங்கள். பெரும்பாலும் பயணத்தின் போது அவ்வப்போது கழிவறைக்குச் சென்று சிறுநீர் கழிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

எண்ணெய் குறைவான 'ஸ்நாக்ஸ்' வகைகளை பயணத்தின் போது எடுத்துச் செல்லுங்கள். ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை கேரட், அப்பிள் அல்லது சாண்ட்விச் போன்றவற்றில் ஏதாவதொன்றைச் சாப்பிடுங்கள். அடிக்கடி தண்ணீர் அருந்துங்கள். உடலில் உள்ள தண்ணீர் வெயில், உடல் உஷ்ணம் காரணமாக அவ்வப்போது நீர்த்துப் போகும் என்பதால் தேவையான அளவு தண்ணீரைக் குடிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

கர்ப்பமாக இருக்கும் போது முதுகுவலி ஏற்பட்டால், உடனடியாக வெந்நீர் பாக் கொண்டு வலி உள்ள இடத்தில் ஒத்தடம் கொடுங்கள். உங்களின் முதுகுத் தண்டானது சுவரில் ஒட்டியிருக்கும்படி நின்று கொண்டு சிறிதுநேரத்திற்கு அதே நிலையிலேயே இருங்கள். இதனால் முதுகுவலி நீங்கலாம். படுத்திருக்கும் போது உங்களின் கால்கள் உயர்வாக இருக்குமாறு தலையணைகளை வைத்துக் கொண்டு தூங்கலாம்.

நிறைமாதத்தில் குழந்தை பிறப்பதற்கான வலி ஏற்படும் போது, முடிந்தால் சற்றே நடக்கலாம். இதன் மூலம் குழந்தை பிறப்பது சற்றே எளிதாகும்.

கரப்பவலி இருக்கும் போது சாப்பிடுதல் அல்லது திரவங்களைக் குடிப்பதால் குழந்தை பிறப்பது விரைந்து பலனைத் தரும்.

இதுபோன்ற தகவல்கள் என்பது பொதுவானவையே. இவற்றையெல்லாம்விட உரிய மருத்துவர்கள் மற்றும் வீட்டில் உள்ள தாதியர் அல்லது அனுபவம் மிக்கவர்களின் அறிவுரைப்படி செயல்படுங்கள். வளமான குழந்தையைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழுங்கள்.

# உடலுக்குப் பலம் தரும் கைக்குத்தல் அரிசி!

பண்டைய காலத்தில் நம் முன்னோர்கள் கைக்குத்தல் அரிசியையே உணவிற்காகப் பயன்படுத்தி வந்தனர். கைக்குத்தல் அரிசி எனப்படும் 'பொலிஷ்' செய்யப்படாத அரிசியில் நார்ச்சத்தும் எண்ணற்ற விட்டமின் சத்துக்களும், புரதச் சத்தும் அடங்கியுள்ளன. ஆனால், இன்றைக்கு அரிசியை பலமுறை பொலிஷ் செய்து எந்த சத்தும் இல்லாத வெறும் மாவுப்பொருளை மட்டுமே கொண்ட அரிசியை பயன்படுத்துகின்றனர். இதனால் உடலானது நோய்களின் கூடாரமாகிறது. பொலிஷ் செய்யப்படாத அரிசியை உணவாக உட்கொண்டால் நீரிழிவு, இதயநோய் உள்ளிட்ட நோய்களைத் தவிர்க்கலாம் என்கின்றனர் உணவியல் வல்லுநர்கள்.

**விட்டமின் சத்துக்கள்**

உலகில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் அரிசியையே உணவாகக் கொண்டுள்ளனர். இந்தியாவில் குறிப்பாக தென்னிந்திய மாநிலத்திலும் இலங்கை போன்ற நாடுகளிலும் மக்களின் மிக முக்கிய உணவுப்பொருள் அரிசி. இது ஒரு மாவுப் பொருளாகும். பொலிஷ் செய்யப்படாத அரிசியில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, விட்டமின் ஏ, விட்டமின் பி, விட்டமின் பி-12, விட்டமின் கே, விட்டமின் ஈ, மாவுச் சத்து, புரதச் சத்துக்கள் என்பன நிரம்பியுள்ளன.

முற்காலத்தில் உரலில் நெல்லைப் போட்டு உலக்கையால் அந்த நெல்லினை இடித்து அதன் உமியைப் பிரித்து சுத்தம் செய்து அந்த அரிசியைச் சமைத்து சாப்பிட்டனர். இந்த வகையில் எடுக்கப்படும் அரிசியில் தவிடு நீக்கப்படுவது இல்லை. இவ்வாறு அரிசியை தவிட்டுடன் சேர்த்துச் சாப்பிடும்போது உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கும். அதுபோல் அரிசியில் அடங்கியுள்ள மாவுப் பொருளை எளிதில் ஜீரணிக்கச் செய்யும்.

**நீரிழிவு வராது**

தவிடு நீக்காத அரிசியை சாப்பிடுவதால் அதன் பலன்கள் அனைத்தும் சரிசமமாக உடலுக்கு சேர்கிறது. இந்த அரிசியை உண்பதால் உணவு எளிதில் சீரணமடையும். மலச்சிக்கலைப் போக்கும், சிறுநீரை நன்கு பிரிக்கும். இதில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் நீரிழிவு நோயின் தாக்கம் இருக்காது. இது இரத்தத்தைச் சுத்தப்படுத்தி உடலுக்குப் புத்துணர்வைக் கொடுக்கும். பித்த அதிகரிப்பை குறைக்கும். உடலில் தேங்கியுள்ள கொழுப்பை நீக்கும். சருமத்தைப் பாதுகாக்கும். வாதம், பித்தம், கபத்தை அதனதன் நிலையில் வைத்திருக்கும். இந்த தவிடு நீக்காத அரிசி இந்தியாவில் கேரளாவிலும், இலங்கையிலும் மட்டுமே அதிகம் பயன்படுத்துகின்றனர். தமிழ்நாட்டில் இந்த அரிசியைப் பயன்படுத்துவது தற்போது வெகுவாக குறைந்துவிட்டது.

**சத்து நீக்கப்பட்ட அரிசி**


தமிழ்நாட்டில் அனைவருமே கண்ணைப் பறிக்கும் வெண்மையான அரிசியையே விரும்புகிறோம். இரண்டு மூன்று முறை பொலிஷ் செய்யப்பட்ட இவ்வகையான அரிசியில் உள்ள எல்லா விட்டமின் சத்துக்களும் வெளியேற்றப்பட்டு விடுகிறது. இதில் நாவிற்கு சுவை மட்டுமே உண்டு. ஆனால் மாவுச்சத்தைத் தவிர வேறெந்த சத்துக்களும் கிடைப்பதில்லை.

**நோய்கள் அதிகரிப்பு**

இந்த அரிசியை சமைத்து உண்பதால் மாவுச் சத்து அதிகம் உடலில் சேருகிறது. ஆரம்பத்தில் அந்த மாவுச்சத்தைக் கட்டுப்படுத்த உடலில் இன்சுலின் சுரப்பு அதிகமாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இன்சுலின் சுரப்பு குறைவதால் குளுக்கோசின் அளவு அதிகரிக்கிறது. இதனால் நீரிழிவு நோய் ஏற்படுகிறது.

கைக்குத்தல் அரிசி தற்போது அதிகம் கிடைப்பதில்லை. உமி நீக்கி பொலிஷ் செய்த அரிசியை வாங்கிச் சமைத்துச் சாப்பிடுங்கள். நாவிற்கு ருசி, ஆனால், பலன் ஒன்றுமில்லை. ஆரோக்கிய உடலுக்கு கைக்குத்தல் அரிசி சிறந்தது. பொலிஷ் செய்த வெள்ளை அரிசி சத்தற்றது. எனவே அவற்றை சாப்பிடுவதைக் குறைத்து தவிடு நீக்காத அரிசியை வாங்கி உண்பதே ஆரோக்கியத்திற்கு ஏற்றதாகும்.

# இரத்தத்தை சுத்தமாக்கும் சத்தான உணவுகள்!



மனித உடம்பில் ரத்தமானது சக்தி கடத்து பொருளாக செயல்படுகிறது. ரத்தம்தான் நாம் உண்ணும் உணவில் இருந்து சத்துக்களை கிரகித்து ஒட்சிசனாக மாற்றி மூளைக்கும், இதயத்திற்கும் அனுப்புவதோடு மனித நடமாட்டத்திற்குத் தேவையான சக்தியையும் அளிக்கிறது. ரத்தம் சுத்தமானதாக இருந்தால்தான் நம்மால் ஆரோக்கியமாக நடமாட முடியும். அசுத்தக் கலப்பில்லாமல் இரத்தத்தைச் சுத்திகரிக்கும் சக்தி அன்றாடம் உண்ணும் உணவுப் பொருட்களிலேயே உள்ளது. உணவியல் நிபுணர்கள் கூறும் அவற்றைச் சாப்பிட்டுப் பாருங்கள்.

**எலுமிச்சை:**

ரத்தத்தில் உள்ள அசுத்தங்களை சுத்திகரித்து அவற்றை கழிவுகளாக வெளியேற்றும் சக்தி எலுமிச்சைக்கு உண்டு. தினசரி காலை நேரத்தில் வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சை சாறுடன் தேன் கலந்து சாப்பிட இரத்தத்திற்கு புத்துணர்ச்சி கிடைக்கும். ஒருவாரம் இதை முயற்சித்துப் பாருங்கள். உங்களின் உடலில் கிடைக்கும் அபரிமிதமான சக்தியை நீங்களே உணர்வீர்கள்.

**நோய் எதிர்ப்பு சக்தி மிளகு**

உணவுப் பொருட்களில் சுவைக்காக நாம் சேர்த்துக்கொள்ளும் மிளகு சிறந்த ரத்த சுத்திக்கரிப்பானாக உள்ளது. மிளகானது சிறந்த அன்டி அக்ஸிடென்ட்ஸ் உள்ளது. எனவே உணவுகளில் மிளகு சேர்த்துக் கொள்வதன் மூலம் உடல் ஆரோக்கியம் அதிகரிக்கும்.

**பச்சைக் காய்கறிகள்**

பச்சை நிறமுடைய காய்கறிகள், கீரைகள் உடல் சக்தியை அதிகரிப்பவை என்பது அனைவரும் அறிந்ததே. இதில் உள்ள குளோரோபில் மனிதர்களுக்குத் தேவையான சக்தியை ரத்தத்திற்கு அளிக்கிறது. டாக்ஸினை ரத்தம் கிரகித்துக் கொள்ள உதவிபுரிகிறது. நமக்குத் தேவையான சக்தி கிடைக்க அன்றாட உணவுகளில் பச்சைக் காய்கறி சாலட்களை அதிகம் உட்கொள்ளவேண்டும் என்கின்றனர் உணவியல் நிபுணர்கள்.

**கண்ணிற்கு ஒளிதரும் கரட்**

காரட்டில் உள்ள கரோட்டின் சத்து கண்ணிற்கும், சருமத்திற்கும் நன்மை தரக்கூடியது. நமது உணவில் காரட் அதிகம் சேர்த்துக்கொள்வதன் மூலம் இரத்தத்தில் உள்ள மாசுக்கள் சுத்திகரிக்கப்படுகின்றன. சமைத்து உட்கொள்வதை விட காரட் சாறு பருகுவது ஆரோக்கியத்திற்கு ஏற்றது.


**வெள்ளைப்பூண்டு**

உடல் ஆரோக்கியத்தைக் காப்பதில் வெள்ளைப்பூண்டு சிறந்த உணவாகும். இதில் ரத்தத்தில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்றுகிறது. ரத்தத்திற்கு புத்துணர்ச்சி அளிக்கிறது. இது இறந்து போன செல்களை நீக்குவதோடு புதிய செல்களை ரத்தத்தில் விரைந்து உற்பத்தி செய்கிறது. எனவே வெள்ளைப் பூண்டினை அதிக அளவில் உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று உணவியல் நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

இந்த உணவுகளை உட்கொள்வதன் மூலம் ரத்தம் சுத்திகரிக்கப்படுவதோடு உடலுக்குத் தேவையான சக்தி எளிதில் கடத்தப்படும். இதனால் உடலும் உற்சாகமடையும் என்பது அவர்களின் அறிவுரையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் பெண்கள் நிலை



வருடா வருடம், உலகம் முழுவதும், பெண்களால் மட்டுமே கொண்டாடப்படுவதற்காக வரும் தினம் மகளிர் தினம். சென்ற வருடம் அல்லது முந்தைய வருடங்களில் பெண்களுக்கு, நாட்டில், உலகில் என்ன புதிய சலுகைகள் அறிவிக்கப் பட்டுள்ளன.........?

ஆயிரத்தில் ஒரு பங்கு பெண்கள் மட்டுமே, காய்ச்சிய பாலில் ஏடு கட்டி வருவது போல முன்னேறி உள்ளனர்.

அதிலும் கணக்கெடுத்தால், சமூக, பொருளாதார அந்தஸ்துள்ள, நல்ல குடும்பப் பின்னணியில் படிப்பும், ஆதரவும் உள்ள பெண்கள் மட்டுமே மேலேறி வந்துள்ளனர்.

மிகச் சில ஏழைப் பெண்கள், தங்கள் உழைப்பாலும், முயற்சியாலும் மட்டுமே உயர்ந்துள்ளனர்.

இன்னும் நாடு, நகரம், கிராமங்களில் பெண் சிசுக்கொலைகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அதுவும் விஞ்ஞான, அறிவியலின் துணையோடு - ஒரு துளி இரத்தம் மூலம் கரு ஆணா, பெண்ணா என ஸ்கானிங் மூலம் அறிந்து அழிப்பதும் நிகழ்ந்து கொண்டே இருக்கும் ஒரு பயங்கரம்.

பெண்களின் கல்வி, உயர் கல்வி, நல்ல கல்வி என்பது இன்னும் கிராமங்களைப் பொறுத்தவரை கனவே. நாட்டில் வேலை இல்லாத படித்த ஆசிரியர்களைச் சற்று உயர்ந்த சம்பளத்துடன் கிராமங்களுக்கு அனுப்பலாமே. இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏதும் இல்லை. வருங்கால படித்த பெண்களால் நாடும், வீடும் முன்னேறும்.

பரவலாக பெண் குழுக்கள் மூலம் தரப்படும் கடன்கள் பெண்களால் கையெழுத்திடப்பட்டு ஆண்களின் பைகளுக்குள் செல்கின்றன. ஒரு ஐந்து சதவீதம் பெண்கள் மட்டுமே நல்ல முறையில் உபயோகப்படுத்துகின்றனர்.

இன்னும் பெண்களுக்கு முதுமையின் கொடுமை நீங்கவில்லை. நல்ல காப்பகங்கள் நிறையத் தேவை. பிச்சைக்காரர்களில் கூடப் பெண்கள் தான் அதிகம்.

சினிமாவிலும், விளம்பரங்களிலும் பெண்களை இன்னும் துகிலுரித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

திருமணக் கொடுமைகள் - ஏழைப் பெண்களுக்கு - இன்னும் குறையவே - இல்லை.

எய்ட்ஸ் கொடுமையில் பாதிக்கப்படுபவர்களில் பெண்களே அதிகம்.

33 சதவீதம் ஒதுக்கீடு - அரசியலில் பெண்களுக்கு இன்னும் கனவே.

சோமாலியா மற்றும் இலங்கைப் பெண்களின் அவலநிலை மாறவே இல்லை.

இந்திய மகளிரைப் பற்றி மகாத்மாவும், பாரதியும் கண்ட கனவுகள் இன்னும் மேம்பாடு அடையவே இல்லை.

மேற்கூறியவை எதிலும் பெண்களுக்கு ஒரு உண்மையான, மரியாதையோ, சமூகப் பொருளாதார பாதுகாப்போ, அங்கீகாரமோ அளிக்காமல் ஒவ்வொரு வருடமும் வெறும் உலக மகளிர் தினம் கொண்டாடப்படுவதற்குப் பதிலாக, ஏதேனும் ஒரு இலக்கை எடுத்து அதை மேம்படுத்தினால் அதுவே தாழ்த்தப்பட்ட சமூகத்தில் துன்பங்களிலும், துயரங்களிலும் அழுத்தப்பட்ட பெண்களுக்கு செய்யப்படும் ஒரு உயரிய விடுதலையும், உலக மகளிர் தினமும் ஆகும்.

-ரேவதி-

# கறிவேப்பிலைச் சாதம்



சாதம் -02 கோப்பை
கறிவேப்பிலை - ஒரு கோப்பை
நல்லெண்ணை - 1 மேசைக்கரண்டி
கடலைப்பருப்பு- 1/2 தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு - 1/2 தேக்கரண்டி
கடுகு 1/2 தேக்கரண்டி
பெரிய வெங்காயம்
மிளகுத்தூள் 1/2 தேக்கரண்டி
மிளகாய் 3
பெருங்காயம் - 1சிட்டிகை
முந்திரி - 5
எலுமிச்சை - 1/4 பழம்
நெய் - 1 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

சிறிதளவு நெய்யில் கறிவேப்பிலையை மொறுமொறுவென வறுத்து நன்றாகப் பொடித்துக் கொள்ளவும். பெரிய வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

அரிசியைச் சாதகமாக வடித்து அகன்ற பாத்திரத்தில் வைக்கவும்.

அடுப்பில் பாத்திரத்தை வைத்து எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு போட்டு வெடித்ததும் கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்புப் போட்டு, மிளகாய் ஒரு கொத்துக் கறிவேப்பிலை போட்டுத் தாளிக்கவும்.


பிறகு நன்கு நறுக்கிய வெங்காயம் பெருங்காயத்தூள் சேர்த்து சிவக்க வதக்கவும்.

பொடித்த கறிவேப்பிலையைப் போட்டு உப்பு சேர்த்து வதக்கவும். அதனுடன் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து சேர்க்கவும்.

பின்னர் அதனுடன் மிளகுத்தூள், நெய்யில் வறுத்த முந்திரியைச் சேர்த்துக் கிளறவும்.

பின்பு ஆறவைத்த சாதத்தைச் சேர்த்து சாதம் குழையாமல் நன்றாகக் கிளறி அடுப்பிலிருந்து இறக்கிப் பரிமாறவும்.

# சம்மரில் அழகாக உங்களுக்கான டிப்ஸ்



கொளுத்தும் வெயிலில் இருந்து தப்பிக்க என்ன வெல்லாம் செய்ய வேண்டி இருக்கிறது. வெயிலில் இருந்து பாதுகாக்காவிட்டால் வியர்வை, வேர்க் குரு, எண்ணெய் பிசுபிசுப்பு, முகப் பரு, வரண்ட சருமம் என்று பளிங்கு போன்ற சருமத்தையும் சம்மர் பாழாக்கி விடும். இப்படிப்பட்ட வெய்யிலிலும் நீங்கள் அழகாக ஜொலிக்க டிப்ஸ்.

கோடைக்காலங்களில் சிலருக்கு முகம் வறண்டு காணப்படும். அதற்கு பாலேடு சேர்த்து சிறிது எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவி, 10 நிமிடங்கள் ஊறிய பின்னர் முகத்தைக் கழுவ வேண் டும். இப்படிச் செய்தால், முகம் ஈரப்பதமாகவும், வழுவழுப்பாகவும் மாறும். ஆனால் முகப்பரு உள்ளவர்கள் பாலேடு உபயோகப்படுத்தக் கூடாது.

வெயில் காலங்களில் சிலர் அருகில் வந்தாலே வியர்வை வாடை தாங்காது. வியர்வை அதிகமாக உள்ள பெண்கள் சந்தனக் கட்டையை பன்னீர் விட்டு இழைத்து உடம்பில் பூசி வந்தால் வாடை குறையும்.

வெயிலாலும், கவரிங் நகைகளை அணிவதாலும் சிலருக்கு கழுத்து மட்டும் கறுத்து காணப்படும். இதற்கு கோதுமை, ஓட்ஸ், பாசிப்பயிறு மாவு மூன்றையும் பாலுடன் கலந்து கழுத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்துக் கழுவி வந்தால் கறுமை படிப்படியாக மறைந்துவிடும்.

வேர்க்குரு பிரச்சனையுள்ளவர்கள், நீரில் சிறிது சந்தனம் கரைத்து வேர்க்குரு உள்ள இடங்களில் தடவி வந்தால் வேர்க்குரு மறைந்து போகும். கோடைக்காலத்தில் சருமம் கருத்துப் போனால், இரவில் கசகசாவை பாலில் ஊறவைத்து அதைக் காலையில் அரைத்து உடம்பில் தேய்த்து அரை மணி நேரம் ஊறிய பின்னர் குளித்து வந்தால் சருமம் நிறமாகவும், பளபளப்பாகவும் மாறும்.

பப்பாளிப் பழத்தை நன்றாக மசித்து அதை முகத்தில் பூசிவர, முகத்திலுள்ள இறந்த செல்கள் உதிர்ந்து முகம் பளபளப்பாகும். வெள்ளரிப் பிஞ்சு மற்றும் உருளைக் கிழங்கை சிறு துண்டுகளாக வெட்டி கண்ணின் மேல் வைத்தால் இந்த கொளுத்தும் வெயிலில் கண்களுக்கும் குளிர்ச்சி. தவிர நாட்பட்ட கறு வளையம் நீங்கிவிடும்.

தர்ப்பூசணியின் அடிப்பகுதியை முகம், உடம்பு, கை, கால்கள் தேய்த்து சிறிது நேரம் கழித்து குளித்து வர சம்மரில் சருமத்தில் இருக்கும் சுருக்கங்கள் மறைந்து புதுப்பொலிவு உண்டாகும்.

வெயில்ல இருந்து உங்க சருமத்தை நீங்க தான் பத்திரமா பாத்துகனும்

# பஷன் ஏற்படுத்தும் தீங்கு




இயற்கை அழகுப் பொருட்கள் அதிகமாக இருந்தாலும் புதியதாய் வருகின்ற பொருட்களின் மீது தான் ஆர்வம் அதிகரிக்கின்றது.

இயற்கை அழகு கொட்டிக்கிடக்கையில் மேலும் அழகு படுத்துகிறேன் என்று பெண்கள் போட்டுக்கொள்ளும் அழகு சாதனப் பொருட்கள் உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கிறது . கூந்தலுக்கு உபயோகிக்கும் ஷாம்பு முதல் பாதநகங்களுக்கு போடும் நெயில் பாலிஷ் வரை பெண்கள் உபயோகிக்கும் அழகு சாதனப் பொருட்களின் மூலம் தினசரி 500க்கும் மேற்பட்ட ரசாயனங்கள் நம் உடம்பிற்குள் புகுவதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

முக அழகுப் பொருட்கள்

முக அழகிற்குப் போடப்படும் லோஷன்களில் 24 விதமான ரசாயனங்கள் கலக்கப்படுகின்றன. இதிலுள்ள பாலிஎதிலீன்மெதாக்ரைலேட் மிகவும் ஆபத்தானது.

இதனால் அலர்ஜி, நோய் எதிர்ப்பு சக்தியில் மாற்றங்கள், புற்றுநோய்க்கான காரணிகள் ஏற்படக்கூடும்.

லிப்ஸ்டிக்கில் பாலிமெதில் மெத்தாக்ரைலேட் உள்ளிட்ட 33 ரசாயனங்கள் உள்ளன. இவற்றில் புற்றுநோயை உருவாக்கும் காரணிகள் காணப்படுகின்றனவாம்.

வாசனைத்திரவியங்கள்

கோடை காலம் வந்தாலே வாசனை திரவியங்களின் விற்பனை அதிகரிக்கத் தொடங்கிவிடும். இதில் 15 விதமான ரசாயனங்கள் கலக்கப்படுகின்றன. இவை கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. உடலுக்குப் போடும் பொடி லோசன்களில் 32 வகையாக ரசாயனங்கள் உள்ளன.

தோல், கண்கள் மற்றும் நுரையீரலில் எரிச்சல் ஏற்படுத்தக்கூடியது. தலைவலி, மயக்கம், இயங்கும் தன்மையில் மாற்றங்களை ஏற்படும்.

இதன் மூலம் தோல் தடிப்பு, தோல் நிறமாற்றம், எரிச்சல், ஹோர்மோன் கோளறு போன்றவை ஏற்படும்.

## சில தவறான நம்பிக்கைகள்..

பிறந்த குழந்தை தாயின் முகம் பார்த்துச் சிரித்தால் தாயின் முடி கொட்டும் என்பது பழம் நம்பிக்கை. இன்றும் கூட சில கிராமங்களில் இந்நம்பிக்கை உள்ளது. ஆனால் இந்த நம்பிக்கை உண்மைதான்.

பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் ஹோர்மோன் செயல்பாட்டினால் உடற்பாகங்களைப் போலவே அவர்களது தலைமுடியும் சற்றுக் கூடுதலாகவே வளர்கிறது. இது குழந்தைப் பிறப்புக்குப் பின்பும் மூன்று மாத காலத்திற்குத் தொடரும்.

குழந்தை பெற்ற பெண்களுக்கு மூன்று மாதங்களுக்குப் பிறகு ஹோர்மோன் செயல்பாடுகள் குறைந்து பழைய நிலைக்கு மாறும். இந்தக் காலத்தில் அவர்களுக்கு தலை முடி இயற்கையாகவே சிறிது உதிரத் தொடங்கும்.

குழந்தை பிறந்த மூன்று மாத காலத்திற்குப் பிறகுதான் சிரிக்கத் தொடங்கும். இதைக் கணக்கில் கொண்டுதான் மேற்கண்ட நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பிறந்த குழந்தை தாயின் முகத்தைப் பார்த்துச் சிரித்தாலும் சிரிக்கா விட்டாலும் மூன்றுமாதத்திற்குப் பின்பு சாதாரணமாக முடி கொட்டும் என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1980களின் ஆரம்பத்தில் இந்திராகாந்தி புலிப் பயங்கரவாதத்தை வளர்த்துப், வளர்த்தார் என இன்றும் வாய் ஓயாமல் உளறிவரும் இலங்கையின் பேரினவாதிகள் சட்டிக்குள் இருந்து நெருப்புக்குள் விழுந்த கதையாக இன்று ஜெயலலிதா எடுத்திருக்கும் விசுவரூபத்தை மிரளமிரள விழித்தபடி காண்கின்றனர். இந்திராகாந்தி எம்மாத்திரம் இவள் பாவி எங்கிருந்து வந்தாள் என்று திட்டும் நிலையும் வந்திருக்கிறது. இத்தனைக்கும் புலிகளுக்கு ஆதரவாக 1991லிருந்து ஒரு சொல் கூட ஜெயலலிதா பேசியதில்லை. இன்னும் பேசுகிறாரில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பது ஜெயலலிதாவின் தெளிவான நிலைப்பாடாகும். 2009 ஜூன் - ஜூலை மாதங்களிலும் அவர் இதையே தான் சொல்லி வந்துள்ளார். அந்நேரம் போர் ஓய்ந்த பகுதிகளில் "தமிழர்

# பேரினவாதத்தை அதிரவைக்கும் ஜெயலலிதாவின் நகர்வுகள்!

நல்வாழ்வைப் பாருங்கள்" என இலங்கை அரசு அழைப்பு விடுக்க ஓடோடி வந்து விருந்து சாப்பிட்டு நற்சான்றிதழ் வழங்கிய தி.மு.க.வினர் போன்ற தெளிவின்மை ஜெயலலிதாவிடம் கிடையாது என்று மற்றொருமுறை ஜெயலலிதா நிரூபித்துள்ளார். அன்று 2009 இலும் இலங்கை சென்ற தூதுக்குழுவில் இடம்பெறாது ஜெயலலிதா தவிர்த்தார். இன்று 3 வருடங்கள் உருண்டோடிவிட்டபோதும் அவரது நிலையில் மாற்றமில்லை. உண்மையில் இலங்கை செல்ல ஒரு எம்.பி.யின் பெயரைத் தருமாறு இந்திய மத்திய அரசு கோரியபோது ஜெயலலிதா வேண்டாவெறுப்பாக அ.தி.மு.க. சார்பில் ராஜ்யசபா எம்.பி.ரபிபெர்னாட்டை நியமித்தார். ஆனால், இதிலிருந்து தப்புவதற்கு வழிகளை அவர் தேடியது நிச்சயமாகத் தெரிந்தது. 'இலங்கை அரசுடன் விருந்துண்ட அ.தி.மு.க.வினர்' என்ற அவப்பெயரைப் பெற அவர் கொஞ்சமும் விரும்பவில்லை. முன்பு டில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் விழுந்து தேடிச் சென்று முதலமைச்சரைச் சந்தித்து இலங்கை அதிபரின் அழைப்பிதழை கொடுத்த போதும் ஜெயலலிதா நேரடியாக அதை நிராகரித்திருந்தார். இலங்கையின் இனவாதம் மாறும்வரை உறவுக்கு இடமேயில்லை என்பது இச்செயற்பாடுகள் மூலம் திரும்பத்திரும்ப நினைவூட்டப்பட்டு வந்தது.

இதேவேளை ஜெனீவாவில் இந்தியா கொடுத்த அடியால் மிரண்டுபோன இலங்கையின் அமைச்சர்களுள் ஒருவர் "கூடங்குளம் அணுஉலையால் 20கிலோமீற்றரில் உள்ள (மன்னாரையே அவர் கருதினார்.) இலங்கைக்கு ஆபத்து" என புதிய கண்டுபிடிப்பொன்றை வெளியிட்டது. ஜெயலலிதாவிற்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. நியாயமற்றமுறையில் கூடங்குளம் பற்றி கருத்து வெளியிட்ட இலங்கை அரசுக்கு கண்டனத்தை வெளியிடும் வகையில் அ.தி.மு.க. எம்.பி. இலங்கை செல்லும் இந்திய எம்.பி.க்கள் குழுவில் இடம்பெறமாட்டார் என அதிரடியாக ஜெயலலிதா கடந்த வாரம் அறிவித்தது புலியையும் கொழும்பையும் ஒருங்கே தாக்கிவீழ்ப் போடச்செய்தது. தூதுக்குழுவின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் ஜெயலலிதாவின் ஆதரவிற்காகவும் அன்பிற்காகவும் தவம் கிடப்பவர். 2014ல் சுஷ்மா பிரதமராக வேண்டுமாயின் நிச்சயமாக ஜெயலலிதாவின் கடைக்கண் பார்வை அவசியமே அவசியம். இப்படி இருக்க ஜெயலலிதாவின் கோபத்துக்கு ஆளாவதா என்ற கேள்வியால் தூதுக்குழுவின் பயணமே ரத்தாகலாம் என்னும் தகவல்கள் வெளியாகி இருந்தன. அ.தி.மு.க. எம்.பி. சிங்கள தீவிர போக்கினால் தாக்கப்படலாம் என்ற அச்சமும் ஜெயலலிதாவின் முடிவுக்கு மற்றொரு காரணம் எனவும் கூறப்படுகிறது. 1987 ஜூலை 29ம் திகதி இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின் நடந்த மரியாதை அணிவகுப்பில் பிரதமர் ராஜீவ் தாக்கப்பட்டு மயிரிழையில் தப்பியது நினைவு கூரத்தக்கது. இதை எல்லாம் ஜெயலலிதா நன்றாக நினைவில் வைத்துள்ளார் எனத் தெரிகிறது. அ.தி.மு.க. முடிவால் கதிகலங்கிய கனவுரும் கடைசி நேரத்தில் பின்வாங்கிவிட்டார்.

கூடங்குளம் பற்றி திடீரென இலங்கை அமைச்சருக்கு ஞானம் பிறக்க ஜெனீவா தீர்மானமே காரணம் என்பது தெரிந்த விடயமே. இதுநாள்வரை கூடங்குளம் இருப்பது இவருக்குத் தெரியாதா என இந்திய அமைச்சர் நாராயணசாமி நையாண்டி செய்துள்ளார். ஒருவேளை ஜெனீவாவில் இந்தியா இலங்கையை ஆதரித்திருந்தால், கூடங்குளம் அணுஉலையில் விபத்து நடந்தாலும் இலங்கையை அது தாக்கிவிடாது என இவர் கருதுகிறாரா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. காழ்ப்புணர்ச்சிக்கும் போக்கிரித்தனத்துக்கும் எல்லையே இல்லை என்பது தெளிவான உண்மையாகும். இலங்கையின் பேரினவாத பிரிவினர் இந்தியாவை ஒருபோதும் நம்பத் தயாரில்லை. ஆனாலும் எங்காவது சர்வதேச மன்றில் இறுகிப்போனதும் "இந்தியா எமது அண்ணன் தானே... எமது நட்புநாடுதானே... என சாத்தான் வேதம் ஓதுவதுபோல பேசுவார்கள். மற்றொரு அமைச்சர் இந்திய தமிழர்களுக்கு வீடமைப்பது போல முஸ்லிம்களுக்கும் வீடமைத்துத்தரவேண்டும் என்று கோரி இருந்தார். அவர் பாகிஸ்தானிடம் வீடமைப்புக்கு உதவி கேட்க வேண்டும் என இந்திய ராஜதந்திரி ஒருவர் நறுக்கென்று அப்போது கூறி இருந்தார். இந்தியா பாகிஸ்தான் கிரிக்கட் போட்டி நடந்தால் இவர் இந்தியாவை ஆதரிப்பாரா என்றும் அப்போது கேள்வி எழுப்பப்பட்டது. இவற்றின் அடிப்படை இதுவே "இந்தியா உதவ வேண்டும். ஆனால் கேள்வி ஏதும் எழுப்பக்கூடாது. உள்நாட்டு விடயத்தில் தலையிடக் கூடாது" இந்த வாதம் எவ்வகையில் நியாயமாகும் என தமிழ்நாட்டிலுள்ள பல தரப்பினர் எதிர்க்கேள்வி எழுப்புகின்றனர். வைகோ முதலானோர் முழு ஈழ அனுதாபிகள் எனினும் அவர்களிடம் அரசியல் பலமில்லை என்பதால் அதைப்பற்றி இலங்கை அரசு அஞ்சுவதேயில்லை. ஜெயலலிதாவிடம் அரசியல் பலம் குவிந்து கிடப்பதால் அஞ்சியே ஆக வேண்டிய நிர்ப்பந்தமுள்ளது. தி.மு.க.வையோ விருந்து வைத்து சமாளித்து விடலாம், ஜெயலலிதா என்றால் இலங்கை பேரினவாதிகளுக்கு சிம்மசொப்பனம் எனுமளவுக்கு இவர்களை இட்டுச்சென்றுள்ளது. இத்தனைக்கும் 2009 மே மாதம் வரை ஜெயலலிதா தமது அனுதாபி என்றே இவர்கள் கணக்குப்போட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் ஆடி மனதில் உள்ள இந்திய எதிர்ப்பு உணர்வுக்குச் சரியான பதிலடி இதுவரையிலும் இந்திய தரப்பிலிருந்து வரவில்லை என்பது இவர்களது இறுமாப்புக்கு முக்கியகாரணமாகும். 1987ல் ராஜீவ் கொடுத்த ஒரு சில அடிகளுக்கு அப்பால் இந்தியா ஒருபோதும் இலங்கையைத் தண்டித்தது கிடையாது. தண்டிப்பதற்கு நியாயமான காரணங்கள் ஒரு கோடி இருந்தும் இந்தியா தண்டிக்கவேயில்லை. எனவே 2012 ஜெனீவா அடி என்பது இவர்களுக்கு நிச்சயமாக எதிர்பாராத ஒன்று தான்.

சீனாவின் தாளத்திற்கு ஆடி இந்தியாவை வருத்தும் இவர்களுக்கு பதிலடி தர யாருமே இல்லையா? என ஏங்கிய இந்திய அனுதாபிகட்கு ஆபத்தாண்டவனாக வந்தவரே ஜெயலலிதா. அவர் [illegible] போட்டியில் [illegible] நுழைந்து கொண்டுள்ளதால் இலங்கையை இராஜதந்திர ரீதியில் பந்தாட இயலுமான ஒரே தலைவர் ஜெயலலிதா மட்டுமே என்பது வர வர மென்மேலும் உறுதிப்படுத்தப்பட்ட உண்மையாகி வருகிறது.

இது இவ்வாறிருக்க, அண்ணன் போன்ற இந்தியா தம்பியை அரக்கலாமா எனக் கேட்டமற்றொரு பேரினவாதி 1987ல் பிரதமர் ராஜீவை அடித்த கடற்படைச் சிப்பாய்க்கு தேசியவீரர் விருது வழங்க சிபாரிசு செய்திருந்தாரே என்று மற்றொரு மறுத்தானை இந்திய ஊடகமொன்று போட்டிருக்கிறது. சகல இந்திய பத்திரிகைகளுமே இலங்கையின் இனவாதிகளது இந்திய எதிர்ப்புக் கோஷத்தை நன்றாகப் படம் பிடித்துக் காட்டி வருகின்றன. இது ஒரு புதிய மாற்றமென்றால் மிகையில்லை. இலங்கை குறித்து இந்தியா அரசும் கட்சிகளும் ஊடகங்களும் கொண்டுள்ள நிலைப்பாடு 2009 மே 18 க்கு முந்திய காலத்தில் ஒன்றும் அன்றைய நாளின் பின்பு வேறொன்றும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஜெயலலிதாவும் 18/05/2009க்கு முந்திய நிலைப்பாடும் அதற்குப் பிந்திய நிலைப்பாடும் ஆகிய இரண்டும் கொண்ட ஒருவர் தான். இது அமெரிக்காவுக்கும் பொருந்தும் உண்மையாகும். 'இந்து' பத்திரிகை ஆசிரியராக சமீபகாலம்வரை இருந்த என்.ராம் இலங்கைத்தரப்பின் நண்பர் என அறியப்பட்ட ஒருவராவர். அவரே படிப்படியாக இலங்கைப் பேரினவாதத்திற்கு எதிராக மாற்றமடைந்திருப்பது கவனிக்கத்தக்கது. ஜெனீவா நிகழ்வுகளை ஒட்டி அதற்குமுன்பும் பின்பும் 'இந்து' பத்திரிகை எழுதிய சகல கட்டுரைகளும் ஆசிரிய தலையங்கங்களும் இந்தியாவின் புதிய நிலைப்பாட்டுக்கு ஆதரவாகவும் இலங்கைக்கு எதிராகவுமே இருந்த குறிப்பிடத்தக்க அம்சமாகும். சோ, என்.ராம், ஜெயலலிதா, சுப்பிரமணியசாமி ஆகிய நான்கு முக்கிய பிராமணர்கள் புலிகளை எதிர்ப்பதில் முன்னின்ற முதல் நான்கு இந்தியர்களாவர். இதில் இருவர் இன்று பகிரங்கமாக இலங்கையை நோக்கி விரலை நீட்டத் தொடங்கிவிட்டனர். ஏனைய இருவரும் அரசியல் பலமோ ஊடகத்துறை பலமோ அவ்வளவாக இல்லாதவர்களே. இவ்விருவருமே கூட இலங்கைக்கு எதிரான இந்தியாவின் புதிய நிலைப்பாட்டை எதிர்க்கமுடியாத கையறு நிலையிலேயே உள்ளனர். காலம் மாறும் என்பது இதுதானோ...? இது இவ்வாறிருக்க இலங்கை வந்த தூதுக்குழுவினர் இலங்கை அதிபருடன் கடைசிநாள் விருந்து சாப்பிடும் அம்சத்தை நிகழ்ச்சிநிரலிலிருந்து நீக்கும்படி இந்தியா வெளியுறவு அமைச்சை மன்றாட்டமாக கேட்டுக் கொண்டுள்ளனர். ஜெயலலிதாவின் சாட்டையடிக்கு சுஷ்மா சுவராஜ் எவ்வளவு அஞ்சுகிறார் என்பதை இது தெளிவாக்கக் காட்டியது. மேலும் கூடங்குளம் பற்றி அமைச்சர் கூறியதை முழுமையாக நிராகரித்து இலங்கை அதிபர் அணுசக்தி அதிகாரசபையின் தலைவர் விஜயவர்த்தன மூலம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். கூடங்குளத்தை நாம் அன்போடு வரவேற்கின்றோம் என்ற தொனியில் அந்த அறிக்கை அமைந்துள்ளது. அதாவது எனது அமைச்சர் முட்டாளை விட, ஒரு அதிகாரி புத்திசாலித்தனமாக பேசுவார் என ஜனாதிபதி அவர்கள் சூசகமாக இந்தியாவிடம் கூறி மறைமுகமாக அதற்கு மன்னிப்பும் கேட்டுள்ளார். மேன்மேலும் ஜெயலலிதாவுடன் முட்டிமோதி மூக்குடைபட ஜனாதிபதி விரும்பவில்லை. இவ்விடயத்தில் மாத்தறையில் பிறந்த பெரும்பான்மை இனத்தில் கொழும்பில் பிறந்த பெரும்பான்மை இனத்தவரை விட அதி புத்திசாலி என்பதை ஜனாதிபதி மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளார்.

அபிஜித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பல் பரமசிவம்




### தமிழைக் காக்க....

என்னை இளந்தாரியாய் பார்த்த ஆள்கள் சரியா ஆசைப்படுவினம். 'பெற்றோ மக்ஸ்ஸில்' முகத்தைப் பார்த்தால் எப்படி இருக்கும்? அப்படி ஒரு பொலிவான முகம். அதில ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள் 'காண்டில்' மாதிரி ஒரு மீசை. சின்னப் பிள்ளையளுக்கு என்னைக் கண்டால் கொஞ்சம் அச்சம் இருக்கும். மற்றாக்களுக்கு நான் ஒரு ஹீரோதான். இந்த ஹீரோவிடமும் ஒரு நாள் பஸ்சுக்குள்ள முருகன் பொக்கற் அடிச்சிட்டான். யாழ்ப்பாணத்தில இருந்து வவுனியா புறப்பட்ட நான் நடுவழியில கிளிநொச்சியில இறங்கி விட்டன்.

பொக்கற்றில் காசு இல்லை, ஆர்றை உதவி பெறுகிறதென்ற தடுமாற்றம். சுற்றும் முற்றும் பார்த்தன். ஒரு கடை 'பேட்டே கோப்பி 4 ரூபா' என்ற விளம்பரம். கலாதீர அதிஸ்போய் ஒரு 'கோப்பி' குடிப்பம் என்று போனன். இந்தக் காலத்திலை எங்கேயும் 4 ரூபாவுக்குக் கோப்பி கிடைக்குமே? 'பேட்டே கோப்பி' கடையில போய் பார்த்த போதுதான். இங்கு இருப்பதற்கு சீற் இல்லை, மேசையில் மொய்க்கிற இலையான் இல்லை. 'வெரி நீற்' ஆக இருந்தது. ஒரு வெள்ளை மெசினை துணியால மூடியிருந்தது. அப்ப விளங்கிவிட்டது இது கோப்பிக் கடை இல்லையென்று. வெளியில வந்து பார்த்தன் 'பேட்டேக் கோப்பி' தெரிந்த கையெழுத்தாக இருந்தது. பக்கத்தில் ஒரு மினிதியேட்டர். அதில படத்தின் பெயர் எழுதப்பட்டிருந்தது. இன்று இரவு 6.30 மணிக்கு 'கக்கா - கக்கா' திரைப்படம். நாளைமுதல் 'உன்னிடத்தில என்னைக் கெடுத்தேன்' அதுவும் தெரிந்த கையெழுத்தில் 'வோல் போஸ்டர்' அப்பொழுதுதான் எனக்கு மண்டையில் உறைத்தது. என்னோடு படித்த ஒருவன்தான் இந்த 'பேட்டே கோப்பி' மற்றது மினிதியேட்டர் நடத்துறது என்பது. அரவு போடவேண்டிய இடத்தில் அரவு போடாமலிருப்பதும் அரவு போடாமலிருக்க வேண்டிய இடத்தில் போடுவதும் என்னோடு படித்த 'கோ'சவன் தான்.

கேசவன் எனக் கையெழுத்துப் போடச்சொன்னால் 'கே'யுடன் ஒரு அரவு சேர்த்து 'கோசவன்' என்றே எழுதுவான். 'காக்க - காக்க' படம் பட்டபாடு அவனின் கையெழுத்தில் போஸ்டரில் படும்பாடு. அவனைத் திருத்த எங்கடை தமிழ் சேர் பட்ட பாடு ...... திரும்பவும் 'பேட்டே கோப்பி' கடையுள் நுழைந்தேன். "என்ன போட்டோ கொப்பி எடுக்க வேண்டுமா?" என்று ஒருத்தர் கேட்டார் வழிவாக நிமிர்ந்து பார்த்தேன். அதே கோசவன் தான். நான் நினைத்தது சரியாகப் போயிற்று. "நான்... நான் தான்.... பரமசிவம்". அவருடன் கூடப்படித்த பள்ளி ஞாபகங்களைக் கூறினேன்.

என்னை அடையாளம் கண்ட கேசவன் நல்லா மகிழ்ந்து போனான். கையைப்பிடித்து வரவேற்றான். கடைப் பொடியனிடம் பக்கத்துக் கடையில் போய் 'கோப்பி' வாங்கி வரும்படி பணித்தான். எனக்கு அந்த வேளையில் ஒரு வாய் 'கோப்பி' தேவைப்பட்டதை என்ன மாதிரி அறிந்தானோ தெரியவில்லை. பஸ்ஸில் 'பேர்ஸ்' களவு போனதாகக் கூறினேன்.

தான் ஒழுங்காகப் படிக்காவிட்டாலும் மற்றவர்களில் தங்கி இருப்பதில்லை. பக்கத்து மினித் தியேட்டர் இந்த போட்டோ கொப்பிக் கடை அனைத்தையும் தான் தான் நடத்துவதையும் போஸ்ரர் மற்றவர்களை நம்பியிராது தான் தான் எழுதுவதையும் எடுத்துக் கூறினான். அதில் ஒரு நம்பிக்கை தெரிந்தது. ஆனாலும் தமிழைக் காக்க யார் வரப்போகிறார்கள்.? இப்போது யுத்தம் நிறைவுற்றபின் காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகளில் அதுவும் குறிப்பாக அரச சார்பு விளம்பரப் பலகைகளில் பிழை இன்றி காணப்படும் விளம்பரப் பலகைகளைக் கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என ஒரு போட்டியே வைக்கலாம்.

அரசாங்கம் வெளியிட்ட ஒரு அறிக்கைப் புத்தகத்தில் சங்கானை என்பதனை எப்படி எழுதி இருந்தார்கள் தெரியுமே? 'சங்கனாய்' என்று அச்சில..... அச்சிட்டிருந்தார்கள். இதுகளைப் பார்த்துப் படிக்கிற பிள்ளைகள் தமிழ்ப் பாடத்தைப் பரீட்சையில எப்படித்தான் சித்தியடையப் போகுதுகளோ தெரியேல்லை? இலங்கையில் ஒன்பது மாகாணங்களிலும் 2011 க.பொ.த. சாதாரண தரத் தேர்வில் வடக்குமாகாணம் பின்தங்கியுள்ளமை சுட்டிக் காட்டப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் 646 பேர் அனைத்துப் பாடங்களிலும் அதாவது தரம் ஒன்றில் கற்று வந்த தமிழ்ப்பாடம் உட்பட அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

அந்தக் காலத்தில் நமக்குக் கை கொடுத்து O/L சித்தியடையக் காரணமாக இருந்த பாடங்கள் தமிழ்மொழி, தமிழிலக்கியம், சமயம். தக்க சமயத்தில் கைகொடுத்தவை இவைதான். நான் ஒரு சிங்கள ஆசிரியரிடம் சிங்களம் கற்றேன். சிங்களப் பாடத்திற்கு மட்டும் விண்ணப்பித்து தேர்வு எழுதினேன். சித்தி கிடைத்தது. அதனை எனக்குக் கற்பித்த ஆசிரியரிடம் சென்று கூறினேன். 'சேர்' நான் சிங்களப் பாடம் 'பாஸ்' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தேன்.

அவர், "சிலவேளைகளில் அப்படி நடக்கிறது தான்..... இனியேனும் கவனமாகப் படியும்" என்றார். நான் கூறியது அவருக்கு விளங்கவில்லையோ எனத் திரும்பவும் கூறினேன். அதற்கு அவர் "விளங்குது..... விளங்குது... சிலவேளை இப்படி நடக்கிறதுதான் .... இனியேனும் கவனமாகப் படியும்....." என்றார். அப்பொழுதுதான் அவர் என்ன சொல்லவருகிறார் என்பது எனக்கு விளங்கியது. இதே போன்றுதான் எனதுமகன் தனது தேர்வு முடிவைத் தெரிவித்தபோது எனக்கு ஏற்பட்டது.

முன்பெல்லாம், கடிதக்காரன்தான் 'றிசல்ற்'றை வீட்டிற்குக் கொண்டுவந்து தருவார். சோதனை எழுதிய எமக்கு பெறுபேறு எப்படி அமையும் எனத்தெரியும். அதனாலே யாழ் பெரிய 'போஸ்ற் ஒப்பிஸ்' வாசலில் வைத்து, எமது பகுதி தபால்காரரிடம் றிசல்ற்றை வாங்கிவிடுவோம். 'றிசல்ற்' சரியில்லை என்றால் அது புல்லுக் குளத்தில் சங்கமமாகிவிடும். நல்ல 'றிசல்ற்' என்றால் மீண்டும் தபால் சேவகரிடம் கொடுத்து விடுவோம். அவர் வந்து வீட்டின் முன் 'பெல்' அடிக்க, வீட்டிலிருந்து கொண்டு, அம்மாவை, அல்லது தங்கச்சியை யார் பெல் அடிக்கிறதெனப் பார்க்கச் சொல்வோம்.

கடிதத்தை வாங்கி வருமவரை உடைக்கச் சொல்வோம். கடிதம் மீண்டும் உடைக்கப்படும். 'றிசல்ற்' பார்த்து மகிழ்வடைவோம். ஒரு ஹீரோ போல நடையுடை பாவனை திகழும். இப்போ எல்லாம் 'றிசல்ற்' கைத்தொலைபேசி ஊடாக வீட்டினுள்ளே வந்துவிடும் ஏ.எல். தேர்வு எழுதிய மகன் றிசல்ற்றைப் பார்த்து விட்டு அப்பா நான் மூன்று 'ஏ' என்றான். கூட இருந்த தாய் துள்ளிக் குதித்து மகனைக் கட்டி அணைத்தாள். நான் அமைதியாக "போஸில் றிசல்ற் பார்க்கையில் பெயரும் இருக்குமா?" என என் சந்தேகத்தைக் கேட்டேன் "இல்லை இன்டெக்ஸ் நம்பரை அடித்தால் றிசல்ற் வரும்" என்று 3A றிசல்றை கையடக்கத் தொலைபேசி சின்னத் திரையில் காட்டினான்.

பெயருடன் றிசல்ற் வரும் போது பார்த்துக் கொள்கிறேன் எனக் கூறிவிட்டு அமைதியானேன். எத்தனை தடவை ஓ. எல் சோதனை நான் எடுத்தனான் என்று என் மகனுக்குத் தெரியுமா? ஒருதடவை எடுத்துவிட்டு எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இந்த அப்பாவிற்கு எப்பவும் சந்தேகம் தான். இங்கு பாருங்கள் அப்பா என மீண்டும் கைத்தொலைபேசி சின்னத் திரையில் 'றிசல்ற்'றைக் காண்பித்து விளக்கினான். "அப்பா 3A, ஆங்கிலம் 'F' எங்கடை பாடசாலையில், உங்களின் மகனைத் தவிர வேறு யார் ஆங்கிலப் பாடத்தில் F எடுப்பார்கள்?..... இது எனது 'றிசல்ற்' தான் அப்பா" என்று தனது 3A யை உறுதிப்படுத்தினான்.

## தென்கொரியாவில் இயந்திரக் காவலன்

தென் கொரியாவில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் சோதனை முயற்சியாக உலகில் முதல் இயந்திர மனித சிறைக்காவலன் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திர மனித சிறைக்காவலனில் பொருத்தப்பட்டுள்ள முப்பரிமாண ஒளிப்படக் கருவி சிறைக் கைதிகளைக் கண்காணிப்பதுடன் இதில் பொருத்தப்பட்டுள்ள மற்றைய கருவிகளும் இதற்கான விசேட மென்பொருளுடன் இணைந்து கைதிகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்து அவர்களின் உணர்வுகளின் அடிப்படையில் உடல் வெப்ப நிலையை அவதானித்து ஆபத்தான நிலைகளை சிறைச்சாலையின் தலைமையகத்திற்கு அனுப்புகின்றது.


கண்காணிப்பதற்காக இந்த இயந்திர மனிதன் சுற்றி வரும் வேகம் ஒரு மனிதனின் நடை வேகத்திற்கு சமமாக அமைக்கப்பட்டுள்ளது. இதனை ipad மூலமாக கட்டுப்படுத்தக் கூடியதாகவும், ஆபத்தான நிலையில் கைதிகளுடன் தொடர்பை மேற்கொள்ளக்கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பின்பகுதியில் மின்சக்தி குறையும் பட்சத்தில் ஆங்காங்கே சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள மின்னூட்டி நிலையங்களுடன் தானாகவே இணைத்துக்கொண்டு மின்சக்தியை சேகரித்துக்கொள்கின்றது.

## மாணவர்களின் செயற்கைக் கோள் விண்ணுக்கு...?

சென்னை சோழிங்கநல்லூர் சத்யபாமா பல்கலைக்கழகம் மற்றும் மும்பை ஐ.ஐ.டி. மாணவர்கள் உருவாக்கிவரும் இரு செயற்கைக் கோள்களை ஏவுவதற்கு இந்திய விண்வெளி ஆய்வு மையம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று சந்திரயான் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

சோழிங்கநல்லூர் சத்யபாமா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேசிய அறிவியல் தொழில்நுட்ப விருது வழங்கும் விழாவில் அவர் உரையாற்றுகையில், விண்வெளித்துறையில் மாணவர்களின் ஆய்வுத் திறனை மேம்படுத்தும் வகையில், இந்திய விண்வெளி ஆய்வு மையம் வழிகாட்டுதலுடன் சிறு செயற்கைக் கோள்களை உருவாக்கும் பணியில் சில பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

சத்யபாமா பல்கலைக்கழகம் மற்றும் மும்பை ஐ.ஐ.டி. மாணவர்கள் உருவாக்கிவரும் செயற்கைக்கோள்களுக்கான பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. இவற்றை இறுதி ஆய்வுகளுக்குப்பின் விரைவில் விண்ணில் ஏவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் மயில்சாமி அண்ணாதுரை.



## செவ்வாயில் யானை...?



சிவப்புக் கிரகம் என அழைக்கப்படும் செவ்வாய்க் கிரகத்தில் யானை போன்ற ஒரு உருவம் பாறை ஒன்றில் பதிவாகியுள்ளது.

செயற்கைக் கோள் மூலம் படம் பிடிக்கப்பட்டு பூமிக்கு அனுப்பப்பட்ட 22,000 படங்களில் இருந்து மேற்படி அதிசயப் படம் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த படம் தொடர்பாக Arizona planetary பல்கலைக்கழகத்தின் புவியியலாளரான Alfred McEwen கருத்துத் தெரிவிக்கையில்,

ஆயிரம் ஆயிரம் தசாப்தங்களுக்கு முன்னர் பூமியில் ஏற்பட்ட மாபெரும் வெள்ளப் பெருக்கு மற்றும் எரிமலை போன்றவற்றால் தான் இப்படி யானை நிலை உருவானது.

அங்கு எரிமலைக் குழம்பு இருப்பதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்வுகளும் காரணமாக இருக்கலாம்.

பூமியைப் போன்ற ஒரு நிலை இருந்தால் அங்கு யானைகள் இருப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தனியொரு சிப்பாயின் அடாவடித்தனம்; தமிழர்களின் குடியிருப்புகள் தீக்கிரை!

இரா.புத்திரசிகாமணி



நான் ஒரு இராணுவ சிப்பாய் என்பதால் தொழிலாளர்கள் இவருக்கு சலாம் போட வேண்டுமா?

தான்தோன்றித்தனமாக சட்டத்தையும் ஒழுங்கையும் கையில் எடுத்துக் கொண்டு ஒரு சிப்பாய் வெறியாட்டம் ஆடுகின்றார்.

ஆனால் பொலிஸார் கண்டும் காணாதது போல் இருக்கின்றனர்.

இப்படியான நிலையில் எப்படி இனங்களுக்கிடையில் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தப் போகின்றார்கள்.

இதைத் தான் உணர்த்தி உள்ளது காலி எல்பிட்டி திவிதுர தோட்ட அடாவடிச் சம்பவம்.

மதிப்பும் மரியாதையும் விலை கொடுத்து வாங்க முடியாதவை. அவை தானாகவே வந்து சேர்பவை. அடித்தும், உதைத்தும், மிரட்டியும் வாங்கி விடமுடியாது.

ஒரு ஊரில், சமுதாயத்தில், ஒரு வட்டாரத்தில் வாழும் மக்கள் மத்தியில் அன்பாகவும், பண்பாகவும், மரியாதையுடனும் நடந்து கொள்ளும் பெரியவர்களை அவ்வூர் மக்கள் "சேர்", "ஐயா" என்று மிகவும் கௌரவத்துடன் அழைப்பார்கள்.

இந்த மதிப்பும், கௌரவமும் அந்தப் பெரியவரின் நடத்தையினால் தானாகவே வந்து சேர்ந்தவை. இவற்றை பலவந்தமாகப் பெறவில்லை.

ஆனால் "சேர்" என்ற வார்த்தையின் அர்த்தம் என்னவென்றே தெரியாத ஒருவர் அடாவடித்தனம் செய்வது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

கடந்த சித்திரைப் புத்தாண்டு தினத்தில் காலி எல்பிட்டி திவிதுர தோட்டத்தில் இப்படியான ஒரு அட்டகாசம் இடம் பெற்றுள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

காலி எல்பிட்டி திவிதுர தோட்டம். இங்கு சிங்கள - தமிழ் தொழிலாளர்கள் இணைந்து தொழில் செய்கின்றனர். சில சிங்களவர்கள் தமிழ் பெண்களையும், தமிழ் இளைஞர்கள் சிங்கள யுவதிகளையும் திருமணம் செய்து வாழ்கின்றனர்.

தனித் தமிழ் குடும்பங்கள் தோட்டங்களில் நிரந்தரமாகத் தங்கி வாழ்கின்றனர்.

அதே போன்று தனிச் சிங்களக் குடும்பங்களும் அதே தோட்டத்தில் நிரந்தரமாக வாழ்கின்றனர். அங்கு வாழும் தமிழ் மக்களும் 90 வீதமானோர் சிங்கள மொழியில்தான் பேசுகின்றனர். வீடுகளிலும் கூட சிங்களமே பேச்சு மொழியாக உள்ளது. அவர்களுடைய பெயர்களைக் கேட்கும் போதுதான் அவர்களும் தமிழர்கள் என்று அறியமுடிகின்றது.

யார் தமிழர் யார் சிங்களவர் என்று தெரியாமல் இரண்டறக் கலந்து வாழ்கின்றனர் அவர்கள்.

இளைஞர்களைப் பொறுத்தமட்டில் ஒருவரை ஒருவர் பெயர் கூறி அழைப்பதைவிட "மச்சான்" என்று அழைப்பதே அதிகம்.

இவ்வாறான சூழலில் வாழ்ந்த வளர்ந்த ஒரு சிங்கள இளைஞன் சீருடை போட்டு விட்டால் மட்டும் கனவான் ஆகிவிடமுடியுமா?

இப்படியான ஒரு சிங்கள இளைஞனுக்கு ஏற்பட்ட விபரீதமான ஆசைதான் காலி எல்பிட்டி திவிதுர தோட்டத்தில் தமிழ் குடும்பங்கள் வாழ்ந்த ஏழு வீடுகளைத் தீக்கிரையாக்கி உள்ளது.

வங்கியிலோ, வேறு அரசதிணைக்களங்களிலோ தொழில் பெறுவதற்கான கல்வித் தகைமைகள் ஏதும் இல்லாததினால் இராணுவத்தில் இணைந்தவர் இவர்.

அங்கும் கூட ஏதாவது மதிக்கக் கூடிய தரத்திலும் இல்லை. அவரும் ஒரு சாதாரண சிப்பாய்தான். வீட்டிற்கு விடுமுறையில் வந்தாலும் கூடுதலான நேரம் சீருடையில்தான் காணப்படுவாராம்.

இப்படியான சந்தர்ப்பங்களில் அந்த சிப்பாய் அங்கு வாழும் தமிழர்கள் எல்லோரும் தன்னை "சேர் - மாத்தயா", "ஐயா" என்றுதான் அழைக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்துவாராம்.

அங்கு வாழும் தமிழ் மக்கள் என்ன அடிமைகளா? இல்லையே அவர்களும் மனிதர்கள் தான். தொழிலாளர்கள் என்றாலும் சுய கௌரவத்துடன் வாழ்பவர்கள்.

சிப்பாயின் இந்த மிரட்டல்களுக்கு அம்மக்கள் மசியவில்லை. சிப்பாயின் வரட்டுக் கௌரவத்துக்கு இது ஒரு சவாலாகிவிட்டது.

இதனால் சித்திரை புதுவருட தினத்தன்று சுமார் 20 சிங்கள இளைஞர்களுடன் தோட்டக் குடியிருப்புகளுள் நுழைந்து தன்னை "சேர்" என்று அழைக்க மறுத்த இளைஞனையும் ஏன் இப்படி வம்புக்கு இழுக்கின்றீர்கள் என்று நியாயம் கேட்ட மற்றும் ஒரு இளைஞனையும் காட்டு மிராண்டித்தனமாகத் தாக்கி உள்ளனர்.

இதோடு நின்றுவிடவில்லை இவர்களின் அட்டகாசம். அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோ, மோட்டார் சைக்கிள் என்பவற்றிற்கும் தீ வைத்து நாசப்படுத்திவிட்டு தமிழ் தொழிலாளர்களின் ஏழு வீடுகளுக்குள் புகுந்து பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்ததுடன் அந்த வீடுகளுக்கும் தீ வைத்து எரித்துள்ளனர்.

இதில் ஒரு வேதனை என்னவென்றால் சம்பவம் தொடர்பாக தகவல் தெரிவிக்கப்பட்டு அங்கு வந்த பொலிஸார் [illegible] கைது செய்யவோ, நிலைமையைக் கட்டுப்படுத்தவோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலிஸாரின் முன்னிலையிலேயே சிங்களக் காடையர்கள் வீடுகளுக்குத் தீ வைத்தனர். ஆனால் பொலிஸார் கண்டும் காணாதது போல் இருந்தனர் என பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

ஒரு சீருடை அணிந்த சிப்பாய் ஒருவரை 'சேர்' என்று அழைக்க மறுத்த தமிழர்கள் மீது இப்படித் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதைத் தட்டிக் கேட்க எவரும் இல்லை.

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரும் பக்கச்சார்பாகவே செயல்படுகின்றனர்.

- தமிழ் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்குள் அத்துமீறிப் பிரவேசித்தல்.
- 20 பேர் கொண்ட சிங்களக் காடையர் குழு ஒன்றை தோட்டத்திற்குள் அழைத்து வந்தமை.
- 'சேர்' என்று அழைக்க மறுத்த தமிழ் இளைஞர்களைக் காட்டு மிராண்டித்தனமாகத் தாக்கியமை.
- உடைமைகளை சூறையாடியமை, சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தமை.
- தமிழ் தொழிலாளர்களின் குடியிருப்புகளை தீ வைத்து எரித்தமை.

இவை அனைத்தும் அந்த சிங்களச் சிப்பாயின் தலைமையில் வந்த குண்டர்களினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை மட்டுமல்ல சட்டவிரோதமான செயல்களாகும்.

சித்திரைப் புத்தாண்டை சந்தோசமாகக் கொண்டாட வேண்டிய நிலையில் ஒரு தனி மனிதனால் உருவாக்கப்பட்ட வன்முறை அப்பாவித் தமிழ் தொழிலாளர்களையே பாதித்துள்ளது. இதற்கு நீதித்துறை காணப் போகும் தீர்வு என்ன.

இப்படியான நிலைமை இனிமேலும் தொடரக் கூடாது. சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்படவேண்டும். தமிழ் மக்கள் சிறுபான்மையாக வாழும் பகுதிகளில் அவர்களுடைய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உரிய நட்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அப்போது தான் நாடும் நாட்டின் தலைவரும் எதிர்பார்க்கும் நல்லிணக்கம் ஏற்படும். இல்லையேல் அது கேள்விக்குறியாகவே தான் இருக்கும்.


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரே இரவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்று கூறுகின்றார். அதனை ஒரே இரவில் ஏற்படுத்த முடியாது என்றாலும் நாட்டில் பரவலாக ஆங்காங்கே இடம்பெறும் இனவன்முறைகளைத் தடுப்பதன் மூலமும், சட்ட விரோதக் கும்பல்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதின் மூலமும் படிப்படியாக அந்த உறவை ஏற்படுத்த முடியும் அல்லவா என்று கேட்கின்றனர் மக்கள். இது நியாயமான கேள்விதானே?

> சுமார் 20 சிங்கள இளைஞர்களுடன் தோட்டக் குடியிருப்புக்குள் நுழைந்து தன்னை "சேர்" என்று அழைக்க மறுத்த இளைஞனையும் ஏன் இப்படி வம்புக்கு இழுக்கின்றீர்கள் என்று நியாயம் கேட்ட மற்றும் ஒரு இளைஞனையும் காட்டு மிராண்டித்தனமாகத் தாக்கி உள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் துயர் கசியும் வரலாறு!





சரித்திரத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட பாலியல் கொடுமைகள் குறித்த பல பதிவுகள் உள்ளன. சரித்திர ஏடுகளில் அவை காணப்படுகின்றன.

4000 ஆண்டுகளுக்கு முன் எகிப்திய நாகரீகத்தில் ஒரு சம்பவம் நடந்தது. எகிப்து நாட்டை ஆட்சி செய்யும் மன்னனை பாரோ என நாம் அழைப்போம். பாரோ என்றால் ஆண்டவன் எனப் பொருள்படும். மன்னனை கடவுள் என ஏற்க மறுத்த பெண்ணை, பேழையில் வைத்துக் கொதிக்கும் நீரில் விட்டு, வேகவைத்துக் கொலை செய்தார்கள். தன்னைக் கடவுள் எனக் கருதும் ஒரு ஆணால் தண்டனை கொடுக்கப்பட்டு, மற்றொரு ஆணின் கையில் கொலையுண்டு போகிறாள் கொடூர முறையில்!

எகிப்திய சரித்திரத்தில் மீண்டும் இக்கொடூரம் ஏற்பட்டது. இம்முறை இரண்டாம் ராம்சேஸ் எகிப்திய பாரோவாக இருக்கிறான். அவன் ஒரு கொடுங்கோலன். ராம்சேஸின் மனைவியான ஆஸியா அவனை எதிர்த்த காரணத்தால் அவளுக்கு பல கொடுமைகளை விளைவிக்கிறான். ஆஸியாவை சிறைபிடித்துக் கொடுமை செய்கிறான். கடைசியாக குத்துயிரும் கொலை உயிருமாய் இருந்த அவள் மார்பில் ஈட்டியை எய்தி கொல்கிறார்கள்.

மனிதனுக்கு சிந்தனைத் திறன் இருந்தும் அவன் உணர்ச்சிக்கே அதிகமாக இடம் கொடுக்கிறான். நாம் நாகரீகத்தில் எவ்வளவோ வளர்ச்சியடைந்து இருப்பினும் பெண்களுக்கெதிரான கொடுமைகள் நடந்த வண்ணமே உள்ளன. மனிதர்களிடையே பாசம், நேசம், அன்பு என அனைத்தும் குருட்டு நம்பிக்கைகளாகவே இருக்கின்றன.

நம் மூதாதையர்களின் அணுக்களின் தாக்கம் இருப்பதாலோ என்னவோ நம்மில் இன்னமும் பழமையின் எண்ணக் கோடுகள் உள்ளன. ஆண்களிடையே இவள் பெண்தானே என நினைக்க வைக்கும் சொற்ப எண்ணமும், பெண்களிடையே நாம் பெண்தானே என்ன செய்துவிட முடியும் எனும் தாழ்வு மனப்பான்மையும் காணப்படுகிறது.

கிரேக்க நாகரீகத்தில் ஏறக்குறைய கி.மு 850 முதல் 480க்குள் பரவலாக நடந்த சம்பவம் உள்ளது. அக்காலகட்டத்தில் பெண் குழந்தைகளைக் கொலை செய்வது சாதாரண ஒன்றாக இருந்தது. ஏதென்ஸ் மக்கள் பெண் என்பவளை ஒரு மதிப்பற்ற பொருளாகவே கருதினார்கள். பெண்களை பாலியல் அடிமைகளாகவும், குழந்தைகளை பெற்றுப் போடவும் மட்டுமே பயன்படுத்திக் கொண்டார்கள்.

கிரேக்கர்களின் பார்வையில், பெண்ணானவள் வீட்டு வேலை செய்பவளாகவும், திருமணம் செய்து பிள்ளை பெற்றுக்கொள்பவளாகவும் மட்டுமே தெரிந்தாள். கிரேக்க அரசாங்கமும் பெண்களை நாட்டின் சுமை எனக் கருதியது. இதற்குக் காரணம் பெண்களால் போரிட முடியாமல் இருந்தது. அரசாங்கத்தை தேர்வு செய்ய ஓட்டு போடும் உரிமையும் பெண்களுக்கு இல்லை. இது போக, சொத்துகளை வாரிசு வகிக்கும் தகுதியும் பெண்களுக்கு இல்லை. டெல்பியில் இருந்த 6000 குடும்பங்களில் 1 சதவிகிதத்திற்குக் குறைவான பெண்களே இருந்தார்கள்.

முன்னொரு காலத்தில் அரேபிய மக்கள் பண்பினால் மிகவும் பின்தங்கி இருந்தார்கள். அவர்களை ஜாஹிலியா காலத்து மக்கள் எனக் கூறுவார்கள். ஜாஹிலியா காலத்து ஆண்கள் மிகக் கொடூரமானவர்களாகவும், ஒழுக்கம் கெட்டவர்களாகவுமே இருந்திருக்கிறார்கள். பெண்களை தங்களது காம இச்சையைத் தீர்க்கும் போகப் பொருளாகப் பயன்படுத்தினார்கள்.

அவர்களின் உடல் பசியை தீர்த்துக் கொண்ட பின் அப்பெண்ணை அடித்துத் துன்புறுத்துவார்கள். பல இன்னல்களுக்குப் பிறகு அப்பெண்ணிற்கு மிக மலிவான பணத்தைக் கொடுப்பார்கள். அப்பணம் அவளது ஒருவேளை உணவை வாங்குவதற்கே போதுமானதாக இருக்கும். அடுத்த வேளை உணவுக்காக அவள் மீண்டும் ஆணை நோக்கி போவாள். உடலை விற்பனை செய்து, கூடவே வேதனைகளையும் வாங்கிக் கொண்டு பணம் புரட்டுவாள்.

தனது சந்ததியினர் இப்படிப்பட்ட இழி நிலையினால் பாதிப்படையாமல் இருக்க வேண்டும் என்பதையே பெற்றோர்களும் நினைப்பார்கள். அதனால் தங்களுக்கு பிறக்கும் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்துவிடுவார்கள்.

கி.மு 580களில் சீன தேசம் கம்பூசியஸ் மதத்தின் ஆதிக்கத்தில் இருந்தது. அக்காலகட்டத்தில் பெண்களை உயிருடன் புதைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். நாட்டின் முக்கிய தலைவர்கள் இறந்து போவாராயின் அவர் மனைவியை புதைக்க மாட்டார்கள். மாறாக அப்பெண்ணின் தொப்புள் முதல் தொடை வரை இரும்பு கவசங்களைக் கொண்டு பூட்டிவிடுவார்கள். தனது வாழ்நாள் முழுவதும் வரை அப்பெண் மற்ற ஆடவரோடு எந்தத் தொடர்பும் ஏற்படுத்திக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதன் பொருட்டு இப்படி செய்வார்கள்.

ஜேக் தீ ரிப்பர் பல மர்மக் கொலைகளை செய்த ஆசாமி. 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய அரசாங்கத்திற்குத் தலைவலி கொடுத்ததில்லாமல் மக்களையும் பீதியில் ஆழ்த்தியவன். யார் இவன்? ஜேக் விலைமாது பித்தன் என அறியப்பட்டான். இவனே நவீன சரித்திரத்தில் முதன் முதலாக பல மர்மக் கொலைகளைச் செய்தவனாகவும் கருதப்படுகிறான். பெண்களை அனுபவித்த பின் அவர்களின் உடல் உறுப்புகளை துண்டு துண்டாக நறுக்கி போட்டுவிடுவான்.

இதனை அடுத்தாற் போல் எட்வட் கெய்ன் என்பவனும் பெண்களுக்கெதிராக பல கொடூரக் கொலைகளை செய்திருக்கிறான். அவற்றுள் இரண்டு மட்டுமே நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இவனது மர்மமான வாழ்வை அடிப்படையாகக் கொண்டு தீ சைக்கோ மற்றும் சைலன்ஸ் ஆப் தீ லேம்ப் எனும் இரு ஆங்கிலப் படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

கேய்ன் இறந்த பெண்களை தோண்டி எடுத்து அவர்களின் உறுப்புகளை வெட்டி தனது அழகு சாதனமாக வைத்துக் கொள்வானாம். அவன் பிடிபட்ட சமயம் பெண்களின் மர்ம உறுப்புகளை கொண்டு அவன் உருவாக்கிய பல அழகு சாதனப் பொருட்களையும் காவல் துறையினர் கைப்பற்றியுள்ளார்கள். ஜேக் மற்றும் கேய்ன் இருவரும் பைத்தியக்காரர்களாக இருந்தாலும் அவர்களின் செயல்கள் பெண் வர்க்கத்தினருக்கு பெரும் கேடாகவே கருதப்படுகிறது.

முதல் மற்றும் இரண்டாம் உலக போர் காலகட்டத்தில் பெண்களின் நிலையை சற்று அலசி பார்த்தோமேயானால் சோகத்தின் சாயல் அங்கும் ஒட்டி இருப்பதைக் காணலாம். பெண்களின் நிலை கேவலப்படுத்தப்பட்டிருப்பது மிகவும் வேதனைப்பட செய்கிறது. பல நூறு சீன, கொரிய மற்றும் பிலிப்பைன்ஸ் தேச பெண்கள் ஜப்பானிய இராணுவத்தின் காமப் பசிக்கு ஆளாகி இருக்கிறார்கள். கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் அதிகம் பாதிக்கப்பட்டது சீனர்களே. இதற்குக் காரணம் சீனர்கள் மீது ஜப்பானியர்களுக்கு இருந்த தனிப்பட்ட விரோதமே யாகும்.

போரில் ஈடுபடுவது இராணுவமாக(ஆண்கள்) இருந்தாலும் அதில் பெரும் பாதிப்பு பெண்களுக்கே உரித்ததாய் அமைந்தது. பிள்ளைகளுடன் கைவிடப்பட்ட தாய் வறுமையில் வாடினாள். அப்படிப்பட்ட தாய்மார்கள் கொலையுண்ட போது அவர்களின் பிள்ளைகளும் தவிப்புக்குள்ளாகினர்.

1993ஆம் ஆண்டு பொஸ்னியாவில் நிகழ்ந்த இன ஒழிப்புப் போர், செச்னியாவில் 1994ஆம் ஆண்டும் மற்றும் 1996ஆம் ஆண்டு கோசோவோவில் நடந்த போர்களிலும் பெண்களே மிகவும் பாதிக்கப்பட்டனர். இதற்குக் காரணம் தான் என்ன? பெண்கள் அழிக்கப்பட்டால் சந்ததியினர் உருவாவதை தடுக்க முடியும் என்ற எண்ணமே முக்கிய காரணமாகும்.

இப்போர்களின் சமயம் பெண்கள் மீது வெடி குண்டெறிந்தார்கள், கர்ப்பிணிகளாய் இருந்தவர்களை உதைத்தார்கள், அவர்கள் வயிற்றைச் சுட்டும் வெட்டியும் கொன்று போட்டார்கள். உதாரணமாக பொஸ்னிய போரின் போது பல பொஸ்னிய பெண்களை சைபீரியர்கள் கற்பழித்தார்கள். பிறக்கும் குழந்தையின் உடலில் சைபீரியர்களின் இரத்தமும் கலந்திருக்க வேண்டும் என்ற இன வெறியே இதற்குக் காரணம்.

இந்தியாவில் தமிழ் நாட்டில் சில கிராமப் பகுதிகளில் வரதட்சணை பிரச்சினை அதிகமாக இருந்தது. ஏழ்மை நிலையில் இருப்பவர்கள் தங்களுக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளை கொலைசெய்துவிடுவார்கள். பிறக்கும் குழந்தைகளுக்கு விவசாய உரமோ அல்லது நெல் மணிகளோ கொடுப்பார்கள், முகத்தை ஈரத் துணியால் மூடிவிடுவார்கள், கழுத்தை நெறித்தும் அல்லது பசியால் வாட வைத்தும் சாக விட்டுவிடுவார்கள்.

சீன தேசத்தில் குடும்பத்திற்கு ஒரு குழந்தை எனும் சட்டம் அமுலப்படுத்தப்பட்ட போது பெண் சிசு கருக் கலைப்பு அதிகம் நடந்தது. கருவிலேயே சாகடிக்கப்பட்ட சிசுவை சீன உணவகங்களுக்கு மருத்துவ உணவு செய்யும் பொருட்டு விற்பனை செய்துவிடுவது கொடுமையிலும் கொடுமை.

2002ஆம் ஆண்டு ஜுன் மாதம் பாக்கிஸ்தானில் பஞ்சாப் மாநிலத்தில் தனது சகோதரன் ஒரு உயர் ஜாதி பெண்ணுடன் ஓடி விட்டான் என்ற குற்றத்திற்காக முக்தார் எனப்படும் தாழ்த்தப்பட்ட ஜாதி பெண்ணை உயர் ஜாதி ஆண்கள் பலர் ஒன்று கூடி கற்பழித்திருக்கின்றார்கள்.

இப்படியாக சரித்திரம் தொட்டே பெண்களுக்கெதிரான கொடுமைச் செயல்கள் நடந்து வந்திருக்கிறது. இப்போது நவநாகரிக உலகில் நாம் வாழ்ந்து வந்தாலும் பாலியல் கொடுமைகள் ஆங்காங்கே நடந்த வண்ணமே உள்ளன. மனதின் ஏதோ ஒரு மூலையில் லேசாக ஒட்டிய பயத்துடனே பெண்கள் வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள் எனக் கூறினால் மிகையாகாது. பெண்கள் பொம்மை எனக் கருதுவதைத் தவிர்க்க வேண்டும். அவர்களும் உலக வாழ்க்கையின் முக்கிய அங்கமெனக் கருதப்பட வேண்டும். நம் குடும்ப உறுப்பினராகவும், உறவினராகவும் பார்க்கப்பட வேண்டும். மதிக்கப்பட வேண்டும்.

நாமும் ஒரு தாயின் வயிற்றில் தான் பிறந்திருக்கின்றோம் என்பதை நினைவு கொள்ளவேண்டும்.

☆ ☆ ☆

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பித்தன் பதில்கள்

## பெண் எப்போது பெருமைக்குரியவள் ஆகிறாள்?



க.சிவராம்,
கொழும்புத்துறை.
**கேள்வி:** அதிகாரிகளுக்கும் 'பார்ட்டி' வைத்து மகிழ்வித்து அவர்கள் மூலம் தமது தேவையை நிறைவேற்றுவித்துக் கொள்பவர்கள் குறித்து உங்கள் கருத்தென்ன பித்தரே?
**பதில்:** பயன் கருதிச் செய்யும் எத்தகைய உபசாரமும் கைச் சத்தின் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய ஒன்றே.

பூ. குணநாயகி,
கிளிநொச்சி.



**கேள்வி:** பெண்ணடிமை என்பது குறித்து இப்போதெல்லாம் அதிகமாகப் பேசப்படுகிறதே?
**பதில்:** இப்போதெல்லாம் பெண்களின் அடிமைகள் தான் ஆண்கள் என்பதே யதார்த்தம். ஏதோ முன்னரெல்லாம் ஆண்கள் பெண்களை அடக்கி ஒடுக்கி அதிகாரம் செய்ததாகப் பேசப்பட்ட துண்டு.

இ. ரகு,
வவுனியா,
**கேள்வி:** கணவன்- காதலன், எங்கே ஒப்பிடுங்கள் பார்க்கலாம்?
**பதில்:** முன்னையது மூக்கணாங்கயிறு மாட்டிய வண்டில் மாடு. மற்றையது கால் கட்டுப் போடாத காளை.

அ. அருட்பிரகாசம்,
மன்னார்.
**கேள்வி:** பித்தரே உலகில் மிகக் கஷ்டமானதும் சுலபமானதும் எது?
**பதில்:** மற்றவர்கள் காதில் பூச்சுற்றுவது; ஏமாந்த சோணகிரியாக இருந்தால் வெற்றி சுலபம். மாறாக புத்திசாலியாக இருந்து விட்டால் முதலுக்கே நஷ்டம் தான்.

உ.உதயபாலன்,
**கேள்வி:** தத்தமது மனைவிமாரின் பெயரில் கதை எழுதும் எழுத்தாளர்கள்பற்றி?



**பதில்:** ஒரு சிலர் தமது மனைவிமாரின் பெயரைப் புனைபெயராக வைத்துக் கொண்டு கதை எழுதுகிறார்கள். வேறு சிலரோ மனைவிமாருக்கே கதை விடுகிறார்களே?

ப. அன்பரசி,
கொழும்பு 06.
**கேள்வி:** ஒரு பெண் எப்போது பெருமைக்கு உரியவளாகிறாள்?
**பதில்:** சந்தேகமே வேண்டாம், ஒரு குழந்தைக்குத் தாயாகும் போதே அவள் பெருமையடைகிறாள்.

இ.புண்ணியமூர்த்தி,
மட்டக்களப்பு.
**கேள்வி:** ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் திருமணம் அவசியம் தானா பித்தரே
**பதில்:** ஒருவனுக்கு ஒருத்தி என்பதை வலியுறுத்துவதற்கான ஒரு உலகை ஒழுங்கு இது. என்ன. நல்ல மனைவி வாய்த்தால் வாழ்க்கை சிறக்கும். ஏறுக்கு மாறாய் அமைந்தால் ஞானம் பிறக்கும். அவ்வளவே

ஆ. இராசையா,
சுன்னாகம்.



**கேள்வி:** பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை இம்மூன்றின் சபலத்துக்கும் மனிதன் அடிமையாகக் கூடாதாமே பித்தரே?
**பதில்:** இவற்றில் ஒன்று தானும் இல்லாதவன் இந்த உலகத்தில் உயிர் வாழ்ந்து தான் என்னத்தைக் கண்டு விடப்போகிறான்?

வ.கண்ணன்,
மூதூர்.
**கேள்வி:** சொறுப்பாய் இடக்கு முடக்காய் நடந்து கொள்கிற மனைவியை ஒரு கணவன் எந்த அளவுக்குக் கண்டிக்கலாம்?
**பதில்:** அந்த இடக்கு முடக்கு மனைவி தமக்குள்ளான உறவைத் துண்டிப்பது குறித்து சிந்திக்க விடாத விதத்தில்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 518

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | |
| 6 | | ■ | 7 | | | | ■ |
| 8 | | 9 | | ■ | 10 | | 11 |
| ■ | 12 | | ■ | 13 | | ■ | |
| 14 | | | 15 | | ■ | 16 | |
| 17 | | ■ | 18 | | 19 | | ■ |
| 20 | | 21 | | ■ | 22 | | 23 |
| | ■ | 24 | | | | ■ | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

01. வெள்ளம் பாய வீதிகளுக்குக் குறுக்கே அமைக்கப்படுவது.
02. பருத்த சரீரத்தை உடைய விலங்கு. (பலவற்றுக்கு ஒற்றைக் கொம்பு தான் இருக்கும்)
03. பல தரப்புப் பிரதிநிதிகளும் ஒன்று கூடி குறிப்பிட்டதொரு விடயம் குறித்து ஆராயும் சந்திப்பு.
04. புதினம்
05. பசுவின் குட்டி
09. ஓரிலக்கம்
11. நடு
13. ஆம் அல்ல
14. நாட்டிய வகைகளில் ஒன்று
15. அழிந்து போதல்
16. கன்னை
19. ஒரு கையிலும் ஒரு காலிலும் சேர்ந்து இது பத்து
21. பதுக்கப்படாத
23. உலக அதிசயங்களில் ஒன்று சாய்ந்த கோபுரம்

### இடமிருந்து வலம்

01. காந்தியை இப்படித்தான் அழைப்பர்
04. உலோகத் தட்டு
06. குளிர்மையைக் குறிக்கும்
07. கணவன்
08. மூன்று பக்கமும் கடலால் சூழ்ந்த நிலப்பகுதி
10. மிடி
12. தொட்டால் அதிர்ச்சி தரும். சில சமயம் சாவு நிச்சயம்.
13. மமனை
14. வாடிந்து போகுதல்.
16. குத்து விழுவது இப்படியாமே!
17. அமைய
18. இது அறுபத்து நான்கு. இதற்கு விழா எடுப்பார்கள்.
20. மகாகவி
22. தேவலோகத்து ஆடலழகியருள் ஒருத்தி
24. சுமந்து செல்லல்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 518

சொற்சிலம்பம் 518 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு மே 06ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் இல [illegible] ஆம் இதழ் [illegible] பிரசுரமாகும். [illegible]

[illegible] பரிசாக ரூபா 2500உம் இரண்டாவது பரிசாக ரூபா 1500 உம் மூன்றாவது பரிசாக ரூபா 1000 உம் வழங்கப்படும். [illegible]

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி வாரஇதழ், அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 515 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.தேகப்பியாசம், 02.சதி, 03.வரைபு, 04.மைதானம், 05.அக, 06.துன்பம், 09.மர்மர், 11.வசம், 13.தாசன், 15.வதி, 17.கனிதல், 20.நாழிகை, 21.கனிறு, 23.சமா

**இடமிருந்து வலம்**

01.தேசவழமை, 05.அது, 07.கதிரை, 08.தமகன், 10.புவனம், 12.ரீதா, 14.சம்பவம், 16.பரசகம், 18.ரதி, 19.சன்னி, 20.நாம், 22.தகழி, 23.சனி, 24.[illegible]

## போட்டி இல. 515 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு**
எஸ். ஜெயச்சந்திரராசா,
இல 8, 1ம் ஒழுங்கை,
விநாயகபுரம், வவுனியா.

**2 ஆம் பரிசு**
வேதராசா இந்துமதி,
டச்றோட்,
சித்தன்கேணி.

**3 ஆம் பரிசு**
சந்திராணி தங்கத்துரை,
வட்டவிதானை வீதி, பெரியநீலாவணை,
இல -01 A, கல்முனை.

## பாராட்டுப் பெறுவோர்

(1) எஸ். றொபேட்,
இல-114 1/1, நியூநாம் குயர்,
கொழும்பு -13
(2) கரவை சி. மணிமொழியார்,
பூம்பொழில், திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.
(3) எஸ். செல்வராஜ்,
இல.91/1, பிரதான வீதி,
கொழும்பு -11.
(4) ஜி. சத்தியபாரதி,
இல.86/15, பன்விலா வீதி,
வத்தகாமம்.
(5) திருமதி. எஸ். ஞானம்,
இல.11-5/1 சென் லோரன்ஸ் வீதி,
வெள்ளவத்தை,கொழும்பு -6
(6) யோ.விக்டர் அரவிந்தன்,
வல்லை வீதி, தொட்டிலடி.
(7) செல்வன் திருக்குமரன் நாகேந்திரன்,
இல.11-3/1, நெல்சன் இடம்,
வெள்ளவத்தை, கொழும்பு -06
(8) இ.வீரசிங்கம்,
இல.9/2, இராசதுரை வீதி,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.
(9) திருமதி. எம் . ஜெயசோதி,
இல.93-2/5, பீட்டர்சன் வீதி,
கொழும்பு -06.
(10) பா. நடராஜா,
இல.03, செட்டியார் தெரு,
கொழும்பு -11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவிலேயே அதிக சம்பளம் வாங்கும் நடிகை பிரியங்கா

# 9 கோடி

நடிகை பிரியங்கா சோப்ராவின் சம்பளம் இதுவரை எந்த நடிகையும் வாங்காத அளவுக்கு உயர்ந்துள்ளது. அவரின் சம்பளம் ரூ. 9 கோடியாகும். இதன் மூலம் இந்தியாவிலேயே அதிக சம்பளம் வாங்கும் நடிகையாகியுள்ளார்..தமிழ் சினிமாவில் விஜய் ஜோடியாக தமிழன் படத்தில் நடித்தவர் பிரியங்கா சோப்ரா. பாலிவுட்டின் முன்னணியாகியாகவும் இவர் உள்ளார். ஜன்ஜீர் என்ற இந்திப் படத்துக்கு ரூ.9 கோடி சம்பளத்தில் அவரை ஒப்பந்தம் செய்துள்ளனர். இதன் மூலம் இந்திய அளவில் அதிக சம்பளம் வாங்கும் நடிகைகள் பட்டியலில் முதல் இடத்தை பிடித்துள்ளார். இந்தியில் முன்னணி நடிகைகளாக உள்ள கத்ரீனா கைப், கரீனா கபூர், தீபகா படுகோனே போன்றோர் சராசரியாக ரூ 2.5 கோடி முதல் ரூ.4 கோடி வரை சம்பளம் பெறுகின்றனர். பரியங்காவும் இதுவரை இவர்கள் வாங்கும் சம்பளத்தைதான் பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஐஸ்வர்யாராய் தமிழில் வெளியான எந்திரன் படத்திற்கு ரூ. 6 கோடி தீான் வாங்கினார். இதுதான் ஒரு இந்திய நடிகைக்கு வழங்கப்பட்ட அதிக பட்ச சம்பளமாக இருந்தது அதை தற்போது மிஞ்சிவிட்டார் ப்ரியங்கா சோப்ரா.





## அக்காவை சுரண்டும் தங்கை

பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ராவின் தங்கை பரினீதி சோப்ரா. உறவு வகையில் அவர் பிரியங்காவின் தங்கை. பிரியங்காவை தொடர்ந்து பரினீதியும் நடிக்க வந்துள்ளார். அவர் நடித்த லேடீஸ் திண் ரிக்கி பஹ்ல் படத்திற்காக அவருக்கு சிறந்த புதுமுக நடிகைக்கான பிலிம்பேர் விருது கிடைத்துள்ளது. அவரின் அடுத்த படமான இஷக்சாதே விரைவில் வெளிவருகிறது.

இந்நிலையில் பரினீதி கூறுகையில், கவர்ச்சியாக இருக்கும் பிரியங்காவுக்கு அருகில் நிற்க ஒரு மாதிரியாக உள்ளது என்று கூறியுள்ளார். இதை கேட்ட பிரியங்காவுக்கு கோபம் வந்துவிட்டது.

இது குறித்து அவர் கூறுகையில்,

அவள் கன்னத்தில் ஒரு அறை விட வேண்டும். முதலில் அவளை இழுத்துக்கொண்டு போய் ஜிம்மில் விட வேண்டும். அவள் இது போன்று பேசியது நான் கேட்டதேயில்லை. அவள் துடிப்பானவள், அழகானவள். அது எங்கள் குடும்பத்தில் உள்ள ஒன்று என்றார்.

## விலைமாதர்கள் சர்ச்சை;
## பாதுகாப்பு வீரர்கள் மீது கடும் நடவடிக்கை – ஒபாமா

பாதுகாப்பு பணிக்குச் சென்ற தனது பாதுகாப்பு வீரர்கள் ஹொட்டலுக்கு விலைமாதர்களை அழைத்து சென்ற விவகாரம் குறித்து கண்டிப்பான விசாரணை நடத்தப்படவேண்டும் என அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கூறியுள்ளார்.

அமெரிக்கா அதிபர் ஒபாமா அண்மையில் கொலம்பியா சென்றார். அப்போது அவரது பாதுகாப்பு பணிக்கு சென்ற பாதுகாப்பு வீரர்கள், தாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு விலைமாதர்களை அழைத்து சென்றது தெரியவந்ததை தொடர்ந்து அவர்கள் திரும்ப அழைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இந்த இராணுவ வீரர்களிடம் தீவிரமாகவும், கண்டிப்பான முறையிலும் விசாரணை நடத்தப்படவேண்டும் என ஒபாமா கூறியுள்ளார். மேலும் அவர், வீரர்கள் மீதான புகார் உண்மையாக இருக்கும் பட்சத்தில் தான் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என்றும் கூறியுள்ளார்.




## நகை விளம்பரத்துக்கு ஐஸ்வர்யா ராய் ஒப்பந்தம்; 2 ஆண்டுக்கு 20 கோடி

பிரசவத்திற்கு பிறகு தற்போது மெதுவாக பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஆரம்பித்துள்ளார் ஐஸ்வர்யா ராய் விரைவில் இந்தி படமொன்றில் நடிக்கப்போகிறார் என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் கல்யாண் ஜுவல்லர்ஸின் விளம்பரங்களுக்கு ஐஸ்வர்யா ராய் பச்சன் புதிய ஒப்பந்தம் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதற்காக அவர் பெறவிருக்கும் சம்பளம் ரூ. 20 கோடி. அதிக காலமாக இருப்பவர் முன்னாள் பிரபஞ்ச அழகி சுஷ்மிதா சென். அவரது ஒப்பந்தம் விரைவில் முடிகிறது. இதையடுத்து புதிய ஒப்பந்தத்தின் மூலம் ஐஸ்வர்யாவை தேர்வு செய்துள்ளனர் கல்யாண் ஜுவல்லர்ஸ்.

2 ஆண்டு ஒப்பந்தத்திற்கு ஐஸுக்கு கிடைக்கும் சம்பளம் ரூ.20 கோடி ஆகும். வருடத்திற்கு ரூ.10 கோடி சம்பளம்.



## நைஜீரியாவில் 70 ஆயிரம் குழந்தைகளுக்கு எச்.ஐ.வி.

நைஜீரியாவில் புதிதாக பிறந்த 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் எச்.ஐ.வி.யுடன் பிறந்திருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியா, எண்ணெய் வளம்மிக்க நாடுகளுள் ஒன்று.

இந்நாட்டில் சமீபத்தில் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையம் நடத்திய ஆய்வில் தென்கிழக்கு மாகாணங்களான ஒகூன், ஈடோகோ ஆகிய பகுதிகளில் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. பாதிப்பு இருந்துள்ளது. அதுமட்டுமின்றி கர்ப்பமான பெண்கள் சிலரை பரிசோதித்ததில் அவர்களுக்கும் எச்.ஐ.வி. பாதிப்புகள் பெருமளவு இருந்துள்ளது.

இதைத்தொடர்ந்து அப்பகுதிகளில் கடந்த சில மாதங்களாக ஆய்வு மேற்கொண்டதில் 70 ஆயிரத்திற்கும் அதிகமான பிறந்த குழந்தைகளுக்கும் எச்.ஐ.வி. பாதிப்பு உள்ளதாக அரசு வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.இவற்றை தவிர போதிய மருத்துவசதியின்றி பெண்கள் குழந்தைகளுக்கு காசநோய், மலேரியா உள்ளிட்ட நோய்களால் பாதிப்பிற்குள்ளா [illegible] தெரியவந்துள்ளது.

## அமெரிக்க அணுசக்தி கப்பலில் கமல்

இந்தோனேசியாவில் அண்மையில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டு சுனாமி வரும்..வரும்...வந்துவிடும்.. என்று ஊடகங்கள் அலறிக் கொண்டிருந்த நேரம்... கடலோர கிராமங்கள் எச்சரிக்கையாக தவித்துக் கொண்டிருந்த தருணம்...நடுக்கடலில்.. சென்னை கடற்பரப்பில் இருந்து 200 மைல் தொலைவில். சொகுசுக் கப்பலில் விருந்தில் கலந்து கொண்டிருந்தார் உலக நாயகன் கமல்ஹாசன்.

சென்னை அருகே முகாமிட்டுள்ள அமெரிக்காவின் அணுசக்தி கப்பலான ஒசாமா கப்பல் யுஎஸ்எஸ் கார்ல்வின்ஸ் கப்பலில் நடந்த விருந்தில்தான் கமல்ஹாசனும் பங்கேற்றிருந்தார்.. அமெரிக்க போர்க் கப்பலில் நடைபெற்ற விருந்துக்கு அழைக்கப்பட்ட முதல் இந்திய நடிகரும் கமல்தான்!

உலகமே சுனாமி சுனாமி என்று கத்திக் கொண்டிருந்த நேரத்தில் கப்பலில் இருந்த எனக்கு அது பற்றி எதுவுமே தெரியவில்லை என்கிறார் கமல்.

கமல் தமது புதிய படமான விஸ்வரூபத்தில் சர்வதேச அமைதி மற்றும் புலனாய்வு தொடர்பான விஷயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. படத்தின் பெரும்பகுதி அமெரிக்காவில் படம்பிடிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Costa Rica இல் அமைந்துள்ள இந்தக் ஹோட்டலுக்கு Costa Verde என்று பெயரிடப்பட்டுள்ளது. விடுமுறையை உற்சாகமாகக் கழிக்க நினைப் பவர்களுக்கு இதை விட வேறு ஏதும் இருக்க முடியாது.

எப்போதும் விமானத்தில் பறந்தபடியே தங்களது விடுமுறையை சந்தோச மாகக் கழிக்க நினைப்பவர்களுக்கு இந்தக் ஹோட்டல் பெரிய வரப்பிரசாதமாக அமையும். இந்த வினோத ஹோட்டல் ஆனது காட்டின் நடுவே அமைந்துள்ளது. குறித்த விமானத்தின் வடிவமைப்பானது Boeing 727 ரக விமானத்தின் வடிவமைப்பை ஒத்தது.

இந்தக் ஹோட்டலின் உருவாக்கத்துக்கு பிரபல Forbes Magazine தான் காரணம் எனத் தெரிய வந்துள்ளது. இது ஒரு வித்தியாசமான ஒரு வகையான உலகம் என்று குறித்த ஹோட்டலின் உரிமையாளர் கூறினார்.



திருமண ஒப்பந்த நிறுவனமான பாரத் மேட்ரி மோனியல் சார்பில் திருமண ஆல்பம் ஒன்று தயாரிக்கப்பட்டு கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

16 பக்கங்களுடன் ஆயிரம் கிலோ எடையுடன் 4 ஆயிரத்து 300 சதுர அடி பரப்பளவுடன் 13 அகலம் மற்றும் 17 அடி நீளத்துடன் இந்த திருமண ஆல்பம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த 2008ம் ஆண்டு ஜூன் 10 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட ஜான்சன்ஸ் பேபி ஆல்பமே சாதனையாக இருந்து வருகிறது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு வித்தியாசமாக கொண்டாடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதற்காக 15 பேர் கொண்ட குழுவினர் சுமார் ஆயிரத்து 600 மணி நேரம் செலவழிக்கப்பட்டு இரண்டு வார கால உழைப்பில் இவை தயாரிக்கப்பட்டுள்ளது.






UTHAYAN

Guest House - II

No. 12, Sivagurunathar Lane,
Off Kasthuriyar Road, Jaffna.

T.P: 021 – 2222330,
021 – 5677603, 071 - 5 36 36 36

Spend your Holidays with homely hospitality in Jaffna. Located ½ KM from the Jaffna town. Double, Triple & Family rooms available. A/C and Non A/C with attached bathrooms and TV. Meals provided on request.



Uthayan

Guest House - I



Spend your Holidays with homely hospitality in Jaffna. Located 1 KM from the Jaffna town. Double, Triple & Family rooms available. A/C and Non A/C with attached bathrooms and TV. Meals provided on request.

No. 392/6, Navalar Road, Jaffna.

021 - 2225660, 021 - 5677608, 071 - 5 36 36 36


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷாருக்கானுக்கு அவமரியாதை; மன்னிப்பு கோரியது அமெரிக்க தூதரகம்!



யேல் பல்கலைக்கழக நிகழ்ச்சியொன்றில் பங்கேற்க பாலிவுட் நடிகர் ஷாருக் கான் தனியார் விமானத்தில் அமெரிக்கா சென்றிருந்தார். மன்ஹாட்டனிலிருந்து 53 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஒயிட் பிளெய்ன்ஸ் விமான நிலையத்தில், குடியேற்ற அதிகாரிகளால் அவர் 2 மணி நேரத்துக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டார். பின்பு இந்தியத் தூதரகம் தலையிட்டு அவரை விடுவித்தது.

இச்சம்பவம் தொடர்பாக தனது கடுமையான அதிருப்தியைத் தெரிவித்ததுடன் அமெரிக்காவிடம் விளக்கமும் கேட்டது இந்தியா.

இதற்கு அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் மன்னிப்புக் கடிதம் ஒன்றை வழங்கினர்.


ஆனால், இதுபோன்ற விவகாரங்கள் தொடரக் கூடாது. இந்த விவகாரத்தை அமெரிக்க உயரதிகாரிகளிடம் கொண்டு செல்லப்போவதாகவும் இந்தியா தெரிவித்திருக்கிறது.

### கிருஷ்ணா கண்டனம்

இது குறித்துப் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தடுத்து வைப்பதும் பின்பு மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுமே அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது. இது தொடரக் கூடாது என்று தெரிவித்திருந்தார்.

ஒரே நபருக்கு இதுபோன்று தொடர்ந்து நடப்பதும், பின்பு தூதரக அதிகாரிகள் தலையிட்டவுடன் மன்னிப்புக் கேட்பதும் போதுமானது அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அமெரிக்க தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் பீட்டர் ரூமேன், அமெரிக்கர்கள் நிறைய பேர் இந்தியத் திரைப்படங்களுக்கு ரசிகர்களாக உள்ளனர். சிறந்த நடிகரான ஷாருக்கானை மதிக்கின்றனர். இனி இவ்வாறு நடக்காமல் பார்த்துக் கொள்கிறோம் என்றார்.



பாகிஸ்தானின் கராச்சி நகரில் இந்தக் குழந்தை பிறந்துள்ளது. இம்ரான் ஷேய்க் என்ற இக்குழந்தை நலமுடன் இருப்பதாக பாகிஸ்தான் வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 70 வயதில் 6 ஆவது திருமணம்

## அசத்தும் தென் ஆபிரிக்க அதிபர் ஜேக்கப் ஜூமா



கடந்தவாரம்தான் தனது 70ஆவது பிறந்த நாளை தனது மனைவிகள் புடை சூழ கொண்டாடினார் ஜூமா. அவருக்கு ஏற்கனவே நடந்துள்ள 5 திருமணங்கள் மூலம் 21 குழந்தைகள் உள்ளன.

தற்போது 6ஆவது முறையாகத் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் ஜூமா. அவரது மனைவியாகப் போகிறவர் போங்கி நெகமா. இருவரும் ஏற்கனவே சேர்ந்துதான் வாழ்ந்து வருகின்றனர். இருவருக்கும் ஒரு குழந்தை கூட உள்ளது. தற்போது அதிகாரப்பூர்வமாக போங்கியை மணக்கப் போகிறார் ஜூமா.

தென் ஆப்பிரிக்காவின் ஜூலு கலாச்சாரப்படி ஒருவர் எத்தனை திருமணம் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். அந்த பாரம்பரியப்படிதான் அடுத்தடுத்து திருமணம் செய்து அசத்திக் கொண்டிருக்கிறார் ஜூமா.

அடுத்த வாரம் நிகந்தலா என்ற இடத்தில் போங்கிக்கும், ஜூமாவுக்கும் பாரம்பரிய முறைப்படி கல்யாணம் நடைபெறவுள்ளது. போங்கியின் முழுப் பெயர் குளோரியா போங்கி நெகமா என்பதாகும்.

போங்கி மூலம் ஜூமாவுக்கு 3 வயதில் மகன் உள்ளான். கடந்த வருடம் ஜூமா பிரான்ஸுக்குப் போனபோது அவருடன் மனைவியாக இணைந்து சென்றவர் போங்கிதான்.

அதிபர் பதவிக்காலத்தில் ஏற்கனவே 2 முறை திருமணம் செய்துள்ள ஜூமா, தற்போது 3ஆவது முறையாக கல்யாணக் கோலம் தரிக்கிறார்.

இவரது முதல் மனைவி பெயர் சிசகாலே குமாலோ. 1959 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். அதன் பின்னர் நொம்புமெலலோ மந்துலி ஜூமா, தொபேகா ஸ்டேசி மபிஜி ஆகியோரை மணந்தார்.

உள்துறை அமைச்சராக இருந்த நாகசோனா டிலாமினியை 1998 ஆம் ஆண்டு விவாகரத்து செய்தார். அவரது இன்னொரு மனைவியான காதே ஜூமா 2000 ஆம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டார்.

ஜூமாவின் தந்தைக்கு 2 மனைவிகள். அதில் 2 ஆவது மனைவிக்குப் பிறந்தவர்தான் ஜூமா.

ஒவ்வொரு மனைவிக்கும் தனித் தனியாக வீடு கட்டிக் கொடுத்துள்ளார் ஜூமா என்கிறார்கள். புதிதாக மணக்கப்போகும் நெகமாவுக்குத்தான் தனியாக வீடு இல்லையாம். புதிதாக கட்டி வருகிறார்கள் என்று தெரிகிறது. மேலும் அதிபர் மாளிகையில் ஆறு பேருக்கும் தனித் தனி படுக்கை அறை உள்ளதாம். அந்த ஆறு அறைகளுக்கும் போக சுரங்கப் பாதைகளைத்தான் ஜூமா பயன்படுத்துகிறார் என்றும் கூறுகிறார்கள்.

# டைட்டானிக் சுவாரசியம்

ஜூரிச் நகரத்தைச் சேர்ந்த ஆண்டோன் கிங், இவர் மூன்றாம் வகுப்புப் பயணியாக டைட்டானிக் கப்பலில் பயணம் செய்தவர்.

டைட்டானிக் கப்பல் மூழ்கிக் கொண்டிருப்பதை அறியாத இவர் தன் அறையை விட்டு வெளியே வந்து பார்த்துள்ளார். அப்பொழுது பலரும் பெரிய பெரிய ஐஸ் கட்டிகளை கொண்டு கால்பந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்தனர்.

விசாரித்ததில் இவர்கள் பயணிக்கும் டைட்டானிக் கப்பல் மீது பனிப் பாறை மோதிய தகவல் கிடைத்தது. அந்தப் பாறையின் துகள்களைக் கொண்டு தான் கால்பந்து விளையாடியதும் கிங்கிற்கு தெரியவந்தது.

பலரும் கிங்கிடம் டைட்டானிக் மூழ்கவே மூழ்காது என்று திட்டவட்டமாகக் கூறினர். இச்சம்பவம் நடந்தது (14.4.1912) நூறாண்டுகளில். கிங், தன் மனைவி மற்றும் நான்கு வயது மகனுடன் இந்தக் கப்பலில் பயணம் செய்தார். கப்பல் மூழ்கினாலும் இம்மூவரும் பிழைத்துவிட்டனர். பின்பு இவர் தான் பயணச் சீட்டு வாங்கிய முகாமைக்கு 20 பக்கக் கடிதம் ஒன்றை எழுதினார்.

கிங்கின் கடிதத்தை அண்மையில்தான் சுவிஸ் டைட்டானிக் நிபுணர் கூண்டெர் பாப்லெர் கண்டுபிடித்துள்ளார். அந்தக் கடிதத்தின் சில பகுதிகள் சுவிஸ் செய்தித்தாள் ஒன்றில் வெளிவந்துள்ளன.



# பிள்ளை, குட்டி பெத்துகிட்டு கட்டிக்கலாமா....?

திருமணம் செய்துகொள்ளாமல் கடந்த 7 ஆண்டுகளாக ஒன்றாக குடும்பம் நடத்தி வரும் ஹாலிவுட் நடிகர் பிராட் பிட்டுக்கும், நடிகை ஏஞ்சலினா ஜூலிக்கும் நிச்சயதார்த்தத்தம் முடிந்துள்ளது.

ஹாலிவுட் நடிகர் பிராட் பிட்டும (48), நடிகை ஏஞ்சலினா ஜூலியும் (36) கடந்த 7 ஆண்டுகளாக திருமணம் செய்துகொள்ளாமலேயே குடித்தனம் நடத்தி வருகின்றனர். பிட் தனது காதல் மனைவி ஜெனிபர் அனிஸ்டனுடன் இருந்தபோது அவரது வாழ்க்கையில் நுழைந்தவர் ஜூலி. இவர் நுழைந்ததால் அனிஸ்டன் வெளியேறினார். பிராட் பிட், அனிஸ்டனை முறைப்படி விவாகரத்து செய்துவிட்டு ஜூலியுடன் செட்டில் ஆகி விட்டார். ஆனாலும் இருவரும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. கல்யாணம் செய்து கொள்ளாமலேயே குடும்பம் நடத்தி, ஒரு பெண் குழந்தை, இரட்டைக் குழந்தைகள் என்று 3 குழந்தைகளை பெற்றுள்ளனர். இது போக, மேலும் 3 குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்து வருகின்றனர். இந்நிலையில் ஜூலி மறுபடியும் கர்ப்பமாக உள்ளார். அதுவும் இரட்டைக் குழந்தைகள் என்று கூறப்படுகிறது.

இப்படி குழந்தைகள் அதிகரித்துக் கொண்டு போன நிலையில், இரண்டு பேருமே கல்யாணம் செய்து கொள்ளுங்கள் என்று பிராடையும், ஜூலியையும் அவர்களது குழந்தைகள் நச்சரிக்க ஆரம்பித்தனர்.

இதையடுத்து தான் அவர்கள் நிச்சயதார்த்தம் செய்து கொண்டுள்ளனர். நிச்சயதார்த்த மோதிரத்தை பிராட் பிட்டே டிசைன் செய்துள்ளார். எமரால்ட், வைரம் பதித்த அந்த மோதிரத்தின் விலை ரூ. 1,28,25,725 ஆகும்.

அவர்கள் நிச்சயம் செய்து [illegible] திருமணத் திகதி குறிப்பிடவில்லை. ஒரு வழியாக அம்மாவும், அப்பாவும் நிச்சயம் செய்து [illegible] நிம்மதியடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பொக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2012, ஏப்ரல் 22 ஆம் திகதி வெளியிடப்பட்டது.